மஞ்சரி

MAHARAJAH SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY
RECEIVED.
3 - MAR. 1951
TANJORE

விக்ருதி - பங்குனி

நிர்ப்பந்தம் பலிக்குமா?
வாசனை வசியம்
முனை உடைந்த கத்தி
புதுமையான கல்லூரி
கோடை மழை (சிறுகதை)
பாரிஸ் கூனன் (நாவல்)

-6-
அணா

ஆண்டவன் காப்பார்

வானத்துக் குருவிகளைப் பாருங்கள். அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதுமில்லை. அவைகளையுங்கூட ஆண்டவன் பாதுகாக்கிறார். அவைகளைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா?

—ஏசுநாதர்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்னம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்	கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி	'குமுதினி'
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி	கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி	'ஆர்வி'
கௌரி அம்மாள்	மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 4] [இதழ் 4

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

சீனாமீது நிர்ப்பந்தம் பலிக்குமா?

தாமஸ் ஜே. ஹாமில்டன்

'கொரியாவில் ஆக்ரமித்த நாடு' என்று சீனாவை ஐ. நா. சபை குற்றம் சாட்டிவிட்டது. அடுத்தபடி என்ன? நிர்ப்பந்த நடவடிக்கைகள் எடுப்பார்களா? அதுபற்றிய நிலைமையை விளக்கி, பிப்ரவரி 10 - ஆம் தேதி இந்த லேக் ஸக்ஸஸ் நிருபர் இதை எழுதியிருக்கிறார்.

கம்யூனிஸ்ட் சீனாமீது 'ஸாங்ஷன்ஸ்' என்ற நிர்ப்பந்த நடவடிக்கைகளை ஐ. நா. சபை இனி விதிக்கக்கூடும். ஆயினும் லேக் ஸக்ஸஸ் நகரில் கூடியிருக்கும் ஐ. நா. சபைப் பிரதிநிதிகள் இதுபற்றி உற்சாகம் கொள்ளவில்லை. அந்த நடவடிக்கைகளை விதிக்க எப்படியும் ஒரு மாத காலம் ஆகும் என்பதில் பல பிரதிநிதிகளுக்குச் சந்தோஷம். கொரியாவில் 'தற்காலிக யுத்தநிறுத்தம்' ஏற்படுவதற்குச் சீனாவுடன் ஏதாவது சமரசம் சாத்தியமா என்பதை, அந்த ஒரு மாத காலம் வரைக்கும் ஐ. நா. சபையின் சமரச (குட்-ஆபீஸஸ்) கமிட்டி ஆராய்ந்துகொண்டிருக்கப் போகிறது. 'தற்காலிக யுத்த நிறுத்தம்' சாத்தியமில்லாது போனால்தான் நிர்ப்பந்த நடவடிக்கை விதிப்பார்கள்.

'தற்காலிக யுத்த நிறுத்த ஏற்பாட்டுக்குச் சீனக் கம்யூனிஸ்ட்



—ப்ளெட்சர், 'ஸிபூ ஸிட்டி ஜர்னல்

மூலம்: நியூ யார்க் டைம்ஸ் (ஆங்கிலம் : 11-2-'51), நியூ யார்க், ஐக்கிய அமெரிக்கா,

சர்க்கார் இணங்காது' என்றே சில பிரதிநிதிகள் எண்ணுகிறார்கள். 'ஒரு மாதத்துக்குள் கொரியாவில் ஐ. நா. படைக்கு விசேஷ வெற்றிகள் கிடைத்தாலொழியக் கம்யூனிஸ்ட் சீனு வழிக்கு வராது' என்று பலர் எண்ணுகிறார்கள். என்ன நிர்ப்பந்த நடவடிக்கைகளைக் கம்யூனிஸ்ட் சீனுமீது விதிப்பது என்ற விஷயத்தை ஐ. நா. சபையின் 'கூட்டு நடவடிக்கை' (கலெக்டிவ் மெஷர்ஸ்) கமிட்டி இப்போதே ஆராயும்படி செய்ய ஐக்கிய அமெரிக்கா மட்டும் முயன்று வருகிறது.

இரண்டு விதமான நிர்ப்பந்த நடவடிக்கைகளைத்தான் அநேகமாக விதிக்கலாம்:

(1) **ராஜதந்திர ரீதியானது:** 'கம்யூனிஸ்ட் சீனுவுக்குத் தங்கள் ராஜீயப் பிரதிநிதிகளை அனுப்பி எவ்வித உறவும் வைத்துக்கொள்ள வேண்டாம்; ஏற்கனவே அப்படி உறவு வைத்துக்கொண் டிருப்பவை அதைக் கைவிட வேண்டும்' என்று ஐ. நா. சபையின் அங்க நாடுகளைக் கேட்டுக்கொள்ளலாம்.

(2) **பொருளாதார ரீதியானது:** 'கம்யூனிஸ்ட் சீனுவுடன் எந்த விதமான வர்த்தகமும் செய்ய வேண்டாம்; அது முடியாதென்றால், யுத்தத்துக்கு உதவக் கூடிய சரக்குகளையாவது கம்யூனிஸ்ட் சீனுவுக்கு அனுப்பாதிருக்க வேண்டும்' என்று ஐ. நா. சபையின் அங்க நாடுகளைக் கேட்டுக் கொள்ளலாம்.

ராஜதந்திர உறவுகளைக் கைவிடுவதால் கம்யூனிஸ்ட் சீனுவுக்குத் தொல்லை ஒன்றும் விளைந்து விடாது. ஏதோ ஒரு கண்டன அடையாளமாகத்தான் அது உதவும். அதனுல் மாவோ-ட்ஸே-டுங் சர்க்கார் கவிழ்ந்துவிடாது. தவிர, கம்யூனிஸ்ட் சீனுவுடன் வைத்திருக்கும் உறவைக் கைவிட, ஸோவியத் சர்க்கார் ஒரு நாளும் இசையாது; இந்தியாவும் அநேகமாக இசையாது; நார்வே, டென்மார்க், ஐஸ்லாந்து, ஸ்வீடன் ஆகிய ஸ்காண்டிநாவியன் நாடுகளும் ஐ. நா. சபையில் சேராத ஸ்விட்ஜர்லாந்தும் இசையுமெனத் தோன்றவில்லை.

பொருளாதார ரீதியான நிர்ப்பந்த நடவடிக்கைகள் கொஞ்சம் தொல்லை விளைக்கக்கூடியவைதான். என்றாலும், முன்னே முஸோலினிமீது நிர்ப்பந்த நடவடிக்கைகளைச் சர்வதேசச் சங்கம் (லீக் அவ் நேஷன்ஸ்) விதித்ததே, அதில் என்ன பலன் விளைந்தது? பெட்ரோலியம் எண்ணெயைத் தவிர மற்ற யுத்தச் சரக்குகளை இதாலிக்கு விற்கக்கூடாதென்று சர்வதேசச் சங்கம் தீர்மானித்தது. இந்த நிர்ப்பந்தத்தைக் கண்டு எதியோபியப் படையெடுப்பை முஸோலினி கைவிட்டு விடவில்லை. இப்போது கம்யூனிஸ்ட் சீனுமீது பொருளாதார நடவடிக்கைகளை எடுத்தாலும், இப்படித்தான் பயன்படாமல் போகும் என்று சில ஐ. நா. பிரதிநிதிகள் எண்ணுகிறார்கள்.

சீனுவில் உள்நாட்டு யுத்தங்கள் நடந்தபோதும் சரி, நடக்காதபோதும் சரி; பல வருஷ காலமாக அதனுடன் வேறு எந்த நாட்டையும் விட மிக அதிகமாக வர்த்தகம் செய்துவந்த நாடு ஐக்கிய அமெரிக்கா. மிகச் சமீப காலமான 1948-இல்கூட சீனுவின் அயல் நாட்டு வர்த்தகத்தில் 37 சத விகிதம் அமெரிக்காவின் பங்காக இருந்தது. ஹாங்காங் 19 சத விகித

மும் இங்கிலாந்து 10 சத விகித முந்தான் சீன வர்த்தகத்தில் பங்கு கொண்டிருந்தன. இந்தியா நாலாவது ஸ்தானமும் ஜப்பான் ஐந்தாவது ஸ்தானமும் வகித்திருந்தன.

கம்யூனிஸ்ட் சீனவின் அயல்நாட்டு வர்த்தகம்பற்றி இப்போது ஐ. நா. சபை வெளியிட்டிருக்கும் புள்ளி விவரத்தைப் பார்க்கும்போது, பெரிய மாறுதல் தென்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவின் பழைய முதல் இடத்தை இப்போது ஹாங் காங் பெற்றிருக்கிறது. 1950 முதல் பத்து மாதங்களில் ஹாங் காங் மூலமாகக் கம்யூனிஸ்ட் சீனவில் இறக்குமதியான பொருள்களின் மதிப்பு 18 கோடியே 60 லட்சம் டாலர்; அதிலிருந்து ஏற்றுமதியான பொருள்களின் மதிப்பு 11 கோடியே 79 லட்சம் டாலர். கம்யூனிஸ்ட் சீனவுக்கு வரும் எல்லாப் பொருள்களும் ஹாங் காங்கிலேயே உண்மையில் உற்பத்தியாகிவிடவில்லை. பல வெளிநாட்டுச் சரக்குகள்தான் ஹாங் காங் துறைமுகத்தில் இறங்கி, கம்யூனிஸ்ட் சீனவுக்கு வந்து சேருகின்றன.

சென்ற வருஷத்தின் கடைசி மாதங்களில், ஐக்கிய அமெரிக்க சர்க்கார் விதித்த தடைகளால், கம்யூனிஸ்ட் சீனவில் அமெரிக்க வர்த்தகம் நின்றே போயிற்று. கம்யூனிஸ்ட் சீனவின் வர்த்தகத்தில் ஹாங் காங் இதனல் இன்னும் அதிகமாய்முக்கியத்துவம்பெற்றுவிட்டது.

ஜப்பானின் வெளிநாட்டு வர்த்தகத்தைக் கண்காணிப்பவர் ஜெனரல் மக்ஆர்த்தர்தான். ஆகவே, கம்யூனிஸ்ட் சீனவுடன் ஜப்பானிய வர்த்தகத்தில் ஏதோ சில தடைகளை அவர் விதித்திருப்பதாய்த் தெரிகிறது.

இந்த வர்த்தகத்தையெல்லாம் நிறுத்திவிட வேண்டும் என்று ஐ. நா. சபை ஏன் தீர்மானிக்கக் கூடாது? பிரிட்டனும் அதன் காலனிகளும் ஹாங் காங்குடன் செய்யும் வியாபாரத்தையெல்லாம் நிறுத்திவிட்டாலும், பிரான்ஸ் அப்படிச் செய்யுமா என்பது சந்தேகம். ஏனென்றல், இந்தோ-சீனவில் தனக்கு விளைந்திருக்கும் தொல்லையால் ஏற்கனவே அது அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தியா தன் வியாபாரத்தை நிறுத்துமா என்பதும் சந்தேகந்தான். ஸோவியத் யூனியன் வசமுள்ள ஸகாலின் என்ற தீவிலிருந்து கடல்வழியாக இப்போதே கம்யூனிஸ்ட் சீனவுக்குக் கொஞ்சம் எண்ணெய் கிடைத்துக்கொண்டிருக்கிறது. வேறு பல பொருள்கள் தரை மார்க்கமாகவே அதற்குப் போய்ச் சேருவதாய்த் தோன்றுகிறது. கம்யூனிஸ்ட் சீனவின் எல்லை மிக நீளமாயிருப்பது, இதற்கு வசதியாக இருக்கிறது. எது எப்படியானலும் சரி; ஸோவியத் யூனியன் உள்பட ஐ. நா. சபையில் இருக்கும் எல்லா நாடுகளுமே கம்யூனிஸ்ட் சீனமீது பொருளாதார பகிஷ்காரத்தைச் சுமத்த இசைந்தாலுங்கூட, ஜீவாதாரமான இன்னும் ஓர் இடம் பாக்கியிருக்கிறது. போர்ச்சுகீஸியருக்குச் சொந்தமான மக்காவோ என்ற தீவு இருக்கிறது. அதன் துறைமுக வழியாக ஏற்கனவே கம்யூனிஸ்ட் சீனவுடன் ஏராளமான வர்த்தகம் நடந்துகொண்டிருக்கிறது.

ஆகவே, பொருளாதார ரீதியான நிர்ப்பந்த நடவடிக்கைகள் விதிப்பது, கம்யூனிஸ்ட் சீனவிடம் பலிக்குமென்று தோன்றவில்லை. அப்படி விதித்தால், ஸோவி

யத் யூனியனுடன் கம்யூனிஸ்ட் சீனுவின் தொடர்புதான் இன்னும் பலமாய்ப் போய்விடும்.

பொருளாதார பகிஷ்காரத்தால் சீனக் கம்யூனிஸ்ட் சர்க்கார் கவிழவும் கவிழாது, அதற்குப் பெருஞ் சிரமமும் ஏற்படாது என்று ஐ. நா. சபைப் பிரதிநிதிகள் ஒப்புக்கொள்ளுகிருர்கள். ஆயினும், கொரியாவிலும் அதற்கப்புறம் இந்தோ-சீனு முதலிய இடங்களிலும் கம்யூனிஸ்ட் சீனு ஆக்கிரமிப்பதற்கு நாம் எவ்வளவு உபத்திரவம் விளைக்க முடியுமோ அவ்வளவும் விளைக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிருர்கள்.

இதனுல், 'கம்யூனிஸ்ட் சீனுமீது நேரே நடவடிக்கை எடுக்கும் எண்ணத்தைக் கைவிட வேண்டும்; கொரியாவிலிருந்து சீனக் கம்யூனிஸ்டுகளை அடியோடு விரட்டுவதிலேயே முழுக் கவனமும் செலுத்த வேண்டும்' என்று அவர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள். போரில் முக்கியமான வெற்றிகளை அடைந்தால்தான், 'தற்காலிக யுத்த நிறுத்த' ஏற்பாட்டுக்குக் கம்யூனிஸ்ட் சீனுவை இணங்கவைக்க முடியும் என்றும் அவர்கள் கருதுகிருர்கள்.

ஆகவே, ஐ. நா. சபையில் உள்ள ஒவ்வொரு நாடும் அதிகத் துருப்பு, அதிக விமானப் படை, அதிகக் கடல் படை ஆகியவற்றை உடனே கொரியாவுக்கு அனுப்பும்படியும், இது முடியாதவை மற்ற வகைகளிலெல்லாம் உதவும்படியும், அங்க நாடுகளையெல்லாம் கூட்டு நடவடிக்கைக் கமிட்டி வற்புறுத்த வேண்டும் என்று அவர்கள் வாதிக்கிருர்கள்.

நீக்ரோவின் பிரார்த்தனை

அமெரிக்காவில் சமய மகாநாடு ஒன்று நடந்தது. தம் குழந்தைகளுக்குள் எந்த விதமான வேற்றுமையும் பாராட்டாமல், எல்லார் வேண்டுகோளுக்கும் கடவுள் செவி சாய்க்கிருர் என்று காட்டுவதற்காகப் பலவகையினரையும் அங்கே பிரார்த்தனை செய்யச் சொன்னுர்கள். அவர்களில் ஒரு நீக்ரோவும் இருந்தார். அவருடைய வெகு உற்சாகமான பிரார்த்தனை இதுதான்:

"ஆண்டவரே, தங்களுடைய இந்த ஊழியனுக்குக் கழுகுக் கண்ணும் ஆந்தை ஞானமும் அருளுங்கள். வானத்தின் நடுவில் உள்ள டெலிபோனேடு இவனுடைய ஆத்மாவைப் பிணையுங்கள். விண்ணிலுள்ள சூரியன் இவன் நெற்றியில் ஒளி வீசட்டும். மக்கள்மீது அன்பு இவன் இதயத்தில் நிரம்பி வழியட்டும். இவன் கற்பனை கர்ப்பூர வாசனை வீசட்டும். இவன் உதட்டில் புலாவின் பசை இருக்கட்டும். உங்கள் சம்மட்டி அடியைப் போல இவனைக் கிளப்பி விடுங்கள். உங்கள் வசன மின்னலால் இவன் மூளைக்கு மின்சாரம் ஊட்டுங்கள். இவன் புஜத்தில் என்றென்றும் ஓயாது இயங்கும் வலிமை இருக்கட்டும். வெடி மருந்தின் மகிமையால் இவனை நிரப்புங்கள். கிரோஸின் எண்ணெயை இவன் உடலெங்கும் அபிஷேகம் செய்து, இவனைக் கொளுத்தி விடுங்கள்! ஆமென்!"

—'இந்தியன் ரெவ்யூ'

பரிதி மாநகர்

- காம்பனல்லா கண்ட கனவுலகம் -

மண்ணை விண்ணாக்கும் ரசவாதத்தை நாடிய அறிஞர் பலர், இலக்கியக் கற்பனை உலகங்களைப் படைத்திருக்கிறார்கள். அவைகளின் சாரத்தை இங்கே தொடர்ச்சியாக விளக்கி வருபவர் ஸ்ரீமான் ரா. ஸ்ரீ. தேசிகன். 'மஞ்சரி' முந்திய இதழ்களில் மோரின் 'யுடோப்பியா,' பேக்கனின் 'புதிய அட்லாண்டிஸ்' இரண்டும் முறையே வெளிவந்தன.

காம்பனல்லா (Campenella), பேக்கன் (Bacon) இரண்டு பேரும் சமகாலத்தினர். பேகனின் 'புதிய அட்லாண்டிஸ்' தோன்றிய அதே ஆண்டிலேயே காம்பனல்லாவின் 'பரிதி மாநகரு'ம் உதயமாயிற்று. காம்பனல்லா ஓர் இதாலியர். இதாலி நாட்டில் கலப்பிரியா என்ற ஜில்லாவிலுள்ள ஸ்டில்லோ என்ற ஊரில் 1568-ஆம் ஆண்டு பிறந்தார். மோர் (More), பேக்கன் (Bacon) இரண்டுபேரும் பாதிரித் தொழிலில் இறங்க ஆசை கொண்டார்கள். ஆனால் அவர்களின் ஆசை பலிக்கவில்லை. காம்பனல்லாவோ ஒரு டொமினிகன் பாதிரியானார். அவர் ஆழ்ந்த தத்துவ ஞானி; பேராசிரியர். பீஸா (Pisa), படுவா (Padua) முதலிய கல்லூரிகளில் பேராசிரியராகப் பதவிகள் வகித்தார். அவர் ஒரு பொதுவுடைமைக்காரர்; புரட்சிக்கொள்கை கொண்டவர். தம் தத்துவத்துக்காக, லட்சியத்துக்காக, விரிந்த கனவுக்காகக் கொடிய இன்னல்களை இன்புறத் தழுவினார். தம் வாழ்க்கைப் பாதையில் கணக்கில்லாத இன்னல்கள் குறுக்கிட்டும், வாழ்க்கைக் கசப்பைத் தாம் மண்டிக் குடித்தும், மக்களிடத்தில் அவருக்கு நம்பிக்கை குன்றவில்லை; தேயவில்லை. ஒரு காலத்தில் அவர்கள் பூரணத்துவம் அடைவார்கள் என்ற நம்பிக்கை அவரிடத்தில் வேரூன்றி நின்றது. சிறையின் செறிந்த இருட்டிலே இந்தப் பரிதி மாநகர் உதயமாயிற்று என்றால், அவருடைய அயர்விலா நம்பிக்கையை என்ன என்று சொல்வது! நுண்ணிய அறிவோடு, பழுத்த உலக அநுபவமும் அவருக்குக் கிடைத்தது. தம் கனவுகளை உருவாக்கக் கூடிய பேராற்றல் அவருக்கு வாய்த்திருந்தது. பாதிரித் தொழில் நடத்தினாலும் குறுகிய நோக்கம் படைத்தவரல்ல. வெறும் சம்பிரதாயச் சுவட்டில்மட்டும் செல்ல அவருக்கு விருப்பமில்லை. ஒரு சமயம் அவர், "கொடுங்கோலாட்சி, சொல் மயக்கம், நயவஞ்சகம் இந்தத் தளைகள் அனைத்தையும் அறுக்கவே நான் பிறந்தேன்" என்று ஆரவாரம் செய்திருக்கிறார். அவர் பிறந்த காலம், அறிவு அரசாட்சி புரியும் மறு மலர்ச்சிக் காலம். அதனால், பேக்கன் வகுத்த பௌதிக மனப்பண்பையே, தமக்கும் ஆதாரமாக அவர் அமைத்துக்

கொண்டார். சமுதாய அமைப்புக்கு அறிவையே அஸ்திவாரமாகக் கொண்டார். தாம் கண்ட கனவைப் 'பரிதி மாநகர்' என்ற தம் நூலில் மிக நேர்த்தியாக அமைத்திருக்கிருர். இந்த நூலைப் படிக்கும் போதெல்லாம் பிளேட்டோவின் (Plato) 'குடியரசு'ம் மோரின் (More) 'யுடோப்பியா'வும் நம் கண்முன் மிதந்து வரும். இந்தப் 'பரிதி மாநகர்' கிரேக்கக் குடியரசுக்கு இணையானது. மக்கிவெல்லி கருதியது போல், நகரத்துக்கு ஒரு சிறந்த தலைவன் வேண்டும்; அவனுக்குச் சர்வ உரிமைகளும் உண்டு. அந்த உரிமைகளையெல்லாம் நகரத்தின் சிறப்புக்கே அவன் அர்ப்பணம் செய்யவேண்டும். ஒரு ஞானிதான் நாட்டை அரசாள வேண்டும் என்று பிளேட்டோ சொன்னுர். இதே கருத்தைத்தான் காம்பனல்லாவும் வற்புறுத்துகிருர். நகரத்தலைவனுக்கு உற்ற துணையாக இருப்பவர் இந்த மூன்று பேர்: மிகுந்த ஆற்றல் படைத்தவர், செறிந்த அறிவுடையவர், பழுத்த அன்பு நெறியைத் தழுவியவர்.

அரசியல் அதிகாரிகளை மக்களில் தகுதி உள்ளவர் தேர்ந்தெடுப்பார்கள். தேர்ந்தெடுக்கும் உரிமை எல்லாருக்கும் இல்லை; கலைகளையும் சாஸ்திரங்களையும் அறிந்தவர்களுக்குத்தான் உண்டு. அரசியல் அமைப்பு, பணத்தை அடிப்படையாகக் கொண்டிராது. அறிவு மிக்க சான்றோருக்கே அதில் இடமுண்டு. காம்பனல்லாவுக்குப் பரம்பரையில் நம்பிக்கையில்லை. 'எட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்று கல்வியைத் தூஷிப்பவர்மீது, அவர் சீறி விழுவார். கல்வியே எல்லாவற்றுக்கும் ஆதாரமாய்த் திகழ்கிறது என்ற பேருண்மையில் அவர் மனம் வேரூன்றி நின்றது. சாதிச் சழக்கால் ஒருவனைப் போற்றுவதும், பெருங்குடியில் தோன்றினுன் என்பதற்காக ஒருவனை வணங்குவதும் காம்பனல்லாவின் கற்பனை நாட்டில் இல்லை. அறிவொளிக்கே அவா வணக்கம் செய்தார். எவர்கள் இளமை முதற்கொண்டே ஒரு துறையில் ஆற்றல் காட்டிவருகிருர்களோ அவர்களுக்கே அந்தத் துறையில் புக இடமுண்டு. நாட்டின் தலைவராக எல்லாரும் எளிதில் வர முடியாது. நாட்டின் தலைவன் நல்ல சாஸ்திரங்களைப் பரிசீலனை செய்திருக்க வேண்டும்; சட்டங்களை அமைப்பவர்கள் சரித்திரங்களில் திளைத்திருக்க வேண்டும்; விஞ்ஞானக் கடலில் மூழ்கியிருக்க வேண்டும்; புவி நூல், வான நூல், கணிதம், சோதிடம் இவைகளிலும் தக்க பயிற்சி அடைந்திருக்க வேண்டும். காளிதாசன் கண்டது போல் மக்களின் படிப்பு அரசியலின் அலுவலாகும். குழந்தைகளைச் சரிவரப் பாதுகாக்க மக்களுக்குப் பெரும்பாலும் தெரிவதில்லை. ஆகவே, தங்கள் குழந்தைகளுக்கு மூன்று வயது ஆனவுடன் அவைகளை அரசாங்கத்தாரிடம் மக்கள் ஒப்படைத்துவிட வேண்டும். படிப்புக்குரிய விஷயங்களையெல்லாம் நகரத்தின் ஏழு சுவர்களின்மீது வரைந்திருப்பார்கள். புத்தகங்கள் தேவையில்லை. கண்ணுல் பார்த்தே, சிரமமின்றி இன்பமாய் அறிவைத் திரட்டிக் கொள்ளலாம். பௌதிகம், ரசாயனம், வைத்தியம், கணிதம், உலோகம், செடி கொடி, பறவை முதலியவைபற்றிப் போதிக்கக் கூடிய எல்லா விஷயங்களையும் அந்தச் சுவர்களில் பொறித்திருப்பார்கள். இப்போது கையாளும் 'பார்த்தறிதல்' (Visual educa-

tion) முறையைத் தம் தீர்க்க தரிசனத்தால் முந்நூறு வருஷங்களுக்கு முன்னமேயே காம்பனல்லா கண்டுவிட்டார்!

'பரிதி மாநக'ரில் எல்லாக் கலைகளையும் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே பயின்றார்கள். செருப்புத் தைப்பது, சமையல் வேலை, தச்சு வேலை, கன்னார வேலை, ஓவியம் வரைவது இந்த அனைத்தையும் அந்த நாட்டு மக்கள் பயின்றார்கள். மக்களில் ஒவ்வொருவருடைய தனித்திறமையையும் அவர்களுடைய ஏழாம் பிராயத்தில் சோதித்து அறிந்து அவரவருக்கு ஏற்ற துறையில் அவர்களைப் புகுத்துவார்கள். சமுதாயத்துக்கு அவர்கள் முழுதும் பயன்பட வேண்டும். அறிவுக் கூர்மையில்லாதவர்களைப் பயிர்த்தொழிலில் ஈடுபடச் செய்வார்கள். போர்த்துறையில் ஆண் பெண்கள் இருவருக்கும் இடம் உண்டு. பௌதிக சாஸ்திரத்தைப் படிப்பின் முக்கியப் பகுதியாக அங்கே கருதினார்கள். இதே சுருதியில்தான் பேக்கனும் பேசுகிறார்.

பிளேட்டோவின் 'குடியரசி'ல் குடும்பத்துக்கு இடமில்லை; சுய சொத்துக்கும் இடமில்லை. இந்தப் பரிதி மாநகரிலும் எல்லாச் செல்வமும் எல்லாருக்கும் உரியவையே. கலைகள், பொதுச் சிறப்புக்கள், கொண்டாட்டங்கள், திருவிழாக்கள் முதலிய எல்லாவற்றையும் எல்லாரும் சேர்ந்தே அநுபவிப்பார்கள். பெண்களுக்கு இல்லற வாழ்க்கை இல்லை; அவர்களும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான். குடும்பமற்ற நிலையிலே சொத்துரிமை வேரோடு மாய்ந்துதானே தீரும்? நகரத்தின் நன்மைக்கே எல்லாரும் பாடுபடுவார்கள். பல பிரிவுபட்ட ஜாதிகள் பரிதி மாநகரில் இல்லை. ஏழை, பணக்காரர் என்ற வேற்றுமை இல்லை. பணக்காரர்கள் உண்டு, எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தலாலே; ஏழைகள் உண்டு, தனக்கென்று ஒன்று இல்லாமையால். சூழ்நிலைக்குப் பரிதி மாநகர் மக்கள் அடிமைகளல்ல. சூழ்நிலை தான் அவர்களுக்குக் குற்றேவல் புரிகிறது.

பரிதி மாநகரில் மக்களெல்லாம் பொதுக் கட்டிடங்களில் வாழ்கிறார்கள். சேர்ந்தே உண்ணுகிறார்கள். உண்ணும்போது ஒரு பேரமைதி நிலவும். தம் தகுதிக்குத் தக்க வேலை கிடைத்தபடியால், ஒவ்வொருவரும் தாம் செய்யும் வேலைகளிலே ஓர் இன்பம் காண்கிறார். தினமும் நான்கு மணிக்கு மேல் எவருக்கும் வேலையில்லை. ஷாவும் ரஸ்ஸலும் இதே கருத்தை ஆமோதிக்கிறார்கள். மீதிப்பொழுதை மக்கள் நன்னெறியில் பயன்படுத்திக்கொள்கிறார்கள். உடல் வளர்ந்தது; உள்ளம் விரிந்தது; ஒவ்வொருவருடைய மனமும் ஓர் ஓவியக் கோயிலாகத் திகழக் கண்டார்கள். மோரின் நாட்டில் மக்கள் ஆறு மணி நேரம் வேலை செய்கிறார்கள். பிளேட்டோவின் குடியரசிலும் சரி, மோர் தந்த யுடோப்பியாவிலும் சரி அடிமைகள் இருந்தார்கள். அந்த அடிமைத் தொழில் பரிதி மாநகரில் இல்லை. அனைவரும் ஒருங்கு சேர்ந்து வேலை செய்ததால், அடிமைகளுக்கு அங்கே இடமில்லை. கூன், குருடு, செவிடு இவர்களுக்குங் கூட ஏற்ற அலுவல்களை அரசாங்கம் வகுத்துத் தந்தது; இவர்களுங்கூடச் சமுதாயத்துக்கு ஒரு பாரமாக இல்லை. கிழவர்களை அரசாங்கம் காப்பாற்றி வந்தது. எல்லாத் தொழிலும் கௌரவம் வாய்ந்தவையே. எல்லாரும் எல்லாத்

தொழிலும் நடத்துகிறபடியால் உயர்வு தாழ்வுக்கு இடமில்லை. சோம்பேறித்தனம் ஒரு பெருங் குற்றமாகும். தொழிலுக்கு வந்தனை செய்வோர் அந்த நாட்டு மக்கள். நூற்றல், நெசவு, தையல் முதலிய தொழில்கள் பெண்களுக்கே உரியவை. அந்த நகரில் நாணயத்தின் நடமாட்டமில்லை. பொன்னையும் வெள்ளியையும் மக்கள் போற்ற வில்லை. ஆனால் அவைகளால் சமைந்த பாத்திரங்கள் மிக உண்டு. அவை யாவும் மக்களின் பொதுச் செல்வமே. பொதுவுடைமை நகரானபடியால் அங்கே அதிகக் குற்றங்களில்லை. குற்றங்கள் இல்லாததால் சட்டதிட்டங்களும் மிகுதியாக இல்லை. தவறிச் சில குற்றங்கள் புரிந்தவரும் அதிகாரிகளிடத்தில் அவைகளை ஒப்புக்கொண்டால் அவர்களுக்குத் தண்டனை இல்லை. சிறைச்சாலை என்பதே அந்த நாட்டில் இல்லை.

ஆண் பெண்கள் கூடுவது இன்பத்துக்காக என்று அந்த நாட்டினர் கருதவில்லை. தகுந்த மக்கட்பேறு அடைவதற்காகவே அந்த நாட்டினர் மணம் புரிந்துகொண்டார்கள். மணச் சடங்குகள்கூடச் சமுதாயத்தின் அலுவலாகவே அமைந்திருந்தன. காதல் மணம் அரும்பித் தழைக்க அங்கே இடமில்லை. 'நாய்கள், குதிரைகள் இவைகளின் உற்பத்தியைக் கவனிக்கிற நாம் மக்கட் பேற்றைப் புறக்கணிப்பது தகுதியோ?' என்று காம்பனல்லா கேட்கிறார்.

சுகாதார இயல்பைப்பற்றி அவர் சொல்வது குறிப்பிடத்தக்கது. வைத்தியர்கள்தான் ஆகாரத்தை வகுத்துத் தரவேண்டும்; கிழவர், இளைஞர், நோயாளி என்ற வேற்றுமைகளை ஒட்டி அவரவருக்கு ஏற்றபடி உணவு தயாரிக்க வேண்டும். எல்லாருக்கும் சத்துள்ள உயர்ந்த ஆகாரமே கொடுக்க வேண்டும். ஆனால் அந்த உணவு அப்படியே சரீரத்தில் சார்ந்து விடும்படியாக அதைச் சமைத்திருக்க வேண்டும். மிகக் குளிர்ந்த பானங்களையோ மிக வெப்பமான பானங்களையோ அங்கே வழங்குவதில்லை. எங்கும் தூய்மை நிலவும். சமையல் அறையிலும் சரி, தொழிற்சாலையிலும் சரி மாசுக்கு இடமே இல்லை. நகரமெங்கும் நீர்க்குழாய்கள் உண்டு.

அந்த நாட்டினர் தேகப்பயிற்சி செய்வார்கள். பெண்களின் உடல் நலத்தையும் பேணினார்கள். காம்பனல்லாவின் கருத்துப்படி, நோய்களெல்லாம் தேகப்பயிற்சியில்லாததாலேயே தோன்றுகின்றன. தக்க பயிற்சிகளால் அவைகளை அங்கே நீக்க முடிந்தது; பல ஜுரங்களுக்கும் தனித்தனி மருந்துகள் உண்டு. காம்பனல்லாவின் காலத்தைநோக்கும்போது, சுகாதாரத் திட்டத்தில் அவர் ஒரு தீர்க்கதரிசியாகவே விளங்கியிருக்கிறார். குப்பை கூளங்களைப் பரிதி மாநகரில் வயல்களுக்கு வழங்கமாட்டார்கள். குப்பைகளின் தீய குணம் பயிர்களைச் சாரும் என்பது அவர்கள் கருத்து. 70 வயதுக்கு மேலேகூட உடலை வலிவோடு இருக்கச் செய்ய முடியும்; அதற்கேற்ற காயகல்பம் பரிதி மாநகர் மக்களிடம் இருந்தது. நூறு வயது அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இருநூறு வயதுகூட அவர்களில் பலர் வாழ்ந்தார்கள். பிணங்களை அவர்கள் புதைப்பதில்லை; எரித்துவிடுவார்கள்.

காம்பனல்லா பாதிரியாக இருந்தபடியால் கிறிஸ்துவ மதத்துக்குப் புறம்பாகச் செல்லவில்லை. அறிவு,

ஆற்றல், அன்பு இவைகளே பரிதிமா நகர் மக்கள் வணங்கும் தெய்வம். கிறிஸ்துவ மதாசாரியர்களே அவர் கள் போற்றி வந்தார்கள். இப்படிச் சம்பிரதாய முறையிலே காம்ப னல்லா சென்ருலும், தமக்கென்று ஒரு பாதையையும் வகுத்துக்கொண் டிருந்தார். மதத்தைக் காட்டிலும் அவருக்கு வான நூலில் அதிக நம்பிக்கை. நாள், நட்சத்திரம் பார்த்தே ஆண்களும் பெண்களும் கூடுவார்கள். எல்லாம் கிரகங்களின் சூழ்ச்சிகளே என்று கருதுகிருர் காம்பனல்லா. பரிதி மாநகரப் பாதிரி மார்கள் கூடக் கிரகபலனை ஆராய்ந்து நல்ல நாளில்தான் முதல் முதலில் தம் தொழிலை எற்றுக் கொள்வார்கள். திசைகளைத் தொழுதே தொழிலில் இறங்குவார் கள். நாள் நட்சத்திரங்களில் நம் நாட்டவருக்கு (இந்தியருக்கு) மிகுந்த நம்பிக்கை உண்டு. ஆண் பெண்கள் நல்ல வேளையில் கூடுவது ஒரு புனிதமான - மகத்தான - சிருஷ்டி காரியமென்று இந்துக் களின் உபநிஷத்துக்கள் முறையிடு கின்றன. இந்தக் கருத்தையே எட் வர்டு கார்ப்பெண்டர் என்பவரும் தமது 'சிருஷ்டிக்கலை' என்ற நூலில் வியந்து குறிப்பிட்டிருக்கிருர். காம்ப னல்லாவும் இதே சுருதியில் பேசு வது, நம் முன்ேனார்களின் பழுத்த ஞானத்தை உலகம் கேட்க முரசடிப் பது போல் இல்லையா? காம்ப னல்லா தம் நூலுக்குப் 'பரிதி மாநகர்' என்று பெயர் வைத்தது முற் றும் பொருந்தும். ஞானச்சுடராய் விளங்கும் வெய்யோனை வழிபடுவது கிரகங்களின் காரியந்தானே? சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், இன்னும் பல கிரகங்கள் இவைக ளின் ஊர்வலத்தில்தான் உலக நாடகம் நிகழ்ந்து வருகிறது என்ற கொள்கை உடையவராதலால், காம்பனல்லா தம் நூலுக்கு இந்தப் பெயரை வைத்திருக்கலாம்.

இன்று நமக்குத் தேவை—

குழந்தைகளைப் பயமுறுத்தாமல் அன்பு வழியில் அறி வூட்டும் பெற்றேர், தாங்கள் சொல்வதே வேதவாக்கென்று எண்ணுமல் மாணவர்களுக்குச் சுயபுத்தி வளரும்படி விட்டுக் கொடுக்கும் ஆசிரியர்கள், 'இதுதான் சித்தாந்தம்' என்று சொல்லி மக்களை மூடநம்பிக்கைக்குள் ஆழ்த்தாத குருமார், பொதுமக்களை ஆடுமாடுகள் போல் கருதாமல் தங்கள் எஜமா னர்களாக எண்ணும் மந்திரிகள், சில்லறை விஷயங்களில் ஈடு படாமல் நாட்டின் நலமே பெரிதென்று கருதும் தன்னல மற்ற தேசபக்தர்கள், துன்பம் நேர்ந்தபோதிலும் கண்ணிய மாக நடந்து தொண்டுபுரியும் வாலிபர்கள், பெண்களுக்குக் கொடூரம் இழைக்காமல் அவர்களிடம் அன்பும் ஆதரவும் காட் டும் ஆண்கள், தங்களைக் குழந்தை உற்பத்தி செய்யும் யந்திரங் களாக எண்ணுமல் புருஷனிடம் அன்பும் பக்தியும் கொண்ட பெண் மக்கள், பட்டம் பதவிகளை மதிக்காமல் நேர்மையாக வாழும் பிரபலஸ்தர்கள், வீண் சச்சரவுகளை விளம்பரப்படுத் தாமல் உண்மை விஷயங்களையே வெளியிடும் பத்திராசிரியர்கள் ஆகிய இவர்களே இன்று நம் நாட்டுக்குத் தேவை.

—லாலா லஜபதி ராய்

கார்ட்டூன் கதம்பம்

"காந்திக் குல்லாய் முக்கியம் அல்ல; அதற்குள்ளே இருப்பதுதான் முக்கியம்" என்கிறார் நேரு.

—'ப்ளிட்ஸ்'



மக்ஆர்த்தரைப் பீடித்திருக்கும் நோய்.

—'பயனீர்'



காமன்வெல்த் மகாநாட்டுக்குப் போய்விட்டுக் கராச்சி திரும்பிய லியாகத் அலிகான்.

—'ஓரியெண்ட்'



ஆசார்ய கிருபலானியின் சர்க்கஸ்.

—'ப்ரீ இந்தியா'

உவமைக் கதைகள்

ஆதாரத்துக்கேற்ற முடிவு

சூரியன் உதித்தான்.

குள்ளநரி தன் நீண்ட நிழலைப் பார்த்து, "இன்றைக்கு ஒட்டகம் கிடைத்தாலொழிய நம் பசி அடங்காது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டது.

காலை நேரம் முழுவதும் அது ஒட்டகத்தைத் தேடித் திரிந்தது. நடுப்பகல் ஆயிற்று.

குள்ளநரி மறுபடி தன் நிழலைப் பார்த்தது. துளியூண்டு இருந்தது நிழல்.

"சுண்டெலி கிடைத்தால்கூட நம் வயிற்றுக்குப் போதுமே!" என்று அந்தக் குள்ளநரி முணுமுணுத்தது. —கலில் கிப்ரான்.

கடிவாள ஜனனம்

காட்டிலே குதிரை தன்னந்தனியே யதேச்சையாகத் திரிந்து கொண்டிருந்தது. எங்கிருந்தோ அங்கே ஒரு கலைமான் வந்து சேர்ந்தது. தான் தனித்து மேய்ந்துகொண்டிருந்த புல்லிலே இப்போது ஒரு கலைமானும் பங்கு கொள்ள வந்தது கண்டு குதிரைக்குச் சகிக்கவில்லை.

அந்தப் பக்கம் வந்த மனிதனிடம் சென்றது குதிரை. "இந்த மானைத் தண்டிக்கிறாயா? கொஞ்சம் தயவுசெய்" என்று கேட்டது.

"அதைத் தண்டிக்க என்றால் எப்படி முடியும்? அது ஓட்டமாய் ஓடிவிடுமே! அதைப் பிடித்தால்தானே தண்டிக்கலாம்" என்றான் மனிதன்.

"என் முதுகில் ஏறிக்கொண்டு அதை வேட்டையாடிப் பிடி" என்றது குதிரை.

"ஐயோ! நான் மாட்டேன். உன் முதுகில் உட்கார்ந்தால், விழுந்துவிடுவேன்" என்றான் மனிதன்.

"கவலைப்படாதே. என் வாயில் ஒரு கம்பியைப் போட்டுப் பிடித்துக்கொள்" என்றது குதிரை.

அப்படியே குதிரையின் வாயில் ஒரு கம்பியைப் போட்டு, சவாரி செய்து, கலைமானை வேட்டையாடினான் மனிதன்.

வேட்டை முடிந்ததும், "இனி இறங்கி, என் வாய்க் கம்பியை எடு" என்றது குதிரை.

"முடியாது, முடியாது. நீ மிகவும் உபயோகமான பிராணி. உன்னை விடமாட்டேன்" என்று மனிதன் மறுத்துவிட்டான்.

இப்படியாகக் குதிரைக்குக் கடிவாளம் பிறந்து, ஸ்திரப்பட்டுவிட்டது. —ஈசாப் கதை.

*குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் பலரை
அந்தக் குஞ்சரமே கவிழ்த்திருக்கிறது!*

இந்திய சரித்திரத்தில் யானை

டாக்டர் ஸி. என். ஜுட்ஷி

குதிரையைத் தவிர மற்ற மிருகங்களுக்குள் யானையே இந்திய சரித்திரத்தில் அதிக இடம் பெற்றிருக்கிறது. நன்ருய்ப் பழக்கிய யானை யுத்த களத்தில் குதிரையைப்போல் உதவும். அரசர்கள் வீதியில் பவனி வரும் போதும் தர்பார் மண்டபத்துக்கு வரும்போதும் யானைமேல்தான் கம்பீரமாய் வீற்றிருப்பார்கள்.

வேத காலத்திலிருந்தே இந்தியாவில் யானைகள் மிகவும் முக்கியமாக இருந்து வந்திருக்கின்றன. பட்டத்துக்கு ஏற்ற அரசனைத் தேர்ந்தெடுக்கும் சக்தி யானைக்கு உண்டு என்று அந்தக் காலத்தவர் மதித்தார்கள். குழந்தை இல்லாமல் அரசன் இறந்துவிட்டாலும் சரி, பட்டத்து இளவரசனை யாராவது கண் காணுமல் தூக்கிக்கொண்டு போய்விட்டாலும் சரி, பட்டத்து யானையைக் கொண்டுதான் புதிய அரசனைத் தேர்ந்தெடுப்பார்கள். அதை அலங்கரித்து அதன் கையில் ஒரு பூமாலையைக் கொடுப்பார்கள்; பட்டத்துக்குரிய அரசனைத் தேர்ந்தெடுத்து வரும்படி அதை அனுப்பிவிடுவார்கள். யானையும் காடு மேடு மலையெல்லாம் சுற்றி அலைந்து கடைசியில் எவனுவது ஒருவன் கழுத்தில் மாலையைப் போட்டுத் தூக்கிச் செல்லும். இதன் பயனுகச் சில சமயம் ஆண்டி அரசனுகிவிடுவான்! பழைய காலத்துப் படங்களில் திருமகளின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு யானைகள் துதிக்கையில் பூமாலையை ஏந்திய வண்ணந்தான் காட்சி அளிக்கும்.

புராண காலத்தில் கங்கை நதிக் கரையில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ராஜதானியாக ஹஸ்தினுபுரம் (யானையூர்) என்ற ஒரு பட்டணமே இருந்தது. ஆயுத பாணிகளான வீரர்களை யுத்தகளத்துக்கு யானைகள் தாங்கிச் செல்வது போல் இடைக்காலத்துக் கையெழுத்துப் பிரதிகளில் படங்கள் வரைந்து வைப்பார்கள். மொகலாயர்கள் கட்டிய டில்லிக் கோட்டையின் வாசலில் கல்லில் செதுக்கிய இரண்டு பெரிய யானைகள் இருந்தன; அவைகளின் மேல் ஜயமல்லன், பட்டா என்ற இரண்டு வீரர்களின் சிலைகள் அமர்ந்திருந்தன. தம்மால் வர்ணிக்க முடியாத கம்பீரக் காட்சியாக இருந்தது இது என்று பெர்னியர் என்பவர் குறிப்பிடுகிருர்.

சாதாரண மனிதனைச் சிங்காதனத்தில் ஏற்றிவைக்கும் சக்தியைப்போலவே, யுத்த களத்தில் முடி மன்னர்களைக் கவிழ்க்கும் இயல்பையும் யானைகள் பெற்றிருந்தன. புருஷோத்தமன் என்ற அரசன் அலெக்சாண்டருடன்

மூலம்: ஓரியெண்ட் (ஆங்கிலம்; 7-1-'51), கல்கத்தா.

போர் புரிந்து வெற்றியடைவதற்குத் தன் யானைப் படையையே பூரணமாக நம்பியிருந்தான். ஆனால் அலெக்சாண்டரின் வீரர்கள், புருஷோத்தமனின் யானைகள் மீது அம்புகளை எய்து, வாள்களால் அவைகளின் கால்களை வெட்டவே அவை பீதியடைந்து யுத்தகளத்தை விட்டு வெருண்டு ஓடிவிட்டன. அதனால் புருஷோத்தமன் தோல்வி அடைந்தான்.

கிறிஸ்துவுக்குப் பின் 712-ஆம் வருஷம் மீர் காசிம் என்பவனின் தலைமையில் அராபியர்கள் இந்தியாவைத் தாக்கியபோது, தாகிர் என்ற அரசனுக்கும் இந்தக் கதிதான் நேர்ந்தது. அராபியர்கள் தாகிரின் யானைகள்மீது கூர்மையான அம்புகளை எய்தார்கள். அதனால் உண்டான காயங்களின் வலியைப் பொறுக்க முடியாமல், அந்த யானைகள் நாலு பக்கமும் சிதறி ஓடின. அந்தக் குழப்பத்தில், தாகிரின் வீரர்களையே அவை தங்கள் கால்களால் மிதித்து நூற்றுக்கணக்கில் கொன்றுவிட்டன. தாகிர் தோல்வியுற்றான். இதற்குப் பிறகுதான் முஸ்லிம்கள் சிந்துதேசத்தைப் பிடிப்பதற்கு வழி ஏற்பட்டது.

பானிப்பட்டில் நடந்த இரண்டாவது யுத்தத்தின்போது, உஸ்பெக் கான் ஜமான் என்பவனின் தலைமையில் போர் புரிந்த மொகல் சேனையை ஹேமு என்ற ஹிந்து அரசன் முறியடித்து வெற்றியுடன் முன்னேறிச் சென்றான். அப்போது அவன் கண்ணில் ஓர் அம்பு வந்து குத்தியது. அவன் ஏறியிருந்த யானை இதைக் கண்டு பயத்தினால் வெருண்டு யுத்தரங்கத்திலிருந்து ஓட்டம் எடுத்தது. இதனால் அவனுடைய சேனை கலைந்து நாலு பக்கமும் சிதறிப் போயிற்று. ஓடிப்போன யானையைப் பிடித்துவிட்டார்கள். அதன் மீது பிரக்ஞை இல்லாமல் கிடந்த ஹேமுவை அக்பரின் முன் கொண்டு போனார்கள். மரணத் தறுவாயிலிருந்த அந்த அரசன் மேல் அக்பர் தம் கத்தியை வீசிக் கொன்றுவிட்டார்.

தலிகோடாவில் நடந்த சண்டையின் ஆரம்பத்தில், இந்துக்கள் அடைந்த வெற்றியை முடிவில் தோல்வியாக மாற்றியதும் யானை தான். கோல்கொண்டா, பீஜபூர் முஸ்லிம் சேனைத் தலைவர்கள் கடுமையான யுத்தம் நடத்திய பின்பு தளர்ந்து போய் யுத்தகளத்தை விட்டுச் செல்ல எண்ணினார்கள். ஆனால், ஆமத்நகர் சுல்தான் ஹுசேன் நைஜாம் ஷா என்பவன் தைரியமாக விஜயநகரத்துக் கிழ அரசன் ராம ராஜாவை எதிர்த்து நின்றான். வெறி பிடித்த யானை ஒன்று அப்போது அந்த மன்னன் வீற்றிருந்த பல்லக்கை நோக்கிப் பாய்ந்துவந்தது. பல்லக்கைச் சுமந்து நின்ற ஆட்கள் அந்த யானையைக் கண்டு பயந்து போய் அரசனைக் கீழே போட்டுவிட்டார்கள். உடனே முஸ்லிம் சேனை அவனைப் பிடித்துக் கொண்டுவிட்டது. ஹுசேன் நைஜாம்ஷா ராம ராஜாவை அந்தக் கணமே கொன்றுவிட்டான். இரண்டு நூற்றாண்டுகளாக வாழ்ந்த விஜயநகர சாம்ராஜ்யத்தை ஒரு யானை இப்படி ஒரே நொடியில் அழித்துவிட்டது. இதற்குப் பிறகே தட்சிண தேசத்திலும் இஸ்லாம் மதத்தின் ஆதிக்கம் பரவியது.

ராஜபுத்திரர்களுடைய சரித்திரத்திலும் முதலில் அவர்கள் அடைந்த பல வெற்றிகள் முடிவில் தோல்விகளாக மாறியதற்கு மதம்

பிடித்த யானைகளே காரணமாயிருந்தன என்று தெரிகிறது. ஆயினும் இயற்கையாக மதம் பிடித்த ஒரு யானை, தன்னிடம் பட்சமாயிருப்பவரிடம் சில சமயம் நன்றியோடு நடப்பதும் உண்டு. மதம் பிடித்த யானை ஒன்று ஒரு சமயம் புத்தியோடு நடந்து கொண்ட அதிசய வரலாறு ஒன்றைப் போர்ச்சுகீஸியர்கள் எழுதி வைத்திருக்கும் இந்து தேச சரித்திரத்தில் காணலாம். கோவாவில் ஒரு யானைக்குத் திடீரென்று வெறி பிடித்துவிட்டது. அது தன்னிடம் அகப்பட்டவர்களையெல்லாம் மிதித்துக் கொன்று கொண்டே தெருவில் ஓடிற்று. அதற்கு அடிக்கடி பழமும் கறிகாய்களும் அன்புடன் கொடுக்கும் ஒரு ஸ்திரீயின் குழந்தை அப்போது தெருவில் கிடந்தது. அதைக் கண்டதும் அந்த யானை சட்டென்று நின்று தன் துதிக்கையால் குழந்தையை நாசூக்காய்த் தூக்கி ஒரு கூடை வாசலில் இருந்த பலகையின்மேல் கொண்டு போய் வைத்ததாம். 'ஐயோ! குழந்தை போய்விட்டதே!' என்று அலறிக் கொண்டிருந்த தாயிடம் குழந்தை இவ்விதம் பத்திரமாய்த் திரும்பிப் போய்ச் சேர்ந்தது. இதை வின்ஸ் சோடன் என்பவர் விவரமாய் எழுதியிருக்கிறார்.

மொகலாயர் காலத்தில் சண்டை, சமாதானம் ஆகிய இரண்டு காலங்களிலும் யானைகள் பலவிதமான சேவைகள் புரிந்திருக்கின்றன. அந்தக் காலத்தில் உயரமான யானை ஒன்றின்மீது எல்லார் கண்களிலும் படும்படி சேனைத் தலைவன் வீற்றிருப்பான். அவனைப் பார்த்துப் பார்த்துத்தான் சேனை உற்சாகம் கொள்ளும். யுத்தத்தின் போது கையாளும் ஓர் உபாயம் இது. இதைச் சரிவரக் கையாளாமல் போனதாலேயே அநேகம் மன்னர்கள் தோற்றுப் போயிருக்கிறார்கள். யானையை விட்டுக் கீழே இறங்கிய காரணத்தினால்தான் தாரா என்பவன் அபஜயம் அடைந்தான். ஆனால் அவனுடைய சகோதரனை அவுரங்கஜேபு அடைந்த வெற்றிக்கும் யானைதான் காரணம். ராஜ்யத்துக்காக நடந்த சண்டையில் ஒரு சமயம் தோல்வி ஏற்படும்போல் இருந்தது. அப்போது யுத்த களத்திலிருந்து ஓட முடியாதபடி யானையின் கால்களைச் சங்கிலியால் கட்டிவிடும்படி அவுரங்கஜேபு உத்தரவிட்டான். அவனிடமிருந்த சிறு சேனை இழந்த தைரியத்தை மீண்டும் பெற்றுச் சண்டையிட இதுவே ஏதுவாயிற்று. இதனால் சண்டையின் வெற்றிக்கும் தோல்விக்கும் யானையே முக்கியக் காரணமாக இருந்திருக்கிறது என்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

அக்பர் சக்கரவர்த்திக்கு யானை என்றால் மிகவும் பிரியம். சண்டையில் அவை அவருக்குப் பெரிதும் உபயோகமாக இருந்தன. யானைப் படையாகவே ஒன்று அவர் வைத்திருந்தார். தம் சொந்தத்தில் அவர் உபயோகித்த யானைகளுக்கு 'காஸா' (பிரத்தியேகம்) என்று பெயர். பத்து, இருபது, முப்பது என்று அணிவகுத்து வைத்திருக்கும் மற்ற யானைகளுக்கு 'ஹால்கா' (கோஷ்டி) என்று பெயர். குதிரைகளையும் பொதிசுமக்கும் மற்ற விலங்குகளையும் பழக்குவதோடு சில யானைகளையும் பழக்கும்படி தம் கீழுள்ள மன்ஸப்தார்கள் என்ற படைத் தலைவர்களுக்கெல்லாம் அக்பர் உத்தரவிட்டிருந்தாராம். தாம் எழுதிய 'ஆயின்-இ-அக்பரி'

என்ற நூலில் இதை அபுல் பஸல் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜான் ஜுர்டேன் என்ற ஆங்கிலேயர் 1611-ஆம் ஆண்டு ஆக்ராவுக்கு வந்திருந்தார். அப்போது ஜஹாங்கீர் சக்கரவர்த்தியாக இருந்தான். அவனுடைய காவல் படைகளில் ஒன்று யானைப் படை. அந்த யானைகள் தினந்தோறும் அவனைக் காணும்போது தங்கள் துதிக்கைகளை உயரத் தூக்கிச் சலாம் செய்யும்படி பழக்கியிருந்தார்களாம். இதை ஜான் ஜுர்டேன் தம் யாத்திரை நூலில் எழுதி வைத்திருக்கிறார். அந்த யானைகளின் கழுத்தில் மணிகள் கோத்த சங்கிலி கட்டி, அவற்றின் உடம்பில் உயர்ந்த பட்டையும் வெல்வெட்டையும் போர்த்திருந்தார்களாம். அவைகளின் தலையையும் மார்பையும் சிவப்பு, பச்சை முதலிய ரத்தினங்கள் வைத்து இழைத்த தங்கத் தகடுகளால் அலங்கரித்து, அவைகளின் மேல் கொடிகளைப் பறக்க விட்டிருந்தார்களாம். சக்கரவர்த்தியின் பிறந்த நாளன்று இந்த யானைகளில் ஒவ்வொன்றும் மன்னனுக்கு முன் வந்து மிகவும் பக்தியுடன் பணிந்துவிட்டுப் போகுமாம். இங்கிலாந்தில் உள்ள பாட்லியன் லைப்ரரியில் வைத்துப் பாதுகாத்திருக்கும் ஒரு கையெழுத்துப் பிரதியில், ஷாஜஹானின் தர்பாருக்கு முன் இரண்டு யானைகள் மீது இரண்டு பேர் நின்றுகொண்டு செல்லுவது போன்ற படம் வரைந்திருக்கிறது.

போர்ச்சுகீஸியர் காலத்திலும் இதேபோல் கோவாவில் வருஷப் பிறப்பன்று யானைகளை அலங்கரித்து வைஸிராய், ஆர்ச்பிஷப், மற்றுமுள்ள பிரமுகர்கள் இவர்கள் எல்லாரையும் வணங்குவதற்கென்று ஊர்வலமாய் அழைத்துச் செல்லுவார்களாம். ஒவ்வொரு யானையின் மேலும் குழல் வாசித்துக்கொண்டு ஆறு ஆறு பேர் செல்லுவார்கள். மாதா கோவிலையும், பெரிய பிரபுக்களுடைய வீடுகளையும் தாண்டிச் செல்லும் போது அந்த யானைகள் குனிந்து வணக்கம் செலுத்திவிட்டுப் போகும்.

மொகலாயர் காலத்தில் தூர தேசப் பிரயாணங்களுக்கு யானைகளே உதவியாக இருந்திருக்கின்றன. ராஜகுமாரிகளும் அந்தப்புரத்துச் சீமாட்டிகளும் யானையின் மேல் அம்பாரியில் உட்கார்ந்தோ, அல்லது பெரிய வெள்ளி மணி கட்டிய இரண்டு யானைகளின் நடுவில் விலையுயர்ந்த பட்டுப் படுதா கட்டிய பல்லக்கில் அமர்ந்தோ பிரயாணம் செய்வார்கள். பெர்னியர் அதை வர்ணிப்பதைப் பாருங்கள்: "மலை போன்ற பெரு தேசத்து யானையின் மேல் நவரத்தின கசிதமான அம்பாரியில் ரோஷனாரா பேகமும், அவளுக்குப் பின்னால் வேறு ஆறு யானைகளின் மேல் தகதகவென்று ஜொலிக்கும் அம்பாரிகளில் அவளுடைய பணிப் பெண்களும் உட்கார்ந்து செல்லும் காட்சியைக் காட்டிலும் அற்புதமான வேறொரு காட்சியை நம்மால் கற்பனையே செய்ய முடியாது. இந்த அழகிகள் யானைகளின்மேல் அவ்வளவு உயரத்தில் உட்கார்ந்து செல்லும் போது, இவர்கள் ஆகாய மார்க்கமாய்ச் செல்லும் தேவதைகள் தானோ என்று தோன்றும்."

யானைகளைப் பரிசாக வழங்குவதை அந்த நாளில் பெரிய ராஜ மரியாதையாக மதித்தார்கள். ஆயினும் அந்

தப் பரிசு சில சமயம் உண்மையில் ஒரு தண்டனை ஆகிவிடும். குர்ரம் என்ற ராஜகுமாரனை ராணு அமர்சிங் என்பவன் பேட்டி காணச் சென்ற போது, குர்ரம் அவனை ராஜ மரியாதைகளுடன் வரவேற்று யானை, குதிரை, கத்தி முதலியவைகளைப் பரிசாக வழங்கி அனுப்பினன். ஜகத்சிங் என்பவனுக்கு ஜஹாங்கீரும் இப்படியே பரிசுகள் வழங்கினனும். ஆயினும் ஓர் அரசனை நாசம் செய்யவேண்டுமானல், அவனுக்கு ஒரு வெள்ளை யானையைப் பரிசாக அளித்தால் போதும் என்றும் முன் காலத்தில் மதித்தார்கள். சியாம் தேசத்து அரசன் தன் சபையில் யாரையாவது தரித்திரனுக்க விரும்பினல், அவனுக்கு ஒரு வெள்ளை யானையைத்தான் பரிசளிப்பது வழக்கமாம். அரசன் அளித்த பரிசை வேண்டாம் என்று ஒருவன் எப்படி மறுப்பான்? அந்த யானையைக் கட்டித் தீனி போடுவதிலேயே அவனுடைய ஆஸ்தி முழுவதும் செலவழிந்து விடும்.

மொகல் மன்னர் யானைமீது வீற்றிருந்து பொன்னையும் வெள்ளியையும் ஜனங்களுக்கு வாரி வாரி வழங்கிக்கொண்டு ஊரைச் சுற்றி வருவார்களாம். அதில் அவர்களுக்கு அலாதியான சந்தோஷம். ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்த ஒன்பதாவது வருஷம் ராணு அமர்சிங்கின் 'ஆலம் கோமன்' என்ற பிரசித்தமான யானையை இளவரசன் பிடித்துக்கொண்டு வந்து தன் தந்தைக்குப் பரிசளித்தானும். மறுநாளே அந்த யானையின்மேல் ஜஹாங்கீர் சந்தோஷத்துடன் ஏறி உட்கார்ந்துகொண்டு எல்லாருக்கும் தங்கத்தை அள்ளி வீசினனும். இதை ஜஹாங்கீரே குறிப்பு ஒன்றில் எழுதியிருக்கிருன்.

மொகல் ராஜ்யத்தில் யானைகளே பெரிய பீரங்கிகளை இழுத்துச் செல்லது வழக்கம். இப்போதும் இந்திய ஸம்ஸ்தானங்களில் இந்த வழக்கத்தைக் காணலாம். 1608-ஆம் வருஷம் மகபத்கானின் தலைமையில் ராணு அமர்சிங்குக்கு எதிராகப் போர் புரியும் பொருட்டு ஜஹாங்கீர் அனுப்பிய படையில் ஆயிரக்கணக்கான குதிரை வீரர்களும் யானைகள் மீது ஏற்றிய எண்பது பெரிய பீரங்கிகளும் இருந்தன.

சாதாரண காலத்தில் யானைகளைச் சண்டைக்கு விட்டு வேடிக்கை பார்ப்பதிலும் அரசர்களுக்கு விசேஷ உற்சாகம் இருந்தது. சில சமயம் இந்தச் சண்டை மகா குரூரமாய்ப் போய்விடும். யானைப் பாகர்களே யானைகளின் காலடியில் அகப்பட்டு நசுங்கிச் செத்துவிடுவார்கள். வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்கும் ஜனங்களில்கூட யாராவது சிலரை யானைகள் தம் கால்களின் கீழ்த் தள்ளி மிதித்துக் கொன்றுவிடும். சண்டை போடும் யானைகளைக் கண்டு ஜனங்கள் பயந்து சில சமயம் நாலு பக்கமும் ஓடும்போது இடிபட்டுச் சாவோரும் உண்டு.

அக்பர் சக்கரவர்த்திக்கு யானைகளுடன் விளையாடுவது பெரிதும் பிடிக்கும். அவர் காபூலில் இருந்த போது அவரிடம் நாய், குதிரை, ஒட்டகம் முதலியவை இருந்தன. இந்தியாவுக்கு வந்த பிறகு யானை அவர் மனத்தை மிகவும் கவர்ந்துவிட்டது. துஷ்ட யானை ஒன்று தன் பாகனைக் கொன்று எல்லாருக்கும் திகிலை உண்டாக்கும். அப்போது அக்பர் சிரித்த முகத்துடன் அதன் தந்தத்தின்மீது காலை வைத்து முதுகில் ஏறி உட்

கார்ந்துகொண்டு மற்றொரு துஷ்ட யானையுடன் அதைச் சண்டைக்கு விடுவார். பாதிச் சண்டை நடக்கும் போது மற்ற யானையின் பாகன் அதை அடக்க முடியாமல் தவிப் பதைப் பார்த்ததும், அக்பர் தம் யானையிலிருந்து அந்த யானையின் மீது தாவி உட்கார்ந்துகொள்வார். அக்பருடைய இத்தகைய லாக வத்தையும் சாமர்த்தியத்தையும் பற்றி அபுல் பஸல் வர்ணித்திருக் கிறார். எப்படிப்பட்ட முரட்டு யானையையும் தம் தந்தை (அக்பர்) அடக்கிவிடுவார் என்று ஜஹாங்கீரும் சொல்லியிருக்கிறார்.

2,000 வருஷங்களுக்கு முன் காபூல், பஞ்சாப் ஆகிய பிரதேசங் களை மெனண்டர் என்ற ஒரு பிரபல அரசன் ஆண்டுவந்தான். யானைகளை மலையிலிருந்து உருட்டித் தள்ளிக் கொன்று விடுவதில் அவனுக்கு மிகவும் பிரியமாம்.

முன் காலத்தில் குற்றம் செய்த வனை வதைத்துத் தண்டிப்பதற்கும் யானைகளை உபயோகித்தார்கள். யானையின் காலால் இடறச் செய்து கொல்லுவதுதான் சாதா ரணமாய் விதிக்கும் மரண தண்டனை. சிரச்சேதம் செய்வது, தூக்கிவிடுவது போன்ற தண்டனை களைத் தவிர, குற்றவாளியை யானை முன் எறிவதும் விஜயநகர மன்னர்களின் வழக்கம். யானை அந்த மனிதனைத் தன் தந்தங் களால் குத்திக் கிழித்துப் போட்டு விடும். தயாள குணமுள்ளவன் என்று பெயர் பெற்ற ஜஹாங்கீர்கூட இந்தக் குரூரமான தண்டனையை விதித்திருக்கிறான். அடங்காத கோபம் வந்துவிட்டால் ஒரு மனிதனை உயிரோடு தோலுரித்து விடவோ, யானையின் முன் எறிந்து விடவோ அவன் கட்டளை யிடுவானாம்.

இந்தக் காலத்திலும் யானைகள் ஏதாவது ஒருவிதத்தில் பிரசித்தி பெற்று வருகின்றன. சினிமாவில் பிரபலம் அடைந்த 'காலநாகம்' என்ற யானையைப்பற்றி சினிமா ரசிகர்களுக்கெல்லாம் தெரிந்திருக் கும். அமெரிக்காவில் 1936-ஆம் வருஷம் ஜனாதிபதியின் தேர்த லின்போது 'சூசன்னா' என்ற யானை தன் துதிக்கையில் ஓர் உண்டியல் பெட்டியுடன் ஊரெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்ததாம். இன்றுங் கூட ஏதோ ஒரு விதத்தில் உலகப் பிரசித்தமான காரியங்களைச் செய் வதற்கு யானைகளை நன்றாய்ப் பழக்க முடியும் என்றே தோன்றுகிறது.

லைசென்ஸ் எங்கே?

கார் ஓட்டிக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணை, "லைசென்ஸ் எங்கே?" என்று கேட்டான் போலீஸ் ஜவான்.

"லைசென்ஸா! அது எப்படி என்னிடம் இருக்கும்? அதைத்தான் உங்கள் அதிகாரிகள் போன வருஷமே என் னிடமிருந்து பிடுங்கிவிட்டார்களே!" என்றாள் பெண்.

—ஜியார்ஜ் கிளார்க்

நூல்களில் வேற்றுமை

★

இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன், திருவாவடுதுறை யாதீனத்தையடுத்து ஈசான தேசிகர் என்ற பட்டப் பெயர் பெற்றுத் திருநெல்வேலியில் அவ்வாதீனத்தைச் சார்ந்த ஈசான மடத்தில் இருந்து விளங்கியவர் சாமிநாத தேசிகர் என்பவர். அவர் வடமொழி தென்மொழி நூல்களில் வல்லவர். தமிழ் இலக்கண நூல்களில் சிறந்த ஆராய்ச்சி உடையவர். பல இலக்கண நூல்களிலும் உரைகளிலும் அங்கங்கே உள்ள பல இலக்கணச் செய்திகளையும் தம்முடைய அறிவுத் திறத்தால் தெளிந்த பல செய்திகளையும் தொகுத்து, இலக்கணக் கொத்து என்னும் நூலை இயற்றினர். அதற்கு அவரே உரை எழுதினர்.

பின்னே உள்ளது, இலக்கணக் கொத்தின் பாயிரத்தில் வரும் 'வடமொழி யிலக்கணம்' என்னும் சூத்திர உரையில் உள்ள பகுதி.

சாமிநாத தேசிகர் (இலக்கணக் கொத்து உரை): திருவைக் கோவைக்குங் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே என்பது திண்ணம்; அன்றியும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற்கு அலந்து இரந்து அருமைத் திருக்கையால் எழுதினர். அப் பெருமையை நோக்காது, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப் பாட்டு, கொங்குவேள் மாக்கதை முதலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடு ஒன்றுக்குவர். அங்ஙனமும் அமையாது, இலக்கணமாவது தொல்காப்பியம் ஒன்றுமே, செய்யுளாவது திருவள்ளுவர் ஒன்றுமே, இவ்விரண்டும் நீங்கலான இலக்கண இலக்கியம் எல்லாம் ஒன்றற்கொன்று பெருமை சிறுமை இணையென்று கொள்வாரென்பது தோன்ற இம் முறை வைத்து அடையைப் பொதுவாக்கினும். அவர் அதுமட்டோ? இறையனர் அகப்பொருள் முதலான இலக்கணங்களையும், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம், சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், பட்டணத்துப் பிள்ளையார் பாடல் முதலிய

இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணாது, நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை, அலங்காரம் முதலிய இலக்கணங்களையும், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு, இராமன் கதை, நளன் கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணி, வாணாள் வீணாள் கழிப்பர். அவர் இவைகள் இருக்கவே அவைகளை விரும்புதல் என்னெனின், பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழும் மீன்கள் அப் பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல் போல அவரது இயற்கை என்க.

[குறிப்பு: 'பல்காற் பழகினும் தெரியா உளவேல், தொல்காப்பியர் திருவள்ளுவர் கோவையார், மூன்றினும் முழங்கும்' என்ற அடிகளுக்குரிய விசேட உரை இது. திருவள்ளுவர் என்பதில் உள்ள அடையாகிய திரு என்பதைக் கோவையார் என்பதற்கும் கூட்டும்படி சொல்கிறார். பின்னே சைவ நூல்கள் அல்லனவற்றைப் படிப்பதனால் பயனில்லை என்ற தம் கருத்தை இவ்வாசிரியர் புலப்படுத்தியிருக்கிறார். அப்படிப் புலப்படுத்தும்போது, தமிழ் நாட்டில் தமிழன்புடையவர்கள் படிக்கும் நூல்கள் இன்னவையென்பதைத் தெரியப்படுத்துகிறார்.]

பந்தாட்டம் பார்த்த மகாராஜா

ஐ. நா. சபையில் ஒரு சமயம் நிகழ்ச்சி முறை பற்றிப் பலத்த வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. அதைக் கண்டு சகிக்காமல் ஸர் பெனகல் நரசிங்க ராவ் இந்தக் கதையைச் சொன்னார்:

"ஓர் இந்திய ராஜா இருந்தார். அவரைக் கால் பந்தாட்டம் ஒன்றைப் பார்க்க அழைத்துச் சென்றார்கள். அந்த ஆட்டத்தில் ஜயமடைந்த கட்சியாருக்கு ஆளுக்கு ஒரு கால் பந்தை அடுத்த நாள் அந்த ராஜா இனாமாக அனுப்பினார். அதோடு, 'ஒரே ஒரு பந்துக்காக நீங்கள் பதினொரு பேரும் அப்படிச் சண்டை போட்டது எனக்குப் பிடிக்கவில்லை. அதனாலேயே இவைகளை அனுப்பினேன்' என்று தெரிவித்தார்.

"ஆனால், இங்கே இருக்கிறோமே பதினொரு பேர், நம் எல்லாருக்கும் ஒரு சமயத்தில் ஒரு பந்து போதும் என்றே நான் நினைக்கிறேன். அதாவது, ஒரு சமயத்தில் ஒரே ஒரு தீர்மானத்தைப்பற்றி மட்டும் விவாதிப்போம்."

'ஸெயிண்ட் லூயி போஸ்ட் - டிஸ்பாட்ச்'



கண்டதைக் குறிக்கும் பழக்கம்

ஏ. கே. வசு

****

ஜேபியிலே நோட்டுப் புத்தகம் வைத்துக்கொண்டு, புதுப் புது விஷயங்களைச் சேகரிக்கும் ஒருவருடைய விசித்திர அநுபவத்தைச் சித்திரிப்பது இந்தக் கட்டுரை.

****

எதிர்பாராத சமயங்களில் சில அற்புதமான யோசனைகள் என் மனசில் உதிக்கும். அவைகளை அவ்வப்போது குறித்துக்கொள்ளாவிட்டால் அப்புறம் மறந்து போய் விடும்; மறுபடியும் ஞாபகத்துக்கு வருவதேயில்லை. இதனால் அறிவு உலகத்துக்கே எவ்வளவு நஷ்டம், பாருங்கள்! இதற்காகத்தான் நான் எங்கே போனாலும் எப்போதும் ஒரு நோட்டுப் புத்தகமும் பென்ஸிலும் எடுத்துக்கொண்டு போவது வழக்கம். அடடா! நீங்கள் அதைப் பார்க்கக் கொடுத்து வைக்க வேண்டுமே! பார்த்தால், சின்னஞ்சிறு வேடிக்கைப் பாட்டுக்கள், பாட்டுக் கட்டுவதற்கு வேண்டிய சில கருத்துக்கள், சம்பாஷணைகள்-இப்படிக் கதாசிரியர்கள், கட்டுரையாளர்கள், நாடகாசிரியர்கள், கவிகள், பிரசங்கிகள், பத்திரிகாசிரியர்கள் எல்லாருக்கும் மிக மிக அவசியமான பல விஷயங்கள் அதில் இருக்கும். அவைகளை வைத்துக்கொண்டு அவர்கள் பிழைக்கலாம்; பெயரும் எடுக்கலாம். என் நோட்டுப் புத்தகத்தில் பக்கம் பக்கமாகப் பல நாவல்களுக்கு வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் உபயோகித்து ஒரு நாவல் எழுத ஒருவேளை எனக்கு அவகாசம் இராமல் போய்விடலாம். நான் செத்த பிற்பாடு, சிறந்த எழுத்தாளர்கள் யாராவது என் நோட்டைப் பயன்படுத்திக்கொண்டால் அந்த மாதிரி புத்தகங்கள் நன்றாக விற்பனை ஆகலாம்.

என் நோட்டுப் புத்தகத்தில் எத்தனையோ கதைகளுக்கு வேண்டிய விஷயங்களைக் காணலாம். ஆனால் நானோ சிறுகதை எழுதுவதே அபூர்வம்; அப்படி இருக்கும்போது பெரிய கதைகளைப்பற்றிக் கேட்பானேன்? சில பேருக்குக் கதை நன்றாக எழுத வரும். ஆனால் அதற்கு விஷயந்தான் கிடைக்காது. இன்னும் சில பேருக்கு ஏராளமான விஷயம் கிடைத்தும் கதை எழுத வராது. நான் பிந்திய ரகத்தைச் சேர்ந்தவன். ஆகையால் இனிமேல் முந்தின ரகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த மாதிரி விஷயங்களை நியாயமான விலைக்கு விற்கப் போகிறேன். "இப்படிச் செய்வது நம் கடமை. இது உலக இலக்கியத்துக்கே நாம் செய்யும் அரிய தொண்டு. குடத்தினுள் விளக்காக நாம் ஒளிந்து கிடப்பது மகா அதர்மம்" என்று எனக்குப் படுகிறது. அப்படிப் பணம் தரச்

காப்பிரைட் : ப்ரீ இந்தியா (ஆங்கிலம் : 28-1-'51), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை.

சக்தி இல்லாத ஏழை எழுத்தாளர்கள், நான் கொடுக்கும் விஷயங்களை விஸ்தரித்துக் கதையாக்கி வெளியிட்டுப் பணம் கிடைத்ததும், ஒரே மொத்தமாகவோ தவணை தவணையாகவோ செலுத்தலாம். அப்படி ஒன்றுமே கிடைக்காமற் போனாலும் சரி, போகட்டும்; எனக்கு அக்கறை இல்லை.

நோட்டுப் புத்தகத்தில் விஷயங்களைக் குறித்துக்கொள்ளும் இந்தப் பழக்கம் பெரும் பித்தாகி என்னைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறது. சாகும் போதுகூடத் தலையணைக்கு அடியில் நோட்டுப் புத்தகத்தை வைத்துக்கொண்டிருப்பேனோ என்னவோ? கடைசி நேரத்தில் ஏதாவது அற்புதமான விஷயம் மனசில் தோன்றலாமோ இல்லையோ? பின்னால் அது நாலு பேருக்கு உபயோகப்படலாம்.

"இது அப்படி ஒன்றும் கெடுதலான பழக்கமில்லையே!" என்று நீங்கள் சொல்லலாம். அதுதான் இல்லை. சில சமயம் அதனால் பல சிக்கல்களில் மாட்டிக்கொண்டு அவதிப்பட்டது எனக்குத்தானே தெரியும்! அந்த மாதிரி நடந்த ஒரு விஷயத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

இந்தியா இன்னும் சுதந்தரம் அடையாத சமயம்; எனக்கும் கல்யாணம் ஆகவில்லை அப்போது. நான் ஒரு சங்கத்தில் அங்கத்தினனாக இருந்தேன். ஒவ்வொரு நாளும் சாயங்கால நேரத்தில் நான் அந்தச் சங்கத்துக்குப் போய் வருவது வழக்கம். என் சுபாவம், யாரோடும் பழகவோ பேசவோ மாட்டேன். என் பாட்டுக்கு ஏதாவது தினசரியையோ சஞ்சிகையையோ வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பேன். மற்றவர்கள் ஏதாவது ஆட்டம் ஆடும் போது அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன். ஒவ்வொரு நாளும் கூடவே என் நோட்டுப் புத்தகத்தையும் எடுத்து வருவேன். ஏதாவது நல்ல விஷயம் மனசில் தோன்றும்; மற்ற அங்கத்தினர்கள் தமாஷாகவும் ரசமாகவும் பேசுவார்கள். அவைகளை என் நோட்டுப் புத்தகத்தில் குறித்துக்கொள்வேன். கடைசியில் ஒரு நாள் அவர்கள் என்னை வேவுகாரன் என்று எண்ணிக் கொண்டுவிட்டார்கள். அதற்கு முந்திய நாள் சங்கத்தின் அங்கத்தினர் ஒருவரை ஸி. ஐ. டி. போலீஸார் வந்து கைது செய்து விசாரணையின்றிச் சிறைக்குள் தள்ளிவிட்டார்கள். சாயங்கால நேரம் நான் வந்து யாரோடும் பேசாமல் இருப்பது, மற்றவர்கள் பேசுவதைக் கூர்ந்து கவனித்து ரகசியத் தகவல்களைக் குறித்துக்கொள்வதுபோல் நோட்டுப் புத்தகத்தில் எழுதுவது (இதுதான் அவர்களுக்கு அதிகமாகச் சந்தேகத்தை மூட்டியதோ?) இதையெல்லாம் வெகு நாளாகக் கவனித்து வந்தார் போல் இருக்கிறது சங்கத்தின் காரியதரிசி. சற்றுத் தடிமனான ஆசாமி அவர். அன்று சாயங்காலம் சங்கத்துக்கு

வந்தேன். என்னுடைய ‘தந்தி பாஷை’யில் இப்படி ஏதோ ராயசம் வரைந்துகொண்டிருந்தேன். அப்போது அவர் என் பின்னால் வந்து நின்று, “யார் ஐயா நீர்? இங்கே வந்து ரொம்ப சிரத்தையாக வரைந்து தள்ளுகிறீரே!” என்று அதட்டிக் கேட்டார். நானோ சுபாவத்திலேயே பயங்கொள்ளி. அவர் திடீரென்று இப்படிக் கேட்கவே வெலவெலத்துப் போய் விழித்தேன். இது பின்னும் சந்தேகத்தை மூட்டிவிட்டது. சங்கத்தின் மற்ற அங்கத்தினர்களும் வந்து என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். என் பாடு இன்னும் திகிலாகிவிட்டது. “நோட்டுப் புத்தகத்தில் யாரைப்பற்றியும் ஒன்றும் இல்லை; என் சொந்த விஷயந்தான் இருக்கிறது” என்று சொல்லச் சொல்ல அவர்கள் சந்தேகம் பின்னும் வலுத்தது. சங்கத்தின் லைப்ரேரியன், “அந்த மூலையில் உட்கார்ந்துகொண்டு இந்த ஆசாமி பத்திரிகை படிக்கிற மாதிரி எப்போதும் பாசாங்கு செய்வது வழக்கம். இங்கே யார் யார் என்ன என்ன பேசுகிறார்கள் என்று மனுஷன் ஒட்டுக்கேட்டு எழுதிக்கொள்வான்: நான் கவனித்திருக்கிறேன்” என்று வேறு சொல்ல ஆரம்பித்துவிட்டார். “இவன் அந்நிய அரசாங்கத்தின் கையாளாக இருந்து வேவு பார்க்கும் பேர்வழி. நம் சங்க அங்கத்தினர் கைதாகி விசாரணையில்லாமல் சிறையில் அடைபட்டதற்கு இவன்தான் காரணம்” என்று முடிவு கட்டிவிட்டார்கள். “இன்னும் யார் யார் பேரை அதில் குறித்து வைத்திருக்கிறாய், பார்க்கலாம்: நோட்டுப் புத்தகத்தைக் காட்டு” என்றார் ஓர் அங்கத்தினர். அதை அவர்கள் பிடுங்



கிக்கொண்டார்கள். உள்ளே யார் பெயரும் இல்லை. என் ‘தந்தி-ராயசம்’தான் இருந்தது. அது அவர்களுக்குப் புரிந்தால்தானே! இதனால் சந்தேகம் பின்னும் வலுத்தது.

அந்தச் சங்கத்துக்குப் போனது அதுதான் கடைசித் தடவை. அன்று என்னைப் பழுக்கப் பார்த்தே தீருவார்கள் என்று உள்ளுக்குள்ளே நடுக்கந்தான். ஆனால் வலிமை பொருந்திய ஆங்கில அரசாங்கத்தின் பக்கபலம் இருப்பதாக அவர்கள் எண்ணினதால் அப்படி ஓர் ஆபத்தும் நேராமல் தப்பினேன். “மறுபடியும் இங்கே வந்தாயோ, கொன்று விடுவோம்” என்ற எச்சரிக்கையோடு அனுப்பிவிட்டார்கள். அடி, உதை படாமல் வந்தாலும் என் மனசு சுக்குநூறாக உடைந்துவிட்டது. எல்லாம் இப்படி நோட்டுப் புத்தகத்தில் பல விஷயங்களையும் குறித்துக்கொள்ளும் பழக்கத்தால் வந்த விபரீதந்தான்!

இன்னொரு சமயம் போக்குவரத்து அதிகமாக இருந்த ஒரு ரஸ்தாவைத் தாண்டும்போது அற்புதமான ஒரு வேடிக்கைப்பாட்டு ஞாபகத்துக்கு வந்தது. அதை மறந்துவிட்டால் அப்புறம் உலகத்துக்கே ஒரு நஷ்டம் ஏற்பட்டமாதிரி

தானே! - அவ்வளவு நல்ல பாட்டு! எதிர்ப்பக்கம் இருக்கும் நடைப் பாதைக்குப் போய்ச் சேருவதற்குள் அந்த 'அரு மாணிக்கம்' மறந்துவிட்டால் என்ன செய்வது?-ரஸ்தாவின் நடுவில் சட்டென்று நின்றேன்; ஜேபியிலிருந்து நோட்டுப் புத்தகமும் பென்ஸிலும் எடுத்தேன். என்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்ற கவலையே இல்லாமல் அந்த அருமையான பாட்டைக் குறித்துக்கொள்ளத் தொடங்கினேன்.

திடீரென்று, "ஏய்! என்ன பண்ணுகிறாய் இங்கே நின்றுகொண்டு! தற்கொலை பண்ணிக்கொள்ள வேண்டும் என்று ஆசையா?" என்று என் பின்னால் ஒரு குரல் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். ஒரு சார்ஜண்ட் என்னை முறைத்துப் பார்த்து ஏதோ கூவிக்கொண்டிருந்தான். அப்புறம் அந்தப் பாட்டு, நோட்டுப் புத்தகம் எல்லாம் என்ன ஆச்சோ எனக்குத் தெரியாது. என்னைச் சுற்றிக் கவனித்தால் இரண்டு பக்கமும் சில கார்களும் மற்ற வண்டிகளும் நின்றுகொண்டிருந்தன! எனக்கு நகரக்கூடத் தோன்றவில்லை. அப்படியே திகைத்துப் போய் நின்றேன். கடைசியில் சார்ஜண்ட் வந்து தரதர என்று என்னை எதிர்ப்பக்கம் இழுத்துத் தள்ளிவிட்டான்.

எவ்வளவு பெரிய ஆபத்தில் மாட்டிக்கொண்டிருப்போம் என்று அப்போதுதான் பளிச்சென்று விஷயம் எனக்குப் புலனாயிற்று. நான் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகக் குற்றம் சாட்டி, சமீபத்தில் ஏதாவது போலீஸ் ஸ்டேஷனுக்கு என்னை அவன் இழுத்துக்கொண்டு போயிருந்தால் என்பாடு என்ன ஆகியிருக்கும்? அப்புறம் சரியானபடி தண்டனை கிடைத்திருக்கும். நிச்சயமாக என் ஜேபியிலிருந்த நோட்டுப் புத்தகத்தையே அத்தாட்சியாகக் கோர்ட்டில் கொண்டு வந்து காட்டியிருப்பார்கள். முந்தாநாள்தான் அதில் இப்படி ஒரு குறிப்பு என் கையாலேயே எழுதி வைத்திருந்தேன்:

"தற்கொலை செய்துகொள்வது எப்படி? அதற்குச் சரியான வழி, நாமே செய்துகொள்ளாமல் ஒரு மோட்டாரோ, பஸ்ஸோ, லாரியோ நம்மேல் ஏறும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போது அது தற்செயலாக நேர்ந்த விபத்து என்று தோன்றிவிடும். அப்படி நாம் செத்தால் அதோடு தொலைந்தது. தப்பித்துக்கொண்டாலும் பரவாயில்லை; 'தற்கொலை செய்துகொள்ள வந்தான்' என்று குற்றம் சாட்டமாட்டார்கள்! இன்னும் கேட்டால், அப்போது கைகால் ஒடிந்து போனால் அதற்கு நஷ்ட ஈடாவது கொஞ்சம் கிடைக்கும்."

இந்தக் குறிப்பே வழக்கின்போது எனக்கு எதிராகப் பயன்பட்டிருக்கும். இவ்வளவு மோசமான ஓர் அத்தாட்சியை என் ஜேபியில் வைத்துக்கொண்டு அப்புறம் கோர்ட்டில் எப்படித் தலை நிமிர முடியும்? அதனால் ரஸ்தாவின் எதிர்ப்பக்கம் போய்ச் சேர்ந்தவுடனே ஜேபியிலிருந்து இரண்டு பத்துரூபாய் நோட்டை எடுத்து அந்த சார்ஜண்டின் கையில் திணித்துவிட்டு, அவன் பதில் சொல்வதற்குள் மெதுவாக நழுவிவிட்டேன். சார்ஜண்ட் என்னைப் பின்தொடரவில்லை. ஆனால் அப்புறம் அந்த வேடிக்கைப் பாட்டு எனக்குக் கவனமே வரவில்லை. உலகத்துக்கே இது பெரிய நஷ்டந்தான்!

'சொக்குப்பொடி போட்டு எப்படியோ அவனை மயக்கி விட்டாள்' என்கிறார்களே, அது ஒரு வேளை இதுவாய்த்தான் இருக்குமோ?

வாசனையின் வசிய சக்தி

ஜேனெட் கிரே

கடைக்குச் சென்றால் ஸெண்டுகள், அத்தர்கள் விற்கும் இடத்துக்கு நம்மை அறியாமலே நம் கால்கள் சில சமயம் நம்மை இழுத்துச் செல்கின்றன. ஆனால் அவைகளை விற்கும் பெண், "இந்த மாயச் சக்தி வாய்ந்த வாசனையைப் பூசிக்கொண்டால், ஆண்கள் அப்படியே மயங்கிப் பெண்களுக்கு அடிமையாகி விடுவார்கள்" என்றெல்லாம் சொல்வதுண்டு. அவள் சொல்வது பொய் அல்ல. அவைகளை விற்றுக்கொடுத்தால் அவளுக்கு ஏதோ கமிஷன் கிடைக்கும். அதற்காகவே அவள் அப்படிச் சொல்லுகிறாள். என்றாலும், அதில் உண்மை உண்டு.

பழைய புஸ்தகங்களை எடுத்துப் பார்த்தால், வாசனைகளைப்பற்றி எவ்வளவோ விஷயங்கள் தென்படுகின்றன. முன் காலத்தில் எகிப்து தேசத்தினருக்குத் தெரிந்திருந்த விஷயங்கள் நம்மைத் திகைக்க வைக்கின்றன.

கிரீஸ் தேசத்து மக்கள் மிகவும் நாசூக்காகவும் சாமர்த்தியமாகவும் வாசனைத் தைலங்களை உபயோகித்தார்கள். அந்தக் காலத்துக் கிரேக்கப் பெண்களின் வழக்கத்தை இந்தக் காலத்துப் பெண்களும் என்றாவது கடைப்பிடிக்க மாட்டார்களா என்று வாசனைத் திரவிய வியாபாரிகளெல்லாம் ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வோர் அங்கத்துக்கும் ஒவ்வொரு வாசனைப் பொருளை அந்தப் பெண்கள் உபயோகித்தார்கள். தலைக்கு 'மஜோராம்' என்ற பச்சிலை கலந்த தைலம், முகத்துக்கும் மார்புக்கும் 'பாம்' மரக்காயிலிருந்து தயாரித்த எண்ணெய், கழுத்துக்கும் அதற்குக் கீழுள்ள பகுதிக்கும் தரை 'ஐவி' என்ற ஒருவகைக் கொடியின் சத்து, புஜத்துக்கு 'மிண்ட்' என்ற பச்சிலையின் எண்ணெய் இப்படிப் பல வாசனைகளை அவர்கள் பூசிக்கொண்டார்கள். ஆகவே, "கிரேக்கப் பெண்கள் போகும் இடமெல்லாம், அவர்களுக்குப் பின்னால் காற்றில் உலவும் வாசனை அங்குள்ளவரை மூச்சுத் திணறச் செய்யும்; ஆண்களெல்லாம் தங்கள் வேலையை விட்டு மெய்மறந்து போவார்கள்" என்று சொல்வதுண்டு.

தங்களுக்கு வாய்த்திருந்த இந்த அருமையான வாசனைக் கலையை ஒருகால் பெண்கள் இப்போது மறந்து போயிருக்கலாம். ஆயினும் இந்தக் காலத்து வாசனைத் தைலங்களைத் தயாரிக்கும் வியாபாரிகள் அந்தக் காலத்து வியாபாரிகளுக்குச் சளைத்தவர்கள் அல்ல. ஆண்களைத் தங்கள்

காப்பிரைட்: இந்தியா (21-1-'51), பம்பாய்.

வாசனைகளால் பைத்தியமாகச் செய்ய முடியாவிட்டாலும், சரியானபடி உபயோகிக்கும் ஓர் அழகிய பெண் மேலும் வசீகரம் அடையும்படி செய்யும் வாசனைகளை இந்தக் காலத்து வியாபாரிகளால் தயாரிக்க முடியும்.

மக்களின் இனம், குணம், மனோ பாவம் இவைகளுக்கு ஏற்றபடி வாசனைகளும் விதம் விதமாக இருக்கின்றன. உதாரணமாக, இந்தியா போன்ற தேசங்களில் மக்கள் பலமான வாசனையை விரும்புகிறார்கள். ஆனால், ஆங்கிலேயர்களுக்கு ரோஜா, 'லவண்டர்', 'வயலெட்' போன்ற மென்மையான வாசனைகளே உவப்பாயிருக்கின்றன. தவிர, அந்த வாசனைகளிலும் அவரவர் தோற்றத்துக்கும் குணத்துக்கும் ஏற்றவாறு வெவ்வேறு ரகங்களை உபயோகிக்கிறார்கள். வெள்ளை வெளேர் என்றிருக்கும் பெண் லேசான வாசனையைப் பூசிக்கொள்வாள்; சிறிது கருமை படர்ந்த பெண்ணோ அழுத்தமான வாசனையைப் பூசிக்கொள்வாள்.

வாசனை எப்படிப் போட்டுக்கொள்ள வேண்டுமாம் தெரியுமோ? ஒரு வியாபாரி இதுபற்றிச் சொல்வதைக் கவனியுங்கள்: "காலையில் லேசான இனிய மணம் தான் சிறந்தது. பந்து விளையாடுவது போன்ற சமயங்களில் விறு விறுப்பான மணம் ஏற்றது. உச்சி வேளையில் பிறர் மனத்தைக் கவர்ந்து தன் வசமாக்கும் நறுமணம் பொருத்தமானது. மாலையிலோ, இன்னவிதம் என்று சொல்ல முடியாததும் ஆடவர்களின் உள்ளங்களைப் பரவசப்படுத்துவதுமான உயர்ந்த வாசனை தகுந்தது" என்று அவர் சொல்லுகிறார்.

ஸெண்டுகள் நம் குணங்களைக் கூடப் பாதிக்கும் என்று அவர் கருதுகிறார். ஒருவகைத் திமிங்கிலத்தின் குடலிலிருந்து எடுக்கும் 'ஆம்பெர் கிரிஸ்' என்ற பொருள் பலமாய்க் கலந்த வாசனையை உபயோகிப்பது நம் காம உணர்ச்சியைத் தூண்டி விடுமாம். 'வயலட்' புஷ்பங்களின் இனிய மணம், சென்று போன காதல் சம்பவங்களை நினைவூட்டுமாம். கஸ்தூரியின் வாசனை மூளையைக் குழப்பிவிடுமாம். குங்கிலியத் தூபம் ஒருவனை மாய புருஷனாகத் தோற்றுவிக்குமாம். தேன், சாராயம், சவுக்க மரப் பூ, சீமைத் துத்தி, சிவனார் வேம்பு, குங்குமப் பூ, ஏலம், ஒருவகை நாணல் இவைகளின் மணமெல்லாம் சேர்த்துத் தயாரிக்கும் பழமையான 'குபீ' என்ற பிரபல ஸெண்டு, நம் கவலைகளைத் தீர்க்குமாம்; விலைமாதரை நாடிச் செல்லும் கணவனைக்கூட மீட்டுவித்து மனைவியிடம் அன்புகொள்ளச் செய்யுமாம். இந்தக் காலத்து வியாபாரி எவரேனும் தம் சரக்கு எதற்காவது இத்தனை சக்தி உண்டு என்று சொல்ல முடியுமா?

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த பெண்களைப்போலவே இன்றைப் பெண்களும் வாசனைகளை மாற்றி மாற்றி உபயோகிக்க வேண்டும். எப்போதும் ஒரே வாசனையை உபயோகிப்பதால் ஏற்படும் சலிப்பு உண்டாகாதிருக்க அதுதான் வழி. நம் உணர்ச்சிகள் மாறுவதற்கேற்றபடி, வாசனைகளை மாற்றுவதும் நலம். குறிப்பிட்ட ஒரு வாசனையையே உபயோகித்துப் பழகிவிட்டால், அந்த வாசனை சம்பந்தப்பட்ட வரையில் நம் மூக்கு மரத்துப் போகும். அதனால் மிதமிஞ்சி அதை நாம் பூசிக்

கொண்டு விடுவோம். அதன் பலத்த வாசனை மற்றவருக்குச் சகிக்க முடியாமல் போய்விடும். நம் மூக்கு மரத்துப் போகாதிருப்பதற்காகவும், வாசனைகளை நாம் மாற்றுவது நல்லது.

ஆளுக்கு ஆள் ரசாயன ரீதியில் தேகவாகு மாறுபடுகிறது. இதனால், ஒரே வாசனையை இரண்டு பேர் பூசும்போது, அது வீசும் மணம் வித்தியாசப்படுகிறது.

புட்டியில் இருக்கும்போது ஒரு ஸெண்டு வீசும் மணம் ஒருவருக்குப் பிடித்துவிட்டதாலேயே அதை அவர் வாங்கிவிடக்கூடாது. வாங்க விரும்புகிறவர் அந்த ஸெண்டைத் தம் மணிக்கட்டிலே பூசிச் சில நிமிஷம் பொறுத்து மணிக்கட்டை மோந்து பார்க்க வேண்டும். அப்போதும் அதன் மணம் இனிமையாய் இருந்தால்தான், அதை அவர் வாங்கலாம். இந்தக் காரணம் பற்றித்தான், ஸெண்டுகளைப் பிறருக்குப் பரிசு கொடுப்பது தவறு என்று சொல்லுகிறார்கள். புட்டியில் இருந்தபோது கமகமவென்று வீசிய நறுமணம், பரிசு பெறுபவரின் உடல்மீது பூசியதும் ஒரே நாற்றமாக மாறிவிடக்கூடும்.

உடம்பிலே நாடித் துடிப்பு வெளிப்படத் தெரியும் இடங்களில் வாசனையைப் பூசிக்கொண்டால் அது வெகு நேரம் வரைக்கும் போகாமல் நின்று மணம் வீசும். காதின் பின் பக்கம், கழுத்துப் பட்டை, பொட்டு, மணிக்கட்டு, உள்ளங்கை, முழங்கை, முழங்கால் ஆகிய இடங்களில் வாசனையைப் பூசுவது விசேஷம். நம்மிடம் யாராவது கை குலுக்கினால், நம் உள்ளங்கையின் வாசனை வெகு நேரம் வரைக்கும் அவரிடம் இருக்கும். முழங்காலுக்கு வாசனை பூசுவது பாரிஸ் பெண்களின் வழக்கம். அவர்கள் நடந்து சென்றால், "ஆகா! எவ்வளவு வசீகரமான பெண் இதோ நடந்து செல்கிறாள்" என்று, அக்கம்பக்கம் நிற்பவர்கள் நினைப்பார்கள். நீங்கள் சிறிது பஞ்சை எடுத்து ஒரு சொட்டு ஸெண்டை அதில் தெளித்து, மார்பகத்து ஆடைக்குள் செருகிக்கொண்டால், உங்கள் மீதிருந்து வெகு நேரம் வரைக்கும் வாசனை வீசும். வாசனை பூசிக்கொள்வதில் மிதமிஞ்சலாகாது; வாசனைப் புட்டியை அப்படியே உங்கள்மேல் கவிழ்த்துக்கொண்டு விடக்கூடாது. சகிக்க முடியாத அளவு அதிக வாசனை பூசுவதை விட, ஒன்றுமே பூசாதிருப்பது மேல்.

பெரிய புட்டியாக இருந்தாலும் உள்ளிருக்கும் அத்தர் நாளடைவில் காற்றாய்ப் போய்விடும். அப்படிப் போகாமல் இருக்க வேண்டும் என்றால், பெரிய புட்டியிலிருந்து கொஞ்சம் ஒரு சிறிய புட்டியில் ஊற்றி வைத்துவிட்டுப் பெரிய புட்டியின் வாயை மெழுகினால் அடைத்து வைப்பது நலம். அப்போது அது வீணாகாமல் வெகு நாள் இருக்கும்.

முகம் கழுவும் வாசனைநீருக்கும் இதெல்லாம் பொருந்தும். குளிக்கும்போது அதை உடம்பில் நன்றாய்த் தெளித்துக்கொண்டாலே போதும். கொலோன் என்னும் ஸெண்டில் மருந்துச் சரக்குகள்தான் அதிகம். பெப்பர்மிண்ட், ஆரஞ்சு, எலுமிச்சம் பழம் ஆகியவைகளின் எண்ணெயையும் பால்ஸின் இலைகள், ரோஸ்மேரி, லவண்டர் முதலியவைகளையும் அதில் கலக்கிறார்கள். இவைகளைச் சரியான முறையில் கலந்து கொலோன் என்ற ஸெண்டைத்

தயாரித்தால், அது நல்ல வாசனை யாயும் சுத்தமாயும் இருக்கும்.

பெரும்பாலும் ஸெண்டுகள் பிரான்ஸ் தேசத்திலிருந்துதான் வருகின்றன. மல்லிகை, ரோஜா, வயலட் முதலிய நறுமலர்ச் செடிகளும் ஆரஞ்சு மரங்களும் வைத்துப் பயிராக்கிய தோட்டங்களை இதற்கென்றே அங்கே பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். வாசனை தயாரிக்கும் தொழிற்சாலைகள் இந்தத் தோட்டங்களின் நடுவே இருக்கின்றன. ஒரு பவுண்டு ரோஜா அத்தர் வேண்டும் என்றால் அதற்கு ஐந்நூறு பவுண்டு ரோஜா மலர்கள் வேண்டும். மலர்களை ஜலத்தில் நனைத்துக் கசக்கிய பிறகு அதிலிருந்து சாறு வடிகட்டியோ அல்லது சிக்கலான வேறு ஒரு முறையை அநுஷ்டித்தோ அத்தர் எடுப்பார்கள்.

ஸெண்டு இனிமையான மலர்களின் மணத்தோடுமட்டும் இருந்தால் போதாது. தெம்பும் சுறுசுறுப்பும் அளிக்கக்கூடியதாயும் இருக்கவேண்டும். ஆகவே, கஸ்தூரி மானிடமிருந்து எடுக்கும் கஸ்தூரி, ஒரு வகைத் திமிங்கிலத்திலிருந்து எடுக்கும் ஆம்பெர்கிரிஸ், புனுகு பூனையிடமிருந்து எடுக்கும் புனுகு, பீவர் என்ற நீர்க் கீரியிடமிருந்து எடுக்கும் காஸ்டர் என்ற வாசனைச் சரக்கு இவைகளையும் புஷ்ப வாசனைகளோடு கலந்தே ஸெண்டுகளைத் தயாரிக்கிறார்கள். 'ஸ்பெர்ம் வேல்' என்ற திமிங்கிலம் மிதமிஞ்சி மீன்களைத் தின்பதால் வயிற்றில் கோளாறு ஏற்பட்டுக் கல்போல் ஒரு கட்டி தட்டிவிடுகிறது. இதிலிருந்தே ஆம்பர்கிரிஸ் கிடைக்கிறது. புனுகு பூனைகள் ஏராளமாய் அபிஸீனியாவில் இருக்கின்றன. அங்கிருந்தே புனுகு பெரும்பாலும் வருகிறது.

ஸெண்டுகளை இப்படிச் சிரமப்பட்டுத் தயாரிக்க வேண்டியிருப்பதால், அவைகளின் விலை மிகவும் அதிகமாயிருக்கிறது. அதனால் தற்காலத்தில் போலி ஸெண்டுகளை மலிவான விலைக்குத் தயாரிக்கும் வழிகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இயற்கையிலிருந்து கிடைக்கும் வாசனைச் சரக்குகளுக்குச் சற்றேறக் குறையச் சமமாகவே இருக்கின்றன இந்தப் போலி ஸெண்டுகள்.

ஸெண்டுகளின் வாசனை சீக்கிரத்தில் காற்றோடு காற்றாய்ப் போய் விடாதிருப்பதற்காக, கோந்து, பால்ஸாம் என்ற மருதாணிக் குழம்பு, 'ஒலியோ ரெஸின்' என்ற பசை இவைகளைக் கலக்கிறார்கள்; இவ்வளவுதான். இப்படித் தயாரித்த ஸெண்டுகளை நீங்கள் மிகவும் புத்திசாலித்தனமாக உபயோகிக்க வேண்டும்.

யார் யாருக்குச் சொந்தம்?

ஐம்பது வருஷங்கள் ஹாலந்தை ஆண்டு சமீபத்தில் காலமான வில்லேல்மினா என்ற ராணி பத்துவயதில் பட்டத்துக்கு வந்தாள். அந்த முடிசூட்டு விழாவின்போது, மண்டபத்தின் திரையைத் தூக்கி அவள் வெளியே பார்த்தாளாம். ஏக ஜனத்திரளாயிருந்தது. "அம்மா, இத்தனை ஜனங்களும் எனக்குச் சொந்தமா?" என்று கேட்டாள் சிறுமி.

ரீஜண்டாயிருந்த தாய், "இல்லை, கண்ணே; இல்லை. நீதான் இத்தனை ஜனங்களுக்கும் சொந்தம்" என்றாள்.

விவேகானந்தர் -- வாழ்வும் வாக்கும்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஞானச்சுடரை உலகெலாம் ஒளி வீசச் செய்த இந்த மகா புருஷரின் வாழ்வு தூய்மை மிக்கது; வாக்கு வன்மை பொதிந்தது.

குருவும் சிஷ்யனும்: பரமஹம்ஸரின் சிஷ்யரான பிறகுகூட விவேகானந்தருக்கு அவரிடம் முழு நம்பிக்கை ஏற்படவில்லை. 'இவரைவிட மேலான குருவிடம் உபதேசம் பெற வேண்டும்' என்று எண்ணினார். அப்போது காஜிபூருக்கு அருகில் ஒரு மலைக் குகையில் பாவ்ஹாரி ஸ்வாமிகள் என்று ஒரு மகாபுருஷர் வசித்து வந்தார். அவர் அற்புதமான பல சித்திகள் கைவரப் பெற்றவர் என்று ஒரு நாள் விவேகானந்தர் கேள்விப் பட்டார்; உடனே அந்த மகானைப் பார்க்க வேண்டும் என்று இவருக்கு ஆவல் மூண்டது. யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் நேராகப் பாவ்ஹாரி ஸ்வாமிகளிடம் போனார். அவர் இவரை மிகவும் அன்போடு வரவேற்று உபசரித்தார். இவர் தாம் பரமஹம்ஸருடைய சிஷ்யர் என்று சொன்னதும் பரமஹம்ஸரைப்பற்றி அவர் விசாரித்தார்.



அவருக்கு விஷயம் தெரியாது என்று விவேகானந்தர் எண்ணிக்கொண்டு ஆரம்பம் முதல் பரமஹம்ஸரைப்பற்றி விவரமாகச் சொல்லிக்கொண்டே போனார். அதைக் கேட்கக் கேட்கப் பக்தி மிகுதியால் பாவ்ஹாரி ஸ்வாமிகளின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்தோடியது.

விவேகானந்தருக்கு இது ஆச்சரியமாக இருந்தது. அதே சமயம் இவருடைய பார்வை, குகையில் மாட்டியிருந்த ஒரு படத்தின்மேல் சென்றது. அது பரமஹம்ஸருடைய படந்தான்! விவேகானந்தருக்கு என்னவோ மாதிரி ஆகிவிட்டது; "அடடா! இவருக்குப் பரமஹம்ஸரைப்பற்றி முன்பே நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட மகா



புருஷரே அவரைப் பூஜிக்கும் போது நாம் அவரை மதிக்காமல் இங்கே ஓடி வந்தோமே!'' என்று மிகவும் வருந்தினர். அதற்கு மேலே ஒன்றும் பேசாமல் பாவ்ஹாரி ஸ்வாமிகளை வணங்கி அவரிடம் விடை பெற்றுக்கொண்டார். பிறகு நேராகத் தட்சிணேசுவரம் வந்து பரமஹம்ஸரின் காலடியில் விழுந்து குழந்தைபோல் அழத் தொடங்கினர். பரமஹம்ஸர் புன் சிரிப்புடன் அவரைத் தூக்கி அன்போடு அணைத்து ஆறுதல் சொன்னர். —(வாழ்வு)

பக்தனின் லட்சணம்: பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவர் கள் மற்றவைகளை வெறுக்கவோ மறுக்கவோ கூடாது. இருந்தாலும் ஒரு சிறிய செடி மரமாகும் வரை யில் அதை வேலி போட்டுக் காப்பதுபோல் பக்தி முதிரும் வரையில் அதைக் காத்து வர வேண்டும். அதே சமயம் பல மார்க்கங்களைக் கடைப்பிடிப்பது தவறு. அப்படிச் செய்தால் பக்தி சாதனை உருப்படாமல் போய்விடும். சிலர் பரந்த நோக்கம் என்று சொல்லிக்கொண்டு பல மதங்களை யும் ஆதரிப்பார்கள். எந்தப் புது விஷயமாக இருந்தாலும் இவர்க ளுக்கு அதைக் கேட்டாக வேண்டு மென்று ஒரு வெறி இருக்கும். பொழுது போவதற்காகச் சிறிது நேரம் ஒன்றைக் கேட்பார்கள். பிறகு அதிலிருந்து இன்னொரு விஷயத்துக்குத் தாவுவார்கள். அபினி உண்டதுபோல் இப்படி ஒன்றை மாற்றி ஒன்றைப் படித்து மயங்குவார்கள். ''சிப்பியிலுள்ள புழு மாதிரி சாரத்தைமட்டும் கிரகிக்கும் தன்மை வேண்டும். அந்தப் புழு சுவாதி நட்சத்திரத் தின்போது கடலின் ஆழத்தி லிருந்து நீர்மட்டத்துக்கு வரும் அப்போது மேலிருந்து மழைத் துளி அதன் வாயில் விழுந்தால், அதை அப்படியே விழுங்கிக் கடலி லுள்ள தன் இடத்துக்குத் திரும்பி விடும். அது முத்தாகும் வரையில் அங்கேயே தங்கும்'' என்று பரம ஹம்ஸர் அடிக்கடி சொல்வார். இதுதான் சரியான பக்தனுக்குரிய லட்சணம். —(வாக்கு)

ஆச்சரிய அநுபவம்: பரம ஹம்ஸர் மகா சமாதி அடைந்த பிறகு விவேகானந்தருக்கு மடத் தில் இருக்கப் பிரியமில்லை. அரை யில் கட்டியிருந்த ஒரே துண்டோடு தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டு விட்டார். பல க்ஷேத்தி ரங்களைத் தரிசித்துக்கொண்டு ஒரு நாள் பிருந்தாவனம் வந்து சேர்ந்தார். அன்று யமுனையில் ஸ்நானம் செய்யப் போனர். அரையி லிருந்த துண்டை நன்ருகத் துவைத்துக் கரையில் உலர்த்தி விட்டு நீரில் இறங்கினர். ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பியபோது பார்த்தால் அதைக் காணவில்லை. எவ்வளவு தேடியும் அது கிடைக்க வில்லை. ஆடையின்றி எப்படி வெளியே போவது? 'இப்படியும் நேர வேண்டுமா, கடவுளே!' என்று மனம் நொந்தார். இருட்டுகிறவரை நீரிலேயே இருந்தார். கடைசியாக



அந்திமங்கலில் அருகில் இருந்த ஒரு காட்டுக்குள் போனார். பசியோ வயிற்றை வாட்டியது. 'கோவிந்தா' என்று பகவானின் நாமத்தை ஜபித்துக்கொண்டே ஒரு மரத்தடியில் அமர்ந்தார்.

அப்போது சற்றுத் தொலைவில் யாரோ ஓர் ஆள் வருவது தெரிந்தது. அவன் நேராக அவர் இருக்கும் மரத்தின் எதிரே வந்தான். அவர் முன்பின் பார்த்திராத அந்த ஆளின் கையில் ஒரு புதிய காஷாயத்துண்டும் ஒரு பாத்திரத்தில் சாப்பாடும் இருந்தன. அவன் அவரை வணங்கி மகிழ்ச்சியோடு, "ஸ்வாமி, உங்களைத்தான் தேடிக்கொண்டிருந்தேன். நல்லவேளை!" என்று சொல்லி அந்த இரண்டையும் அவரிடம் கொடுத்தான்.

விவேகானந்தருக்கு ஆச்சரியத்தால் மயிர்க்கூச்சு எடுத்தது; 'இது நிச்சயம் அந்தக் கோவிந்தனின் திருவிளையாடல்தான்! திரௌபதியின் மானத்தை அன்று காத்தது போல் இன்று என் மானத்தையும் அவனே காத்திருக்க வேண்டும்' என்று எண்ணி அவைகளை வாங்கிக்கொண்டார். —(வாழ்வு)

'ஏன், அப்பா?'

நச்சு நச்சென்று குழந்தைகள் கேள்வி கேட்பதால் பல பெற்றோர் சள்ளைப்படுகிறார்கள். நானுந்தான் ஒரு காலத்தில் இப்படிச் சள்ளைப்பட்டேன்.

மகன்: அப்பா, அந்த நாய் எங்கே போகிறது?

நான்: உலாத்தப் போகிறது.

ம: ஏன் உலாத்தப் போகிறது?

நா: அதன் இஷ்டம்.

ம: ஏன் இஷ்டப்படுகிறது?

நா: அது எனக்கு எப்படித் தெரியும்?

ம: ஏன் உனக்குத் தெரியவில்லை?

இப்படித் தொல்லைப்படுத்திக்கொண்டிருந்த அந்தப் பயலை நான் எப்படி மடக்கினேன், தெரியுமா? இப்போதெல்லாம் நாசமாய்ப் போகிற நாயைப் பார்ப்பதில் அவனை நான் முந்திக்கொள்கிறேன். பார்த்ததும், "நாய் எங்கே போகிறதடா?" என்று கேட்கிறேன்.

மகன்: உலாத்தப் போகிறது.

நான்: ஏன் உலாத்தப் போகிறது?

ம: அது வந்து, அது வந்து....

நா: ஏன் அது வந்து, அது வந்து....?

பயலுக்குச் சகிக்க முடியாமல் போய் என்னைத் தனியே விட்டு ஓடி விடுகிறான்! —'ஹைமான் கோல்ட்பெர்க்', 'அட்லாண்டிக் மன்த்லி'.

முனை உடைந்த கத்தி

கைலாஸ்நாத் காட்ஜு

****

கானன் டாயிலின் கதையில் வரும் ஷெர்லாக் ஹோம்ஸ் என்ற துப்பறியும் நிபுணர் தோற்றார், போங்கள்! இன்று வங்காள கவர்னராயிருக்கும் காட்ஜு, அன்று காங்கிரஸ் மந்திரியாயிருந்து துப்புத் துலக்கிய இந்த விவரத்தைப் படிக்கும் எவரும் வியப்புறாமல் இருக்க முடியாது.

****

ஐக்கிய மாகாணத்தில் டேராடூனுக்கும் மஸ்ஸூரிக்கும் நடுவில் ஸஹாரன்புர் என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கிருந்து பல ஊர்களுக்கு மோட்டார் கார், லாரி போக்குவரத்து விசேஷமாக உண்டு. அந்த நாளில் (1934) மோட்டார் டிரைவர்களில் பெரும்பாலோர் முஸ்லிம்களோ சீக்கியரோ தான். ஒரு நாள் பிற்பகல் சில முஸ்லிம் டிரைவர்களுக்கும் சீக்கிய டிரைவர்களுக்கும் சச்சரவு ஏற்பட்டது. அது முற்றி இரண்டு முஸ்லிம்கள் கொலையுண்டார்கள். எங்கும் ஒரே பரபரப்பாக இருந்தது. இதைக் கவனித்துக்கொண்டிருந்த ஒரு சீக்கியப் பிரமுகர், "எங்கே இது வகுப்புக் கலவரமாக மாறிவிடுமோ?" என்று பயந்து நேராகப் போலீஸ் அதிகாரியிடம் ஓடினார். நடந்ததைச் சொன்னார். அதிகாரி அவரை ஜில்லா மாஜிஸ்திரேட்டிடம் அழைத்துப் போய் எல்லாவற்றையும் தெரிவித்தார். கலவரம் நேராதபடி உடனே தக்க நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டார்.

போலீஸ் விசாரணையின்போது அநேக முஸ்லிம்கள், "இது இரண்டு சீக்கியர்கள் சேர்ந்து செய்த காரியம்" என்று சாட்சியம் சொல்லி, "இந்த ஆளும் அதில் ஒருவன் தான்" என்று அந்தச் சீக்கியப் பிரமுகரையே சுட்டிக் காட்டி ஆணையிட்டார்கள். இவ்வளவு தெளிவாக அவர்கள் சொல்லும்போது போலீஸார் சும்மா இருப்பார்களா? அவரையும் இன்னொருவரையும் கைது செய்தார்கள். ஒருவர் பெயர் அஜித் சிங்; இன்னொருவர் பெயர் மங்கத் சிங் என்று வைத்துக்கொள்ளுங்களேன். மங்கத் சிங்தான் அந்தச் சீக்கியப் பிரமுகர்; அவர், பாவம், "எனக்கு ஒன்றுமே தெரியாதே! நான் நிரபராதி" என்று மன்றாடினார். அஜித் சிங்கோ, "இரண்டு பேரையும் கொன்றது நான்தான்" என்று சொன்னார். கொலை நடந்த இடத்தில் போலீஸார் போய்ப் பார்த்தார்கள். மழை பெய்திருந்ததால் தரை ஈரமாக இருந்தது. பாட்டையின் ஓரம் மண்ணில் ஒரு கத்தி விழுந்து கிடந்தது. கலவரத்தின்போது அஜித் சிங்கின் கையிலிருந்து தவறி விழுந்த கத்தி அது. ஆனால் மங்கத் சிங்கின் கத்தி அகப்படவேயில்லை.

காப்பிரைட், இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜனவரி '51), சென்னை.

செஷன்ஸ் ஜட்ஜின் முன் வழக்கு விசாரணைக்கு வந்தது. அஜித் சிங் அந்த இரண்டு முஸ்லிம்களைத் தாமே கொன்றதாகவும் தம்மைக் காத்துக்கொள்ளவே அப்படிச் செய்ததாகவும் சொன்னார். மங்கத் சிங் மறுபடியும் தாம் நிரபராதி என்று சொல்லி மன்றாடினார். ஆனால் இரண்டு பேருக்கும் செஷன்ஸ் ஜட்ஜ் பல வருஷச் சிறைத்தண்டனை விதித்துவிட்டார். ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தும் அந்தத் தண்டனையே ஊர்ஜிதமாகி விட்டது. கொலையுண்ட ஓர் ஆளின் மேல் பட்ட காயம் கூர்மையான கத்தியால் ஏற்பட்டது என்றும் இன்னொருவரின் மேல் பட்டது கூர்மை மழுங்கின ஓர் ஆயுதத்தால் ஏற்பட்டது என்றும் பிரேத பரிசோதனை செய்த வைத்தியர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். "இதையும் பெரும்பாலான சாட்சிகளின் வாக்குமூலத்தையும் கவனித்தால், நிச்சயமாக இரண்டு பேர் இதில் கலந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதனால் கொலையுண்ட ஓர் ஆளின்மேல் பட்ட ஒழுங்கான காயம் அஜித் சிங்கின் கைவேலை என்றும், இன்னோர் ஆளின்மேல் கண்டபடி கிளறிவிட்டது போல் இருந்த காயம் மங்கத் சிங்கின் கைவேலை என்றும் நிச்சயமாகத் தெரிகிறது. ஆகவே, அஜித் சிங் தாம் மட்டுமே குற்றவாளி என்று சொல்வது முழுப் பொய்" என்று ஹைகோர்ட் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்கள்.

1936 - இல் மங்கத் சிங் ஐக்கிய மாகாண கவர்னருக்கு, "நான் நிரபராதி; அநியாயமாக இப்படித் தீர்ப்பளித்திருக்கிறார்கள். இதை மாற்றவேண்டும்" என்று முறையிட்டுக்கொண்டார். வழக்கம் போல் ஜில்லா மாஜிஸ்திரேட், போலீஸ் கமிஷனர் இவர்கள் மூலம் இந்த மனு கவர்னருக்குக் கிடைத்தது. அந்த அதிகாரிகள் இருவரும் இதை அவருக்கு அனுப்பும்போது, "மங்கத் சிங்கை விடுவிக்கவேண்டும்" என்று சிபாரிசு செய்தார்கள். ஜில்லா மாஜிஸ்திரேட், "வழக்கு விசாரணைக்கு முன்னேயே வகுப்புத் துவேஷம் காரணமாகச் சில முஸ்லிம்கள் மங்கத் சிங்கின்மேல் வீணாகக் கொலைக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள் என்று எனக்குப் பட்டது. ஆனால் மங்கத் சிங்கை விட்டால் அஜித் சிங்கின்மேல் தொடுத்த வழக்குப் பலவீனமாய்ப் போய், அதனால் வகுப்புக் கலவரம் நேருமே என்று பயந்தேன். ஆகையால் நான் மங்கத் சிங் நிரபராதி என்று தெரிந்தும் அவரையும் குற்றவாளியாக்கி வழக்குத் தொடுக்கவேண்டியிருந்தது" என்று பட்டவர்த்தனமாகத் தெரிவித்தார். ஜில்லா மாஜிஸ்திரேட் ஓர் இந்தியர்; நேர்மையானவர். போலீஸ் கமிஷனர் ஓர் ஆங்கிலேயர். அவர் பெயர் பி. டபிள்யூ. மார்ஷ். பொதுஜனங்களோடு நெருங்கிப் பழகி நன்றாக அநுபவப்பட்டவர். அவரும், "ஹிந்து, முஸ்லிம் இரண்டு சமூகத்தையும் சேர்ந்த பல பிரமுகர்களை விசாரித்ததில் மங்கத் சிங்கை வகுப்புத் துவேஷம் காரணமாகச் சில பேர் இப்படி மாட்ட விட்டிருக்கிறார்கள் என்று நிச்சயமாகத் தெரிந்தது. அதனால் அவர் நிரபராதி என்பதில் சந்தேகமேயில்லை" என்று பலமாகச் சிபாரிசு செய்தார். அப்படியிருந்தும் அப்போது கவர்னராக இருந்த ஸர் ஹாரி ஹேக், 'வதந்திகளையும் ஒரு சாராரின் அபிப்பிரா

யத்தையும் ஆதாரமாகக் கொண்டு நீதிஸ்தலத்தாரின் தீர்ப்பை மீறி ஒன்றும் செய்யக் கூடாது' என்று தீர்மானித்து, மங்கத் சிங்கின் மனுவை நிராகரித்துவிட்டார்.

1937 ஜூலை மாதம் காங்கிரஸ் மந்திரி சபை பதவி ஏற்றதும் பொது ஜனங்களுக்குப் புதிய நம்பிக்கை ஏற்பட்டது. இப்போது நியாயம் கிடைக்கும் என்று எல்லாரும் எண்ணினர்கள். மங்கத் சிங், "நான் நிரபராதி; என்னை விடுவிக்க வேண்டும்" என்று மறுபடியும் முறையிட்டுக்கொண்டார். முன் போலவே ஜில்லா மாஜிஸ்திரேட்டும் கமிஷனரும் அதோடு சிபாரிசுக் கடிதம் எழுதி அனுப்பினர்கள். கமிஷனர், "மங்கத் சிங்குக்குத் தண்டனை விதித்தது சுத்த அநியாயம்: இது என் உறுதியான அபிப்பிராயம்" என்று எழுதியிருந்தார். அப்போது நான் ஐ. மா. சட்ட மந்திரியாக இருந்தேன். இந்த வழக்குச் சம்பந்தமான தஸ்தாவேஜிகளைப் பார்த்ததும், "ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கு மங்கத் சிங் நிரபராதி என்று தெரிந்தும் ஏன் அவர்மேல் வழக்குத் தொடுத்தார்?" என்றுதான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனல் தொடுத்தாயிற்று; அப்புறம் என்ன செய்வது? மேலே நடப்பதெல்லாம் சாட்சிகளைப் பொறுத்ததுதானே?

இந்தத் தஸ்தாவேஜிகளைப் புரட்டும்போது முக்கியமான ஒரு விவரம் எனக்குக் கிடைத்தது. கொலை நடந்த இடத்தில் போலீஸார் புலன் விசாரிக்கும்போது எழுதின விவர ஜாபிதாதான் அது. அதில், அங்கே கிடந்த அஜித் சிங்கின் கத்தியைப்பற்றி (ஜிஸ்கீ நோக் டூடி ஹுயி ஹை) 'முனை உடைந்த கத்தி' என்று தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது. குறுக்கு விசாரணையின்போது சிவில் ஸர்ஜன், 'கொலையுண்ட ஓர் ஆளின்மேல் கிளறிவிட்டது போல் இருக்கும் காயமும் இந்தக் கத்தியாலேயே ஏற்பட்டிருக்க முடியும்' என்று தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்தார். ஆனல் அதற்குமேல் யாரும் விசாரித்ததாகவோ அக்கறை எடுத்துக் கொண்டதாகவோ தெரியவில்லை. தீர்ப்பிலும் அதைப்பற்றி ஒன்றுமே காணவில்லை. ஆனல் எனக்குமட்டும் இதுதான் மிகவும் முக்கியமான விவரம் என்று பட்டது. நிலைமை இதுதான்:—

(1) இது அஜித் சிங்கின் கத்தி என்று தெரிகிறது.

(2) அஜித் சிங்கிடம் ஒரே ஒரு கத்திதான் இருந்தது; வேறு ஒன்றும் இல்லை.

(3) ஒழுங்கான காயம் பதிந்த ஆளை, இந்தக் கத்தியால்தான் அஜித் சிங் கொன்றூர். அந்தக் காயமோ வைத்தியர்களின் அபிப்பிராயப்படி கூர்மையான கத்தியால் ஏற்பட்டது என்று ருஜுவாகியிருக்கிறது.

(4) கொலை நடந்து கொஞ்ச நேரத்துக்கெல்லாம் போலீஸார் வந்து பார்த்தபோது மணலில் அஜித் சிங்கின் கத்தி கிடந்தது; அப்போது அதன் முனை உடைந்திருந்தது. 'கொலை நடந்த பிறகு உடைந்ததா, கீழே விழுந்த பின் உடைந்ததா?' என்று யாரும் விசாரித்ததாகவோ பிரஸ்தாபித்ததாகவோ தெரியவில்லை.

(5) கொலையுண்ட இன்னேர் ஆளின்மேல் கிளறிவிட்டதுபோல் இருந்த காயம் உடைந்த முனையுள்ள

இந்தக் கத்தியினால் ஏற்பட்டிருக்க முடியும் என்று தெரிகிறது.

இவைகளையெல்லாம் கவனித்தால் அஜித் சிங், "அடுத்தடுத்து நானே இரண்டு பேரையும் கொன்றேன்" என்பது உண்மையாகத்தான் இருக்கவேண்டும். அப்படியானால் முதல் ஆசாமியைக் கொன்றுவிட்டுக் கத்தியை எடுக்கும்போதோ, நடுவே நடந்த சச்சரவின்போதோ கத்தியின் முனை உடைந்திருக்க வேண்டும். ஆனால் ஒன்று நிச்சயம்: இரண்டாம் ஆசாமியைக் கொல்வதற்கு முன்னால்தான் இது நேர்ந்திருக்க வேண்டும்.

இன்னொரு விசேஷம்: கொலை நடந்த இடத்திலோ அதற்கு அருகிலோ எவ்வளவு தேடியும் வேறு எந்தக் கத்தியோ ஆயுதமோ கிடைக்கவில்லை.

இதோடு மங்கத் சிங்கின் வாக்குமூலத்துக்கு ஆதாரமாகப் பலமான அத்தாட்சி வேறு இருந்தது. 'ஸெஷன்ஸ் கோர்ட்டு, ஹைகோர்ட்டு இரண்டிலும், உடைந்த முனையுள்ள கத்தியைப்பற்றிய விவரம் அடங்கிய ஜாபிதாவைப் பற்றி யாராவது கோர்ட்டாருக்குக் கவனப்படுத்தியிருந்தால் நீதிபதிகள் வேறு விதமாகத் தீர்ப்பு அளித்திருப்பார்கள்' என்று எனக்கு நிச்சயமாகப் பட்டது. இந்த ஜாபிதாதான் மிகவும் முக்கியமானது. 'வழக்கின்போது போலீஸ் வசம் கத்தி இருந்தபோது எதிரிதரப்பில் யாராவது அதை உடைக்கச் சொல்லியிருக்கலாம்' என்று சொல்வதற்கும் இடமே இல்லை; கொலை நடந்த அதே தேதியன்று ரிஜிஸ்தரில் கத்தியின் விவரத்தைக் குறித்திருந்தார்கள். நீதி இலாகா காரியதரிசியும் நானும் தஸ்தாவேஜிகளை எல்லாம் பரிசோதித்து முடிக்கக் கொஞ்ச நாள் ஆயிற்று. அதற்குள் ஸஹாரன்புரைச் சேர்ந்த அநேக சீக்கியப் பிரமுகர்கள் மங்கத் சிங்கின் சார்பாக என்னைப் பேட்டி காண வந்தார்கள். "பொதுவாக முஸ்லிம், சீக், ஹிந்து சமூகத்தைச் சேர்ந்த எல்லாருக்குமே அவர் நிரபராதி என்றுதான் அபிப்பிராயம்" என்று அவர்கள் சொன்னார்கள். நான், "வாயால் சொல்வதைவிட அவர்கள் கைப்பட அப்படி எழுதி அனுப்பினால் நல்லது" என்றேன். அதே மாதிரி இரண்டொரு வாரத்துக்குள் ஸஹாரன்புரைச் சேர்ந்த 12 ஹிந்து பிரமுகர்களும் 12 முஸ்லிம் பிரமுகர்களும் கையெழுத்திட்ட ஒரு மகஜர் எனக்குக் கிடைத்தது. ஸஹாரன்புர் ஜில்லா போர்டு சேர்மன்கள், ஜில்லா, நகர முஸ்லிம் லீக், காங்கிரஸ் கமிட்டியின் தலைவர்கள், உப தலைவர்கள் இப்படிப் பல ஸ்தாபனங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் அதில் கையெழுத்திட்டிருந்தார்கள். ஆற அமர விசாரித்த பின் மங்கத் சிங்கை விடுவிக்கும்படி ஐ. மா. சர்க்கார் உத்தரவிட்டார்கள். அவரும் விடுதலையானார்.

ஆனால் ஐ. மா. சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது ஒரு முஸ்லிம் அங்கத்தினர் இதைப்பற்றிய முழு விவரமும் தெரிந்துகொள்ளாமல் மறுபடியும் இதைக் கிளறிவிட்டு, "இப்படிச் செய்தால் வகுப்புத் துவேஷந்தான் முற்றும். தண்டனையை ரத்து செய்த காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை" என்றார்.

நான், "இந்த விஷயத்தில் நீதிஸ்தலத்தின் தீர்ப்புச் சரியில்லை.

ஜில்லா அதிகாரிகளின் அபிப்பிராமும் இதுதான். அதனால்தான் சர்க்கார் மங்கத் சிங்கை விடுதலை செய்தார்கள்" என்றேன். ஆனால் அந்த முஸ்லிம் அங்கத்தினருக்கு இந்தப் பதில் திருப்தியாகப் படவில்லை. "நீதி நிர்வாகத்தில் சர்க்கார் இப்படிக் குறுக்கிடுவது சுத்த அநியாயம்" என்று பிரமாதமாக வாதிக்க ஆரம்பித்துவிட்டார்; இது சம்பந்தமாக விவாதம் நடத்த ஒரு நாள் ஒதுக்கும்படி ஓர் ஒத்தி வைப்புப் பிரேரணையும் கொண்டு வந்தார்.

விவாதத்தின்போது நான் எல்லாத் தகவல்களையும் விவரமாகச் சொல்லி, உடைந்த முனையுள்ள அந்தக் கத்தி சம்பந்தமான ஜாபிதாவைப்பற்றியும் குறிப்பிட்டேன். சபையில் இருந்த கலவரம் அடங்கி எல்லாரும் நான் சொல்வதைக் கூர்ந்து கேட்டார்கள். அப்போது நான், "நீதி நிர்வாகத்தில் ஏதாவது தவறு நேர்ந்தால் அதைத் திருத்தித் தண்டனையை ரத்து செய்வது சர்க்காரின் கடமை. இதனால் வகுப்புத் துவேஷம் வளரும் என்று பயப்பட வேண்டியதில்லை" என்று சொன்னேன். ஸஹாரன்பூர் முஸ்லிம் லீக் பிரமுகர்கள் கையெழுத்திட்ட விண்ணப்பத்தையும் படித்துக் காட்டினேன்.

கடைசியில் விஷயம், ஊதி விட்ட பலூன் பட்டென்று வெடித்த கதை ஆகிவிட்டது. 'இதற்கா இவ்வளவு பிரமாதம்!' என்று சபையில் எல்லாரும் பேசிக்கொண்டார்கள். விஷயத்தைக் கிளறி விட்ட முஸ்லிம் அங்கத்தினர் கப்சிப் என்று உட்கார்ந்துவிட்டார்.

நல்லவரும் வெண்ணெயும்

நல்லவர்கள் வெண்ணெயைப் போன்றவர்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் தான் சூடுபட்டு உருகுவது வெண்ணெய்; பிறரின் வெம்மையைக் கண்டு உருகுவார்கள் நல்லவர்.

—அலங்கார சாஸ்திரம்

அசோக மலர்

பாரதநாட்டு இலக்கியத்திலும் சிற்பத்திலும் சமய நூல்களிலும் அசோக மலரின் மகிமையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெண்மையான அசோக மலர் தந்திர சாஸ்திரத்தில் கூறியுள்ள செயல்களுக்குப் பயன்படுவது என்றும், செம்மலர் காமத்தை வளர்ப்பது என்றும் கல்பநூல் கூறுகிறது. காமதேவன் தன் ஐங்கணைகளில் ஒன்றாக அதற்கு இடம் கொடுத்தான். கந்தருவரும் யட்சர்களும் அசோக மரத்தின் வாயிலாகக் காமனை வழிபட்டு மதனன் விழாக் கொண்டாடினார்கள். செம்மையான அசோக மலரிடம் புது நாட்டுப்பெண் போன்ற அழகும் பெருமையும், தூய்மையும் மென்மையும் பொலிகின்றன. வால்மீகியும் காளிதாசனும் பிற்காலத்துக் கவிவாணர்களும் அதன் எழிலை அற்புதமாக வர்ணித்திருக்கிறார்கள்.

—ஹஜாரிபிரஸாத் த்விவேதி

சிகரெட் கொள்ளி

தீன்னஞ் சிறு கொள்ளிக்கட்டை போன்ற சிகரெட்டை அணைக்காமல் எறிவது கொஞ்சமும் சரியல்ல. சிகரெட் நுனியில் கனன்றுகொண்டிருக்கும் தீயின் உஷ்ணம் 800 முதல் 1,200 டிகிரி பாரன்ஹீட் இருக்கிறது. தீப் பிடித்துக்கொள்ளக் காகிதத்துக்கு 450 டிகிரியும் மரத்துக்கு 475 டிகிரியும் போதும் என்பதை இங்கே நீங்கள் கவனிக்கவேண்டும்.

'படுக்கையில் சிகரெட் குடிக்காதே' என்று அமெரிக்காவில் ஓயாமல் எச்சரிக்கிறார்கள். அப்படியிருந்தும், அதை லட்சியம் செய்யாமல், படுக்கையில் சிகரெட் குடித்து அப்படியே தூக்கத்தில் ஆழ்ந்ததால், 2,500 அமெரிக்கர் சமீபத்தில் தங்களுக்கே கொள்ளி வைத்துக்கொண்டு மாண்டார்கள். அவர்களில் பலர் தாங்கள் படுத்த கட்டிடங்களையும் சாம்பலாக்கி விட்டுப் போய்விட்டார்கள்.

ஆஸ்பத்திரிகள், அறைகளை வாடகைக்கு விடும் வீடுகள், ஹோட்டல்கள் இப்படிப் பல இடங்களில் சிகரெட் கொள்ளியால் பல தீ விபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன. ஆகவே, சிகரெட் பிடிப்பவர் சில ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(1) சிகரெட் குடித்த மிச்சத்தைக் கையால் தேய்த்தோ, காலால் அழுத்தியோ அணைத்துவிட்டே எறியுங்கள்.

(2) சிகரெட் நுனி எரிந்துகொண்டிருக்கும்போது தானாகவே அது உள்ளே விழுந்து விடக் கூடியபடியோ, அணைந்துவிடக் கூடியபடியோ அமைந்த 'ஆஷ்-டிரே'யைத் தவிர வேறு எங்கும் அதை வைக்காதீர்கள்.

(3) 'புகை குடிக்காதே' என்ற எச்சரிக்கை போட்டிருக்கும் இடங்களில் குடிக்காதீர்கள்.

(4) ஜன்னல் அல்லது மோட்டார் காரிலிருந்து சிகரெட் கொள்ளியை எறியாதீர்கள்.

(5) தாழிட்ட அறைகளுக்குள் சிகரெட் குடிக்காதீர்கள்.

(6) கர்ப்பூர தைலம், பெட்ரோல் போன்ற எளிதில் தீப் பற்றக்கூடிய பொருள்களின் அருகே சிகரெட் குடிக்காதீர்கள்.

(7) படுக்கையில் - அதுவும் தனியே இருக்கும்போது - ஒருபோதும் சிகரெட் குடிக்காதீர்கள்.

—ஸி. லெஸ்டர் வாக்கர், 'யுவர் லைப்.'

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.

கேள்வி: நம் தலைவர்கள் கூடக் கோவிலுக்குப் போகிறார்களா?

பதில்: ஆம்; அஸ்திவாரக்கல் நாட்டி மாலையை முதலில் அடித்துக் கொண்டு போவதன் மூலம் கடவுளையே தோற்கடிப்பதற்காக.

* * *

கே: கிராமத்துக் கிணறு என்பது என்ன?

ப: சினிமாப்படத்தில் அது ஜலம் இல்லாத வெறும் பள்ளம். அதைச் சுற்றிச் சித்திர வேலைப்பாடெல்லாம் செய்த கைபிடிச்சுவர் இருக்கும். அங்கே கிராமத்துப் பெண்கள் பானையோடு போவார்கள். அலைந்து திரிகிற நகரத்துப் பையன்களின் தாகத்தைத் தணிக்க வேண்டாமா? அதற்காகவே அந்தப் பானை.

* * *

கே: ஐக்கிய அமெரிக்கா இல்லாத ஐக்கிய நாடுகளின் சபை எப்படி இருக்கும்?

ப: முதல் இல்லாத வியாபாரமாய்த்தான்.

* * *

கே: முட்டாள் புத்திசாலியைப் போலத் தோற்றுவது எப்போது?

ப: அவன் காங்கிரஸ் மந்திரியானால்.

*

கே: நேரு கழுதை சவாரி செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

ப: சவாரி செய்கிறாரே! இந்தக் காலத்துக் காங்கிரஸ்பின் வேறு என்ன? அது நகருவதில்லை, புரிந்து கொள்வதில்லை; சும்மா உதைக்கிறது.



காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: ஜனவரி '51), பம்பாய்.

கே: இன்று உலகத்தில் ஆடம்பரமான நாடு எது?

ப: இந்தியா! வேதனை தரும் வறுமைக்கிடையே இங்கே ராஜாக்களும் முதலாளிகளும் யானைகளும் குரங்குகளும் யாதொரு தடையுமின்றி நாட்டின் வளத்தை உண்டு கொழுத்து வளர்வதைப் பார்க்கிறோம். நம்மிடம் காலியான கோட்டை கொத்தளங்களும் அரண்மனைகளும் இருக்கின்றன. பணக்காரக் கோவில்கள் கூடக் கடவுளில்லாமல் காலியாக இருக்கின்றன.

செல்வத்திலே கொழிக்கும் அமெரிக்காவிலே நமக்கு உள்ள போக போக்கியங்கள் சில இல்லை. கோடீசுவரர்கள் கூடத் தங்கள் பாத்திரத்தைத் தாங்களே கழுவிக்கொள்ளவேண்டும். தம் கையே தமக்கு உதவியாக வாழ்கிறார்களே தவிர, பிறருக்குத் தாம் வேலை செய்வது இல்லை. இங்கே பணக்காரர் வீடுகளில் எத்தனை வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்!

* * *

கே: இந்தியாவின் வீதிகளில் திடகாத்திரமுள்ள பிச்சைக்காரர்கள் நிரம்பியிருக்கிறார்களே; ஏன்?

ப: சட்டசபைகளில் செவிடர்களும் ஊமைகளும் நிரம்பியிருப்பதனால்.

*

கே: இங்கிலாந்தில் பல பெண்கள் கடைகளில் ஜேபியடிப்பதைப்பற்றிக் கேட்கிறோம்; இந்தியாவில் அப்படி இல்லையே! அதற்கு என்ன காரணம்?

ப: இந்தியாவில் பெண்கள் வீட்டில் அந்த வேலையைச் செய்கிறார்கள். இங்கே கல்யாணமான பெண்கள் ஜேபியடிக்க வீட்டுக்கு வெளியே போகவேண்டிய அவசியமில்லை யென்பதை மறந்துவிட்டீர்களே!

* * *

கே: நான் என்பது என்ன?

ப: கடவுளின் ஒரே பகைவன்; பிருந்தாவனமாயிருந்த பூலோகத்தைச் சுடுகாடாக்கின பேய்.

* * *

கே: எவ்வளவு காலம் வெள்ளைக்காரன் ஆசியாவை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பானென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப: கறுப்பு மனிதன் அணுக்குண்டு உற்பத்தி செய்யத் தொடங்கும் வரையில்.

ஸோவியத் செல்வாக்கு



ருஷியாவிலும் அதன் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளிலும் ஸோவியத் யூனியனின் ஆட்சியே நடக்கிறது. மற்ற ஐரோப்பிய நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள், ஸோவியத் யூனியனிடம் பக்தி செலுத்துகின்றன. ஆகவே, ஐரோப்பாவுக்கே அபாயம் ஏற்பட்டிருப்பதாக அமெரிக்கரும் ஆங்கிலேயரும் அஞ்சுகிறார்கள்.

—'நியூ யார்க் டைம்ஸ்'



புதுமையான கல்லூரி

டி. ஆர். மில்னர்

பிரிட்டனில் ஸ்டாபோர்டுஷயர் என்ற பகுதி ஒன்று இருக்கிறது. அதில் 'சூளை' (பாட்டரீஸ்) என்று வழங்கும் பிரதேசத்தில் சென்ற ஆண்டு ஒரு புதிய யூனிவர்ஸிடி காலேஜ் முளைத்திருக்கிறது. கல்வி கற்பிப்பதில் இங்கே ஒரு புதிய முறை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஒரு கலை பயில்பவர் மறு கலை பயில்பவரோடு சேராதபடியா நடக்க வேண்டும் கல்லூரிகள்? ஏன் எல்லாரும் சேர்ந்து பழக இடம் இருக்கக் கூடாது? இந்த நோக்கத்துடன் தொடங்கியிருப்பது இந்தக் கல்லூரி. இந்தக் கட்டுரையாளர் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையின் கல்வி அநுபந்த ஆசிரியர்களுள் ஒருவர்.

இந்தப் பகுதியில் ஆறு நகரங்கள் இருக்கின்றன. அந்த நகரத்து நிர்வாகிகள் யாவரும் சேர்ந்து தமக்கெனவே ஒரு சர்வகலாசாலையை நிறுவவேண்டுமென்று பல ஆண்டுகளாக ஆவல் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்களுடைய ஆவல் நிறைவேறத் தொடங்கியிருக்கிறது. ஆக்ஸ்போர்டு பாலியல் காலேஜில் ஆசிரியராக இருந்த லார்டு லிண்ட்ஸே என்ற அறிஞர், முதல் பிரின்ஸிபாலாக அமர்ந்திருக்கிறார். சமூகத்தில் கல்வி எப்படி அமைய வேண்டும் என்பதுகுறித்துத் திட்டமான கருத்துடையவர் அவர். லார்டு லிண்ட்ஸேயின் நோக்கங்களையே ஆதாரமாகக் கொண்டு இந்தக்

காப்பிரைட்: பிரிட்டிஷ் இன்பர்மேஷன் (ஆங்கிலம்), ஈஸ்டர்ன் ஹவுஸ்,
மான்ஸிங் ரோடு, புது டில்லி.

காலேஜ் நடந்து வருகிறது. ஸ்டோக் ஆன் ட்ரெணட் என்ற நகரத்தில் இந்தக் காலேஜ் அமைந்திருக்கிறது. பழைய சர்வகலாசாலை முறைகளையும் புதிய முறைகளையும் இணைத்து ஏற்படுத்திய ஒருவகையில் இந்தக் காலேஜில் கல்வி கற்பிக்கிறார்கள். கல்வி கற்பவர்களைப் பூரண மனிதர்களாக்காமல், ஒவ்வொரு துறையில் நிபுணர்களாக்கும் முறை பல சர்வகலாசாலைகளில் இருக்கிறது. இதனால் ஒரே ஒரு விஷயத்தில் அறிவும், மற்ற விஷயங்களில் அறியாமையும் ஏற்படுகின்றன. இது மிகவும் அபாயகரமானது. சிந்தனா சக்தியை விருத்தி பண்ணுவதே கல்வியின் முதல் நோக்கமாக இருக்க வேண்டுமென்பது லார்டு விண்ட்ஸேயின் கருத்து. மற்றச் சர்வகலாசாலைகளில் உள்ள மாணக்கர்கள் மூன்று வருஷங்களில் பட்டம் பெறுகிறார்கள். இங்கேயோ கூட ஒரு வருஷம் கல்வி பயில வேண்டும்; நான்கு வருஷங்கள் படிக்கவேண்டும். முதல் வருஷத்தில் மூன்று காலப் பகுதிகள். அடிப்படையான அறிவுக்குரிய சொற்பொழிவுகள் அந்தக் காலத்தில் நடைபெறுகின்றன. இவற்றை எல்லா மாணக்கர்களும் கட்டாயம் கேட்கவேண்டும். இந்தச் சொற்பொழிவுகளின் மூலம் உலகத்து அறிவும் சிந்தனையும் எவ்வாறு முளைத்து வளர்ந்து வருகின்றன என்பதை உணர்த்துகிறார்கள். இன்னும் எப்படி வளரும் என்பதையும் அவற்றால் உண்டாகும் பயனையும் ஆராய்கிறார்கள்.

முதல் வருஷத்தின் முதற்பகுதியில் மனிதனும் அவனைச் சுற்றியுள்ள பொருள்களும் பற்றிய அறிவைத் தரும் சொற்பொழிவுகள் நடைபெறும். இரண்டாம் பகுதியில் மேல்நாட்டு நாகரிகத்தின் வளர்ச்சியும் இயல்பும்பற்றிய பிரசங்கங்களும், மூன்றாம் பகுதியில் விஞ்ஞானம், அரசியல், கலை, சமூகம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட புரட்சிகளைப் பற்றிய பிரசங்கங்களும் நிகழும்.

இந்த முதலாண்டு ஆனவுடன் எல்லா மாணக்கர்களுக்கும் ஒரு பரீட்சை நடைபெறும். அந்தப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பிறகு மாணக்கர்கள் தங்கள் தங்களுக்குரிய துறைகளில் புகுவார்கள். பின் மூன்று வருஷங்களிலும் அவர்களுக்கு விருப்பமான பாடங்களில் ஒருமைப்பாட்டுடன் ஈடுபடும்படி செய்கிறார்கள். அப்போதுகூட மறந்தும் புறம் செல்லாத பயிற்சி என்ற சிறை அவர்களுக்கு இராது. ஒவ்வொரு மாணக்கனும் மொத்தத்தில் ஐந்து பாடங்களைப் படிக்கவேண்டும். அந்த ஐந்தில் இரண்டு அல்லது மூன்றில் விசேஷப் பயிற்சி பெறுவார்கள். மூன்று பகுதிகளாகத் திட்டமிட்ட பாட வகைகளில் ஒவ்வொரு பகுதியிலும் ஒன்றாவது படிக்கவேண்டும். சரித்திரம், தத்துவம், பழைய புதிய மொழிகள் என்பவை அடங்கிய பகுதி ஒன்று; கணிதம், இயற்கைப் பொருள் விஞ்ஞானம் என்னும் இரண்டும் ஒரு பகுதி. மூன்றாவது பகுதி கல்வி, அரசியல், மனத்தத்துவம் என்பவை அடங்கியது.

இந்தத் துறைகளில் அறிவு பெறுவதைத் தவிர, விருப்பம் இருந்தால் மாணக்கர்கள் தொழில் கல்வியையும் கற்றுக் கொள்வார்கள்; உபாத்தியாயர் வேலை, சமூக ஊழியர் வேலை

முதலிய வேலைகளிலும் பயிற்சி பெறலாம். பிரசங்கங்கள் செய்வது தவிர, தனித்தும் ஆசிரியர்கள் கற்பிப்பது உண்டு. அந்த ஆசிரியர்கள் இளமையும் ஊக்கமும் உள்ளவர்கள். அவர்கள் நிறையப் படித்தவர்கள் என்பது மட்டுமன்று; கல்வி கற்பிப்பதில் சிறந்த ஆற்றலும் உள்ளவர்கள்.

இந்தக் காலேஜை நிர்வகிப்பதில் ஆக்ஸ்போர்டு, மான்செஸ்டர், பர்மிங்ஹாம் யூனிவர்ஸிடிகள் சிரத்தை உடையவை. அந்த யூனிவர்ஸிடிகளெல்லாம் சேர்ந்து ஒரு 'வித்வத் சபை' (அகடமிக் கவுன்ஸில்) மூலம் இந்தக் கல்வி நிலையத்துக்கு உதவி செய்து வருகின்றன. இந்த யூனிவர்ஸிடியார் தாமே பி. ஏ. பட்டம் தருகிறார்கள்.

மாணுக்கர்கள் இங்கேயே தங்கி வாழ்ந்து கல்வி கற்கிறார்கள். ஆணும் பெண்ணும் ஒன்ருகப் பயில்கிருர்கள். மாணுக்கர்கள் கலந்து பழகுவதனுல் ஒருவருக்கொருவர் அறிவூட்டுகிருர்கள் என்பதை நம்புகிறவர் லார்டு லிண்ட்ஸே. விஞ்ஞானம் படிக்கிறவர்களும் இலக்கியத் துறையில் பயில்கிறவர்களும் கலந்து பழக வேறு சர்வகலாசாலைகளில் வழியில்லை. அந்த மாதிரி ஒதுக்கல் முறை இந்தக் காலேஜில் இல்லை. ஒரு வருஷத்தில் எட்டு மாத காலம் கலந்து விளையாடியும் ஒன்ருக உண்டும் வாழ்வதனுல் பலவகையான பாடங்களைப் பயில்பவர்கள் பலவகையான துறைகளைப்பற்றிப் பேசிப் பழகுகிருர்கள். இதனுல் விசுவாசமும் நட்பும் சிரத்தையும் மாணுக்கர்களிடம் உண்டாகின்றன.

இப்போது இந்தக் காலேஜில் 150 பேர்கள் கல்வி பயில்கிருர்கள். அடுத்த மூன்று ஆண்டுகளில் 600 மாணுக்கர்களை ஏற்றுக்கொள்ளக் கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஒரு சங்கடம் என்னவென்ருல், மற்ற இடங்களில் 'கோட்' அடித்தவர்கள் பலர் இந்தப் புதிய காலேஜுக்கு வந்து சேருகிருர்கள். ஆனுலும் பொதுமக்களின் ஆதரவு இதற்கு மிகுதியாக இருக்கிறது. அதனுல் இது மேன்மேலும் வளர்ச்சி பெறுமென்றே தோன்றுகிறது.

வாழ்வின் லட்சியம்

நான் மரணத்தை ஒரு பெருந் துன்பமாக நினைக்கவில்லை. மரணத்தைக் கண்டு பயப்படுவது அறிவீனமே. இறந்தபின் நான் என்ன ஆவேன் என்பதைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை. அதனுல் மரணத்தைக் குறித்துப் பயப்பட்டுக்கொண்டு ஒரு காரியத்தைத் தொடங்காமல் இருக்கமாட்டேன்; நடுவிலேயே காரியத்தை விடவும் மாட்டேன். குற்றம் என்று நான் அறிந்ததை ஒருபோதும் செய்யவும் மாட்டேன்.

—சாக்ரடீஸ்.

மனிதன் உலகத்தில் வாழ வகை செய்துகொண்டான். ஆகவே, அந்த உலகத்தை வாழ்வதற்கு மிகவும் சௌகரியமான இடமாகவும் செய்துகொள்ள வேண்டும்.

—ஆண்டன் செஹாவ்.

கூனியின் சூழ்ச்சி

தன் மைந்தர்களோடு தசரதன் அயோத்திக்குத் திரும்பி வந்து கொஞ்ச காலம் ஆயிற்று. பிறகு, தனக்குத் தளர்ச்சி ஏற்பட்டு வருவதை உணர்ந்து, ராமனுக்கு விரைவில் முடிசூட்ட எண்ணினான். வசிஷ்டரை அழைத்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டுக்கொண்டான். ராமன் அரசனாவதில் குடிகள் எல்லாருக்கும் அளவற்ற மகிழ்ச்சி. நகரை விசேஷமாக அலங்கரித்தார்கள். மகனின் நன்மையைக் கருதிக் கௌசல்யை ஏராளமாகத் தானம் வழங்கிக்கொண்டிருந்தாள்.

அன்று கைகேயியின் வேலைக்காரியான மந்தரை என்ற கூனி தற்செயலாக அந்தப்புரத்து மாடி மேல் ஏறிப் பார்த்தாள். அவளுக்கு விஷயம் தெரியாது; அதனால், "இது என்ன? ராஜ வீதியெல்லாம் சந்தனம் தெளித்துக் கொடி கட்டியிருக்கிறார்கள்! ஜனங்கள் புதிய ஆடை உடுத்துப் பூமாலை எடுத்துக்கொண்டு போகிறார்கள்! எங்கும் பிராம்மணர்கள் வேத கோஷம் செய்கிறார்கள்! கோவில்களில் வெள்ளை பூசி, வாத்தியம் முழங்குகிறதே!" என்று ஆச்சரியப்பட்டாள். புதிய உடை அணிந்து அருகில் நின்ற தாதி ஒருத்தியைப் பார்த்து, "ஏனடி, ராமனுடைய தாய் அப்படிச் சந்தோஷமாகப் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கிறாளே! மகாராஜா ஏதாவது விசேஷம் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறாரோ?" என்று கேட்டாள்.

அந்தத் தாதி மகிழ்ச்சி பொங்க, "ஆமாம். மகாராஜா நாளைக்குப் பூச

வால்மீகி ராமாயணம் மகோன்னதமான காவியம் என்பது உலகப் பிரசித்தம். அதன் முக்கியப் பகுதிகள் ஒவ்வொன்றாக 'மஞ்சரி'யில் வரும். இது நாலாவது பகுதி.



நட்சத்திரத்தில் ராமனுக்குப் பட்டம் கட்டப் போகிறார். ராமனுடைய குணந்தான் என்ன? கொஞ்சங்கூடக் கோபமேயில்லை. அவனிடம் தப்பழுக்கே காண முடியாது. அதற்கேற்றாற் போலவே அவனுக்கு நன்மையெல்லாம் ஏற்படுகிறது" என்றாள். இதைக் கேட்டதும் கூனிக்குக் கோபம் பொங்கி வந்தது. கைலாசம்போல் உயர்ந்த அந்த மாடியிலிருந்து ஒரே நொடியில் கீழே இறங்கினாள். கைகேயியின் அறைக்கு விரைந்து சென்றாள். அங்கே கைகேயி படுத்திருந்தாள். அவளருகில் போய், "ஏன் இப்படிப் படுத்திருக்கிறாய்? எழுந்திரு. பின்னால் என்ன நேரும் என்று கூடத் தெரியவில்லையே உனக்கு? 'நான் அழகி. புருஷன் என்னிடம் அன்பாக இருக்கிறான்' என்றெல்லாம் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறாய்? ஆனால் இந்த அழகெல்லாம் கோடையில் ஆற்று நீர் வற்றுகிறமாதிரி ஒரு நாள் போய்விடுமே! இது தெரியவில்லையே உனக்கு!" என்றாள் கூனி.

அதைக் கேட்ட கைகேயி, "மந்தரே! உனக்கு என்ன கஷ்டம்? ஏன் இப்படி முகம் வாடியிருக்கிறாய்?" என்று விசாரித்தாள். இப்படி நிதானமாக இவள் பேசியதைக் கேட்டு மந்தரைக்கு மறுபடியும் கோபம் பொங்கி எழுந்தது. அதோடு வருத்தமும் அவளை வாட்டியது. அவள், "எனக்கு ஒன்றும் அப்படித் தனியாகக் கஷ்டம் வந்துவிட

வில்லை! ஆனால் உனக்கு வந்தால் எனக்கும் வந்த மாதிரிதானே? உனக்கு நாச காலம் வந்து விட்டதே! மகாராஜா நாளைக்கு ராமனுக்குப் பட்டம் கட்டப் போகிறார் என்று கேள்விப் பட்டேன். உடனே எனக்குத் திகிலும் வருத்தமும் ஏற்படவே இங்கே ஓடி வந்தேன். நீயும் ஒரு மகாராஜாவின் மகள்தான்; மகா ராணிதான்! அப்படி இருந்தும் மகாராஜாவின் தந்திரம் உனக்குப் புரியவில்லையே! அவர் தர்மம் பேசி உன்னை ஏமாற்றப் பார்க்கிறார். உன்னோடு நயமாகப் பேசிவிட்டுக் கௌசல்யைக்குத்தான் நல்லது செய்கிறார். கெட்ட எண்ணத்தோடு பரதனை முன்னாலேயே விரட்டி விட்டு ராஜ்யத்தை ராமனுக்குக் கொடுக்கப் பார்க்கிறார். புருஷன் என்ற பெயரில் உனக்குப் பகையாக வந்து சேர்ந்திருக்கிறார் அவர். ஆனால் நீயோ பாம்பை வைத்து மடியில் வளர்க்கிறமாதிரி அவரிடம் பரிவு காட்டுகிறாய். நீ சிறு பெண். நேர்மையான சுபாவமானதால் உனக்கு ஒன்றுமே தெரியவில்லை. நீ இப்படி இருந்தால் உன்னோடு நாங்களும் அழிய வேண்டியது தான். உன் மகனுக்கும் உனக்கும் எனக்கும் நன்மை ஏற்பட வேண்டு மானால் இதுதான் சரியான சந்தர்ப்பம்'' என்றாள்.

சரத் காலத்து வெண் முகில் திரளிலிருந்து சந்திரன் கிளம்பு வதுபோல் அப்போது கைகேயி யின் முகத்தில் மகிழ்ச்சி ஒளி வீசியது. தன் கழுத்திலிருந்து ஓர் ஆபரணத்தைக் கழற்றி மந்தரையிடம் கொடுத்து, "மந்தரே, ராமனுடைய பட்டாபி ஷேகத்தைவிட வேறு நல்ல சமா சாரமும் உண்டா? அதைச் சொன்னதற்காக, இந்தா இதை எடுத்துக்கொள். இன்னும் ஏதாவது வேண்டுமானாலும் கேள்; கொடுக்கி றேன்'' என்றாள்.

மந்தரைக்கு எரிச்சல் தாங்க வில்லை. அவள் அந்த ஆபரணத்தை வீசி எறிந்தாள். அவளுக்குத் துக்கம் மேலிட்டது. "புத்தி இல்லாதவளே! ஏன் இப்படி உனக்கு நேரப்போகும் கஷ்டத்தை உணராமல் வீணாகச் சந்தோஷப் படுகிறாய்? உன் சக்களத்தி மகனுக்கு நல்லது நேரப் போகிற தென்று நீதான் சந்தோஷப் படுகிறாயே யொழிய வேறு யாரும் இப்படி இருக்க மாட்டார்கள். ராஜ்யத்தில் பரதனுக்கும் பங்கு உண்டோ இல்லையோ? இதனால் பரதனுக்கு ராமன் ஏதாவது தீங்கு செய்யலாம். அந்தத் திகில்தான் எனக்கு. கௌசல்யை அதிருஷ்ட சாலி. அவளுடைய மகனுக்கு நாளைக்குப் பட்டம் கட்டப்போகிறார் கள். இனிமேல் இந்தப் பூமியே அவள் கையில்தான் இருக்கும். நீ அவளிடம் கை கட்டி வேலைக் காரி மாதிரி நிற்கப் போகிறாய்; நானும் அவளுக்கு வேலை செய்ய வேண்டியிருக்கும். உன் மகனும் இனி ராமனுக்குத் தொண்டு புரிய வேண்டியதுதான்; இதனால் உன் மருமகளுக்கும் கஷ்டம்'' என்றாள்.

கைகேயி அப்போதும் ராம னுடைய குணங்களைப் பாராட்டியே பேசினாள். "ராமன் தர்மம் அறிந்த வன். அடக்கமும் நேர்மையும் உள்ளவன். மகாராஜாவுக்கும் மூத்த மகன். ஆகையால் அவனுக் குத்தானே இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டும்? இதற்காக நீ ஏன் கஷ்டப்படுகிறாய்? ராமன் கொஞ்ச காலம் ஆண்ட பிறகு பரதனுக்கும் முறைப்படி அது கிடைக்கும்.

எனக்குப் பரதனைப்போலவேதான் ராமனும். கௌசல்யையினிடம் இருப்பதைவிட என்னிடம் அதிகப் பணிவாக நடந்துகொள்கிறான். அவனுக்குக் கிடைத்த ராஜ்யம் பரதனுக்கும் கிடைத்த மாதிரி தான். ராமன் தன்னைப் போலவே தன் தம்பிமாரையும் கவனித்துக் கொள்வான்" என்றாள்.

மந்தரை வருத்த மிகுதியால் பெருமூச்சு விட்டு மறுபடியும், "உனக்கு நேரப்போகும் கஷ்டத்தை உணராமல் இப்படி முட்டாள்தனமாகப் பேசுகிறாயே! இன்று ராமன் ராஜா ஆவான்; நாளைக்கு அவன் மகன் பட்டத்துக்கு வருவானேயொழியப் பரதனுக்கு அங்கே இடம் ஏது? இளவரசர்கள் என்றால் எல்லாருமே ராஜாக்கள் ஆகிவிட முடியுமா? அப்படி ஆனாலும் ராஜ்யம் துண்டு பட்டுச் சீர்குலைந்து விடாதா? ஆகையால், உன் மகன் அநாதை போல் கிடக்க வேண்டியதுதான். இதனால்தான் உன்னிடம் வந்தேன். நீயோ உன் சக்களத்திக்கு ஏற்படப் போகும் நன்மைக்காக எனக்குப் பரிசு கொடுக்கிறாய்! லட்சுமணனும் ராமனும் அசுவினி தேவதைகளைப் போல் இணைந்து கிடக்கிறார்கள். ஒரு பெரிய மரத்தைச் சுற்றி முள் செடிகள் நிறைந்திருந்தால் மரத்தை யாரும் வெட்டுவதற்கு நெருங்க மாட்டார்கள். லட்சுமணனும் அந்த முள் செடி போல் இருந்துகொண்டு ராமனைப் பாதுகாத்து வருவான். அப்புறம் உன் பிள்ளை காட்டுக்குப் போக வேண்டியதுதான்; சிங்கம் யானையைத் துரத்துகிறமாதிரி ராமன் உன் மகனை விரட்டுவான்! இதுதான் உனக்கு நல்லதுபோல் இருக்கிறது! பரதன், பாவம், ஒன்றும் அறியாக் குழந்தை! அவனைக் காப்பாற்று. புருஷன் உன்னிடம் அன்பாக இருப்பதால் நீ கௌசல்யையை எவ்வளவோ அவமதித்திருக்கிறாய்! அவளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது பழி தீர்த்துக்கொள்ளாமலா இருப்பாள்? ஆகவே, ராமனுக்கு ராஜ்யம் கிடைத்தால் உனக்குத்தான் நிச்சயம் அவமானம் நேரும். பரதனும் அழிந்துவிடுவான். இப்போதாவது பரதனுக்கு ராஜ்யம் கிடைக்கும்படி பார். ராமனை ராஜ்யத்தை விட்டு விரட்ட ஏற்பாடு செய்" என்றாள்.

இதைக் கேட்ட பின் கைகேயியின் முகத்தில் கோபம் ஜொலித்தது. அவள் உஷ்ணமாகப் பெருமூச்சு விட ஆரம்பித்தாள். "சரி; ராமனை இப்போதே காட்டுக்கு அனுப்பி, பரதனுக்குப் பட்டம் சூட்டி வைக்கிறேன், பார்" என்றாள். பிறகு, "இதற்குத் தகுந்த வழி ஏதாவது இருந்தால் சொல்" என்று மந்தரையையே கேட்டாள்.

உடனே மந்தரை, "இது தெரியாதா உனக்கு? ஒருவேளை தெரிந்துதான் மறைத்துப் பேசுகிறாயோ? முன்னே தேவாசுர யுத்தத்தில் நீ மகாராஜாவின் உயிரைக் காக்கவில்லையா? அவர் அப்போது உனக்கு இரண்டு வரம் கொடுப்பதாகச் சொன்னாரே! அவைகளை இப்போது கேள். 'ராமன் பதினான்கு வருஷம் காட்டுக்குப் போகவேண்டும்' என்று ஒரு வரமும், 'பரதனுக்கு ராஜ்யத்தைத் தரவேண்டும்' என்று இன்னொரு வரமும் கேள். இப்போதே கோபக்கிருகத்துக்குப் போய்த் தரையில் படுத்துக்கொள். மகாராஜா வந்தாலும் திரும்பிப் பார்க்காதே; பேசவும் பேசாதே. அவருக்கு உன்மேல் அன்பு அதிகம்.

அதனால் அவர் நெருப்பில்கூடக் குதிக்கத் தயார். உன் பேச்சைத் தட்டுகிற அவ்வளவு மனோபலம் அவருக்கு இல்லை. 'முத்துமாலை கொடுக்கிறேன். ரத்தினம் கொடுக்கிறேன்' என்றெல்லாம் சொல்லுவார். ஒன்றுக்கும் இணங்காதே. அவராக உன்னை எழுப்பி, 'என்ன வேண்டும்?' என்று கேட்கும்போது நீ இந்த இரண்டு வரத்தையும் கேள். அவர் கொடுப்பார். அப்புறம் ராமன் காட்டுக்குப் போவான். உன் மகனுக்கு ராஜ்யம் கிடைக்கும்" என்று உபதேசம் செய்தாள்.

கைகேயி மகிழ்ச்சி அடைந்து, "மந்தரே, உன் புத்திவன்மை இது வரையில் எனக்குத் தெரியாது போயிற்றே! நீதான் எப்போதும் எனக்கு நல்லது சொல்கிறாய். இல்லாவிட்டால் மகாராஜாவின் எண்ணம் எனக்கு எப்படித் தெரிந்திருக்கும்? உலகத்தில் எத்தனையோ கூனிகள் இருக்கிறார்கள்; பார்க்க மிகவும் கோரமாக இருக்கிறார்கள். ஆனால் நீ கூனியாக இருந்தாலும், இளங்காற்றடித்து வளைந்த தண்டுள்ள தாமரைக் கொடிபோல் அழகாக இருக்கிறாய். உன் இடை சிறுத்திருக்கிறது. நீ அணிந்திருக்கும் ஒட்டியாணம் அதன் அழகைப் பின்னும் எடுத்துக் காட்டுகிறது. வெண்பட்டு உடுத்து நீ என் முன் நடந்து போகும்போது ராஜஹம்ஸம் போல் விளங்குகிறாய். சம்பராசுரனிடம் இருந்த மாயைகளையெல்லாம் உன்னிடத்தில் காணலாம். க்ஷத்திரியர்களின் தந்திரங்களும் உனக்குத் தெரிந்திருக்கின்றன. இந்தா, இந்தப் பொன் மாலையை வாங்கிக்கொள். பரதன் ராஜாவான பிறகு உனக்கு இன்னும் ஏராளமான பொன் ஆபரணங்களைப் பண்ணிப் போடுகிறேன். உன் முதுகில் இருக்கும் முண்டுக்குத் தங்க முலாம் பூசச் சொல்கிறேன். உன் நெற்றிக்குத் தங்கப் பொட்டுச் செய்து இடுகிறேன். அதையெல்லாம் அணிந்து நீ தேவமாதுபோல் நடப்பாய். பொன் ஆபரணங்கள் அணிந்த பல கூனிகள் உனக்கு எப்போதும் பணிவிடை செய்வார்கள், பார்" என்று மந்தரையைப் புகழ்ந்தாள்.

உடனே மந்தரை, "கைகேயி, இங்கே படுத்துக்கொண்டிராதே! வெள்ளம் போனபின் அணைகட்டிப் பயனில்லை. அதனால் இப்போதே கோபக்கிருகத்துக்குப் போய்ப் படு" என்றாள்.

கைகேயியும் அவள் சொல்படியே எழுந்து ஆபரணங்களைக் கழற்றி எறிந்தாள். கோபக்கிருகத்துக்குள் போய், "கூனி, ராஜாவிடம் போய் ராமனுக்குப் பட்டம் கட்டினால் கைகேயி இங்கேயே உயிரை விட்டு விடுவாள் என்று சொல்லிவிடு" என்று உத்தரவிட்டாள். பிறகு நாககன்னிகை போல் பெருமூச்சு விட்டபடி அங்கே படுத்துக்கொண்டாள்.

மந்தரை மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

கவிஞன் உதயம்

ஒருவர்: எவனும் படித்துக் கவிஞனாவதில்லை; கவிஞன் பிறக்கிறான்.

மற்றவர்: உண்மை. இதனால்தான் கர்ப்பத் தடை வேண்டுமென்று நான் சொல்கிறேன்.

—ஹ டிப்ராஸ், கோப்பன்ஹேகன்.

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்ப முடியாது. பதிலும் எழுத முடியாது. —ஆசிரியர்.

ஒரு நாள் ராத்திரி நல்ல நிலா வீசிக்கொண்டிருந்தது. கொஞ்ச தூரம் உலாத்திவிட்டு வரலாமென்று, என் தம்பியை அழைத்துக்கொண்டு கிளம்பினேன்.

சற்று நடந்ததும் என் தம்பி திடீரென்று வானத்தைப் பார்த்துக்கொண்டே ஓடினான். மூச்சு வாங்க எனக்கு முன் போய் நின்றுகொண்ட அவன், மிகுந்த குதூகலத்துடன், "அண்ணா, அண்ணா! இந்தச் சந்திரன் என்னோடேயே வருகிறதே, ஏன்?" என்றான்.

"யார் நடந்தாலும், ஓடினாலும் அவரோடும் அது வரும்" என்று நான் சிரித்துக்கொண்டே சொன்னேன்.

தம்பி என் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு அண்ணாந்து பார்த்தபடி, "எங்கே, நீ போ" என்றான். நான் இரண்டடி நடந்ததும் என்னை நிற்கச் சொல்லிவிட்டு, தான் மறுபடியும் ஓடினான்.

"ஓஹோ! நீ பொய் சொல்றே. அது எப்படி இரண்டு பேரோடேயும் வரும்; முடியாது. என்னோடே நின்றது; இப்போது என்னோடே ஓடிவருகிறது. இதை அம்மாவிடம் சொல்லப்போகிறேன்" என்று சொல்லித் திரும்பி ஓடி எங்கள் வீட்டுக்குள் புகுந்துவிட்டான்!

—ரவீந்திரதாஸ், கிறிஸ்தியன் காலேஜ், தாம்பரம்.

என் தங்கை வசந்தாவைப் பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பில் சேர்த்தோம். அதற்கு முன்னாலேயே அவளுக்கு எழுத்தும் எண்ணும் வீட்டில் சிறிது கற்றுக் கொடுத்திருந்தோம்.

வாத்தியார் அவளைப் பரீட்சிக்க விரும்பி, "உன் கையில் எத்தனை விரல்? எண்ணிச் சொல், பார்க்கலாம்" என்றார்.

"ஒண்ணு, இரண்டு, மூணு, நாலு, அஞ்சு, ஆறு" என்றாள் வசந்தா.

"ஆறு? சரியாக எண்ணிச் சொல்."

"ஆறுதான், ஸார். நீங்கள் வேணுமானால் எண்ணிக்கோங்கோ" என்று கையை நீட்டினாள் வசந்தா. அவளுக்கு உண்மையிலேயே ஆறு விரல்.

"அடேடே! நீ ஆறு விரல்காரியா? அதிருஷ்டம் அடிக்கப் போகிறது!" என்று உற்சாகத்தோடு சொன்னார் வாத்தியார்.

"அதெல்லாம் அடிக்காது. பிடிவாதம் பிடிச்சா அண்ணாதான் என்னை அடிப்பா" என்றாள் சிறுமி.

எனக்கும் வாத்தியாருக்கும் ஒருங்கே சிரிப்பு வந்துவிட்டது.

—பி. எஸ். நாகராஜன், சென்னை-5.

மாலையில் பள்ளிக்கூடம் விட்டதும், என் தங்கை பானு என்னிடம் ஓடி வந்தாள். "அண்ணா, மழை ஏன் பெய்யறது? பூமி சுத்தறத்தினாலேதானே?" என்று உற்சாகத்துடன் என்னைக் கேட்டாள்.

"இல்லை. சமுத்திரம், குளம் குட்டைகளில் உள்ள தண்ணீரை, வெயில் காய்ந்து ஆவியாக மாற்றி விடுகிறது. அது மேகமாக மாறி மழையாகப் பெய்கிறது" என்று நான் சொன்னேன்.

"அதெல்லாம் இல்லை. பூமி சுத்தறத்தினால்தான் மழை பெய்யறது. இன்னிக்குப் பள்ளிக்கூடத்திலேருந்து நான் ஓடிவரச்சே அதைக் கண்டு பிடிச்சுட்டேன்."

"எப்படி?"

"வேகமாய் ஓடிவரச்சே எனக்கு வேர்த்தது. பூமாதேவிக்கும் அப்படித்தானே வேர்க்கும்? அதான் மழை" என்றாள் பானு.

—எஸ். தம்புராஜ், மேட்டுப்பாளையம்.

எல்லாரும் மனிதரே; ஆனால்—

"ஒருவன் வருகிறான், துன்பம் பிறக்கிறது;
ஒருவன் வருகிறான், துன்பம் தணிகிறது.
ஒருவன் பிரிகிறான், வருந்துகிறோம்;
ஒருவன் பக்கத்திலேயே இருக்கிறான், நமக்குப் பிடிப்பதில்லை.

—காடியசவாடில் பாடும் கீதம்.

மனிதனின் ஆரோக்கியத்துக்கு நல்ல உணவு மட்டும் அல்ல; லங்கணமும் முக்கியமே.

உபவாசத்தின் அவசியம்

புச்சா வேங்கடராமையா

உபவாசம் என்றால் ஒரு மேலான லட்சியத்தை மனத்தில் வைத்துக்கொண்டு சில நியமங்களுடன் சாப்பாட்டை விட்டு விட்டுப் பட்டினியாய் இருப்பது. இந்த உபவாச தீட்சையால் மனிதன் பல விதத்திலும் அபிவிருத்தி அடைவான். நம் நாட்டில் மகா புருஷர்களும் சாதாரண மக்களும் பருவ தினங்களிலும் கார்த்திகை மாதத்திலும் ஏகாதசி தினங்களிலும் உபவாசம் இருப்பது பரம்பரை பரம்பரையாக வரும் வழக்கம். இதனால் புண்ணியம் உண்டு என்று மக்களுக்குள்ளே ஒரு நம்பிக்கை. ருக்மாங்கதன், அம்பரீஷன் முதலிய மகானுபாவர்கள் ஏகாதசி விரதம் அநுஷ்டித்து நற்கதி அடைந்தார்கள். உபவாசம் ஆத்மிகச் சிந்தனைக்கு மிகச் சாதகமானது.

நியமங்கள்: உபவாச காலத்தில் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வது நல்லது. அந்தச் சந்தர்ப்பத்தில் நற்செய்கைகளையே செய்ய வேண்டும். அப்போது மௌனம், அளவான பேச்சு, கடவுள் சிந்தனை இவையே மிகவும் முக்கியமாக அநுஷ்டிக்க வேண்டிய விதிகள். குடும்பச் சிக்கல்கள் அரசியல் விஷயங்கள் போன்ற லௌகிக விஷயங்களில் மனத்தைச் செலுத்தக் கூடாது. ஒரு பலனை எதிர்பார்த்து உபவாசம் இருந்தால் உடலுக்கு உற்சாகம் அதிகமாகும். அதோடு விரதம் இருப்பதில் உறுதியும் சிரத்தையும் ஏற்படும். அப்போது நமக்குக் களைப்பு உண்டானாலும் அதைப் பொறுத்துக்கொள்ளலாம்.

ஆனால் நீண்ட உபவாசம் என்பது கூடாது. அதனால் உடலுக்குக் களைப்பும் பலக் குறைவும் நேரும். உபவாச காலத்தில் உடலுக்குச் சிரமம் கொடுக்கக் கூடாது. மிதமாக உண்பவர்களுக்கு உபவாச தீட்சை மிகவும் சுலபம்; ஒரு நாள் முழுவதும் பட்டினி இருக்கச் சக்தி இல்லாதவர்கள் ஒரு வேளை லேசான உணவை மிதமாக உண்ண வேண்டும். இரவில் சாறு உள்ள பழங்களை மட்டுமே சாப்பிட வேண்டும். கொஞ்சங் கொஞ்சமாக நாள் முழுதும் உபவாசம் இருக்கப் பழகவேண்டும். 'ஒரு போது' இருந்தாலும் நல்லதே.

உபவாசம் இருப்பதற்குத் திடமான நம்பிக்கை வேண்டும். இல்லாவிட்டால் மன அமைதி இராது. அது முடிந்த மறு நாள் இரண்டு நாளைச் சாப்பாட்டைச் சாப்பிடாமல் நம் உடம்பு ரீதியை ஒட்டி மிதமாகவே உண்ணவேண்டும். இல்லாவிட்டால் அஜீர்ணம் ஏற்பட்டுவிடும். பகல் முழுவதும் உழைத்த மனிதன் மாலையில்

மூலம்: ப்ரக்ருதி (தெலுங்கு: ஜனவரி '51), விஜயவாடா.

ஓய்வு பெற விரும்புகிறான். அது மாதிரியே ஜீர்ண கோசமும் ஓய்வை விரும்புகிறது. இதை அறிந்த புத்திமான்கள் சிலர் ஒரு நாளில் இரண்டு வேளைச் சாப்பாட்டுக்கு நடுவில் வெகு நேரம் இடைவெளி இருக்கும்படி பார்த்துக் கொள்வார்கள். நடுவில் சிற்றுண்டி எதுவும் சாப்பிட மாட்டார்கள். உபவாசமும் இதற்காக ஏற்பட்டது தான்.

ஓய்வு எடுத்துக்கொண்டபின், வேலை செய்து களைத்த உடலுறுப்புக்கள், பழையபடி பலம் பெற்று வேலை செய்கின்றன. எப்போதும் தின்றுவிட்டு உட்கார்ந்திருப்பவர்களுக்கு உழைப்பு எப்படி அவசியமோ, அதே மாதிரி உழைப்பாளிகளுக்கும் ஓய்வு அவசியம். நோய் என்பது, நம் உடலில் சேரும் கழிவுப் பொருள்களை வெளியேற்றி நம் உடலைப் பழையபடி ஆரோக்கியமாக வைப்பதற்கு உடல் செய்யும் பகீரதப் பிரயத்தனமே! உபவாசத்தால் கழிவுப் பொருள்கள் உடலை விட்டு நீங்கி விடுகின்றன. ஆகவே, பதினைந்து நாட்களுக்கு ஒரு தரமோ மாதத்துக்கு ஒரு தரமோ சுத்தப் பட்டினி இருப்பது நல்ல முறைதான். உபவாசத்தில் வேலை செய்யும் சக்தி அதிகரிக்குமேயொழியக் குன்றாது.

'லங்கணம் பரம ஔஷதம்' என்பது பெரியோர் வாக்கு. விபரீத ஜுரம் கண்டபோது, பட்டினி போட்டே அதைக் குறைப்பது பழைய முறை. பத்தியமாகக் கூடச் சாப்பிடாமல், நன்றாகப் பசியெடுக்கும் வரையில் பட்டினி போட்டுப் பிறகு சாப்பிட்டால் உடலுக்கு வெகு விரைவில் பலம் கூடிச் சதை பிடிக்கும். ஜுரம் அதிகமாக இருந்து பசியும் இல்லாதவரையில் உணவு கொடுக்காவிட்டால் அபாயம் இல்லை. அநாவசியமாய் ஏராளமாகப் பணம் செலவு செய்து மருந்துகளைச் சாப்பிடாமல் ஆரோக்கியம் பெறுவதற்கு உபவாசம் சிறந்த வழி.

உடலின் கழிவுப் பொருள்களும் துர்நீரும் உடலை விட்டு நீங்க உபவாச காலத்தில் தாராளமாகத் தண்ணீர் குடிக்கவேண்டும். உடல் நிலை அநுமதித்தால் சில துளிகள் எலுமிச்சம் பழ ரசத்தையும் தண்ணீரோடு சேர்த்துக்கொள்ளலாம். எவ்வளவு கடுமையான மலச்சிக்கலும் உபவாசத்தால் நீங்கிப் பூர்ணமான ஆரோக்கியம் ஏற்படும். உபவாசத்தின் மூலம் ஆத்மிக வளர்ச்சியும் உண்டாகும்.

மனிதர்களுக்கு வாழ்க்கையில் சிக்கல்கள் நேர்ந்தபோது பகவத் பிரார்த்தனையும் உபவாசமும் உற்ற துணை என்று அறிவாளிகள் சொல்வார்கள். உபவாசத்தால் மனமும் உடலும் ஒருங்கே ஓய்வு பெறுகின்றன. இந்தக் காலத்து மக்கள் ஆரோக்கிய விதிகளை மதிப்பதில்லை. உணவு, தூக்கம் எல்லாவற்றிலும் மனம் போனபடி நடந்துகொள்கிறார்கள்.

மாணவர்கள் உணவுக் கட்டுப்பாடுகளைச் சட்டை செய்வதே இல்லை. அதனால் மனிதர்களுக்குப் பல கெடுதல்கள் நேருகின்றன. உபவாசத்தைச் சிரத்தையுடன் அநுஷ்டித்தால் சிறந்த ஆரோக்கியம் ஏற்படும். நோயற்ற வாழ்வால் வாழ்க்கை ஒழுங்கான பாதையில் செல்லும். உபவாசத்தால் உடலுடன் மனமும் உரம் பெறும்; உள்ளமும் தூய்மை அடையும்.

பாடகர் பெருந்தன்மை

சுரேச சந்திர சக்கரவர்த்தி

குணசாலிகளை யார்தான் போற்றமாட்டார்கள்? தமிழ்நாட்டுச் சங்கீத வித்துவான்கள் இருவரை, கல்கத்தா சர்வகலாசாலையில் சங்கீதப் பேராசிரியரான இந்தக் கட்டுரையாளரே இங்கே பாராட்டுகிறார்.

கல்கத்தா தென்னிந்தியர் சங்கத்தில் நடந்த ஒரு சங்கீதக் கச்சேரியைக் கேட்கப் போயிருந்தேன். மைசூர் ஸம்ஸ்தான வித்துவான் கோட்டு வாத்தியம் நாராயணையங்கார் அந்த வாத்தியத்தில் அற்புதமாகப் பாடினார். அப்போது அவரோடு நட்பு ஏற்பட்டது. இரண்டொரு வருஷம் கழித்து நடந்த ஒரு கலை விழாவுக்கு அவரை வரும்படி அழைத்திருந்தேன். பதில் கடிதம் கிடைக்கவில்லை. ஆனால் திடீரென்று எந்தவிதமான முன் ஏற்பாடும் இல்லாமலே அவர் அந்த விழாவுக்கு வந்து சேர்ந்தார். கலை விழாவில் அவருடைய அரிய வித்தையை எல்லாரும் பாராட்டினார்கள். ஆனால் பண விஷயத்தில் தான் தகராறு ஏற்பட்டது. என் பாடு சங்கடமாகிவிட்டது. அப் பேர்ப்பட்டவரைச் சரியானபடி கௌரவிக்காமல் அனுப்பிவிடுவது எனக்கு அவமானமாக இருந்தது. 'அப்புறம் இவர் வங்காளிகளைப் பற்றியே இழிவாக எண்ண ஆரம்பித்துவிடுவாரே' என்று கவலைப் பட்டேன்.

அவர் இதைப் புரிந்துகொண்டார். சிரித்துக்கொண்டே, "அப்படியானால் ஒன்று செய்யுங்கள்: நீங்கள் எனக்குப் பெரிய சம்மானம் கொடுத்ததாகச் சந்தோஷப்படுவேன்" என்றார். "தாராளமாகச் சொல்லுங்களேன்" என்றேன். "ரவீந்திரரின் எதிரில் வாசிக்க வேண்டும் என்று ஆசை. அப்புறம் உங்கள் ரேடியோவில் கொஞ்ச நேரம் பாடவேண்டும். இந்த இரண்டுக்கும் வசதி செய்துகொடுத்தால் போதும்" என்றார்.

சாந்திநிகேதனத்துக்கு இது விஷயமாய் ஒரு கடிதம் எழுதினேன். உடனே ரவீந்திரரிடமிருந்து அழைப்பு வந்தது. நாராயணையங்காரின் வாசிப்பைக் கேட்டுக் கவியரசர், "ஒரு வாத்தியத்தில் கூட இவ்வளவு இனிமையாக மனித சாரீரம் மாதிரியே பாட முடியும் என்று எனக்கு இதுவரையில் தெரியாமல் போயிற்றே!" என்று வியந்தார். பிறகு தம் கையாலேயே நீண்ட வாழ்த்துப்பத்திரம் ஒன்று எழுதி நாராயணையங்காரிடம் கொடுத்தார். ஐயங்காருக்குப் பரம திருப்தி. "இந்தத் தடவை இங்கே வந்தது என் பாக்கியந்தான்" என்று ரவீந்திரரைப் பாராட்டிக்கொண்டேயிருந்தார்.

பிறகு கல்கத்தா ரேடியோ நிலையத்தில் அவர் 15 நிமிஷநேரம்

காப்பிரைட்: யுகாந்தர் (வங்காளி; சாரதீய சஞ்சிகை), கல்கத்தா.

பாடும்படி ஏற்பாடு செய்தேன். ஆனால், "15 ரூபாய்க்குமேல் கொடுக்க எங்களுக்குச் சக்தி இல்லை" என்று நிலைய அதிகாரி சொல்லிவிட்டார். நான் ஐயங்காரிடம் வந்து தயங்கிக்கொண்டே, "பண விஷயந்தான் சரிப்படவில்லை" என்றேன். "பணத்தை யார், ஐயா, கேட்டார்கள்? ஓர் ஐந்தோ ஆறோ கொடுத்தால் போதும்" என்றார். நான், "15 ரூபாய் கொடுப்பார்கள்" என்றதும், அவர், "பின்னே என்ன? சம்மதம் என்று சொல்லுங்கள். உங்களுக்கு என்னிடத்தில் அபாரமான மதிப்பு இருக்கிறது. அதைக் கெடுக்காதபடி முதல் ஐந்து நிமிஷம் ரூ. 15-க்கு வாசிக்கிறேன்; பின் 10 நிமிஷம் உங்களைப்போன்ற ரசிகர்களுக்காக வாசிக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?" என்றார். அந்தமாதிரியே ஏற்பாடாகி அவரும் வாசித்தார். அப்படியும் அவருடைய உற்சாகம் அடங்கினபாடில்லை. "நான் கொஞ்சநாள் இங்கே தங்குகிறேன். அதற்குள் கர்நாடக சங்கீத சப்பந்தமாகச் சில விஷயங்கள் சொல்லுகிறேன். உங்கள் சிநேகிதர்களையும் அழைத்துக்கொண்டு வாருங்கள். உங்கள் எஸ்ராஜ் வாத்தியத்தில் கூடக் கோட்டு வாத்தியம்மாதிரி வாசிக்க முடியும், தெரியுமா?" என்றார். நான் உடனே அதற்குச் சம்மதித்தேன். இரண்டு வாரத்துக்குள் கர்நாடக சங்கீத சம்பந்தமான சில அரிய விஷயங்களை அவர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டார்.

* * *

பல வருஷங்களுக்கு முன் அவரைப்போலவே மிகவும் பெருந்தன்மை வாய்ந்த இன்னொரு தமிழ் ஸங்கீத வித்துவான் கல்கத்தாவுக்கு வந்திருந்தார். அவர் பெயர் நடராஜ பாகவதர். அவருடைய தந்தை தியாகராஜ ஸ்வாமிகளின் சிஷ்யர். நடராஜ பாகவதரிடம் சில காலம் முறையாகக் கர்நாடக சங்கீதம் பயின்றுவந்தேன். அவரும் வெகு உற்சாகமாக எதையும் ஒளிக்காமல் சொல்லித் தந்தார். ஆனால் எனக்கு மட்டும் உள்ளுக்குள், "பின்னால் ஏராளமாகக் குருதட்சிணை கேட்டுவிடுவாரோ?" என்று திகில். சிலநாள் ஆனதும் அவர், "எனக்கு ரவீந்திரரின் பாடல்கள் இரண்டொன்று கற்றுக் கொடுங்களேன்" என்றார். நான் அப்படியே சில பாடல்களைப் பாடிக் காட்டினேன். அவைகளை ஸ்வரத்தோடு அவர் எழுதி வைத்துக் கொண்டார். வருஷ முடிவில் அவர் ஊருக்குத் திரும்பும் சமயம், நான் குருதட்சிணையாக ஒரு நூறு ரூபாய் அவரிடம் கொடுக்க வந்தேன். அவர், "அட ராமா! இதற்கா குருதட்சிணை! நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்தமாதிரி நானும் கற்றுக் கொடுத்தேன்; அவ்வளவுதான்" என்று சொல்லி அதை வாங்க மறுத்துவிட்டார்.

நான் மிகவும் வற்புறுத்தியதன் மேல் அவர், "திருவையாற்றில் தியாகராஜ ஸ்வாமிகளுக்கு ஒரு கோயில் கட்டுகிறார்கள். அந்தப் பணிக்காக வேண்டுமானால் ஓர் 5 ரூபாய் கொடுங்கள்" என்று ஐந்தே ரூபாய் வாங்கிக்கொண்டார். அதற்குப் பதில் எனக்குப் 'பஞ்சரத்ன' சுலோகங்களை ஸ்வரத்தோடு எழுதிக் கொடுத்தார். அப்போது மைசூர் மன்னராக இருந்த கிருஷ்ணராஜ உடையாரின் பட்டாபிஷேகத்தின்போது சிருங்கேரி சங்கராசாரியர் எழுதியவை அவை.

நடராஜ பாகவதர் பணத்தை மதிக்காத உத்தமர். இன்னும் பல சந்தர்ப்பங்களிலும் அவர் இப்படிப் பெருந்தன்மையாக நடந்துகொண்டிருக்கிறார்.

இதற்கு மாறான சில சங்கீத வித்துவான்களைப்பற்றியும் எனக்குக் கொஞ்சம் அநுபவம் உண்டு. மேற்கே உள்ள ஓர் ஊரைச் சேர்ந்த ஸிதார் வித்துவான் ஒருவர் அடிக்கடி கல்கத்தாவுக்கு வந்து போவார். தம் வித்தையின் சூட்சுமத்தை யாராவது தெரிந்துகொண்டு விடுவார்களே என்று இவர் ஸிதார் வாசிக்கும்போது கையின் லாகவம் தெரியாதபடி துணி போட்டு மறைத்துக்கொண்டு பாடுவார். இந்த மாதிரி ஆசாமிகள் இருந்தால் சங்கீத வித்தை எப்படிச் சோபிக்கும்?

திரும்பி வந்த டூத் - பிரஷ்

மருந்துக் கடை ஒன்றில் ஒரு கனவான் நுழைந்து, "ஏதாவது டூத் - பிரஷ் இருந்தால் காட்டுங்களேன்" என்றார். கடைக்காரர் இரண்டு விதமான பிரஷ்களை எடுத்துக் காட்டினார். வந்தவருக்கு அதில் எது கெட்டியானது, எது மெதுவானது என்று புரியவில்லை. கடைக்காரர் மிகவும் பரிவோடு, "இரண்டையுமே எடுத்துக்கொண்டு போங்கள், ஸார். வேண்டாததை நாளைக்குத் திரும்பக் கொண்டுவந்து கொடுத்துவிடலாம்" என்றார்.

வந்தவருக்கு இது ஆச்சரியமாக இருந்தது; கடைக்காரர் சொன்னபடியே இரண்டையும் எடுத்துக்கொண்டு போனார். மறு நாள் மெதுவான பிரஷ்ஷைத் திருப்பிக் கொடுக்க வந்தார்.

கடைக்காரர், "அப்படியானால் மெது பிரஷ் சரிப்படவில்லை போல் இருக்கிறது! அது தெரிந்த விஷயந்தான். உங்களைச் சேர்த்து இதுவரையில் பத்துப் பேர் இதை இப்படி வாங்கிக்கொண்டு போய்த் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் பாருங்களேன்!" என்றார்.

—'வ்யூல்', பாரிஸ்.

குட்டு வெளிப்பட்டது

ஸ்ரீமதி ஸேன்: தபால் அதிகாரிகள் எவ்வளவு அஜாக்கிரதையாய் வேலை பார்க்கிறார்கள், பார்த்தாயா?

ஸ்ரீமதி வசு: இப்போது என்ன நடந்துவிட்டது?

ஸ்ரீமதி ஸேன்: என் கணவர் நேற்றுத் தஞ்சாவூரிலிருந்து ஒரு கார்டு போட்டிருக்கிறார். அதன் தலையில் இந்தத் தபால் அதிகாரிகள் கும்பகோணம் முத்திரையைக் குத்தியிருக்கிறார்களே!

—'இல்லஸ்டிரேடட் வீக்லி அவ் இந்தியா'

– – – – பெரியோரும்



மாணாக்கரும் — — — —



—'சங்கர்ஸ் வீக்லி'

மந்திரம், மூலிகைகளை அறிந்த இவர்களுடைய பழக்க வழக்கங்கள் எவ்வளவு விசித்திரமாயிருக்கின்றன!

கஞ்சத்துப் பழங்குடிகள்

ரத்னுகரம் அனந்தாசார்லு

சவரர்கள் என்பவர் வேடர்களைப் போன்ற ஒருவகை மலை ஜாதியார். இவர்கள் கஞ்சம், விசாக பட்டணம் ஜில்லாக்களில் வசிக்கிறார்கள். சரித்திரங்களிலும் இவர்களைப்பற்றிப் பல செய்திகள் வருகின்றன. ராமாயணத்தில் வரும் சபரி இந்த ஜாதிப் பெண் மணியே. ஐதரேயப் பிராம்மணத்திலும் பாரதத்திலும் ஸ்காந்த புராணத்திலும் இவர்களைப்பற்றிப் பல இடங்களில் சொல்லியிருப்பதைக் காணலாம். இதிலிருந்து சவரர்கள் மிகப் பழங் குடிகள் என்று தெரிகிறது.

இவர்களில் முன்னெல்லாம் நர பலி கொடுக்கும் வழக்கம் உண்டு. உதயணன் என்னும் சவர மன்னனை நந்தி வர்ம பல்லவனும், சபராதித்தியனைக் கங்க வமிசத்தவனான காமார்ணவனும் வென்றதாகப் பழைய சாசனங்களின் மூலம் தெரிகிறது. அதற்குப் பிறகு சவரர்கள் காடு மலைகளில் குடியேறி யிருக்கலாம். சாதாரணமாக, இவர்கள் எங்கே இருந்தாலும் சுயேச்சையாகத் திரிவார்கள்.

பல உயிர்களுக்குத் தீங்கிழைத்தவன், வீடுகளை எரித்தவன், பணத்தை நஷ்டப்படுத்தியவன் ஆகியவர்களுக்கு மரண தண்டனை விதிப்பது முன்காலத்தில் இவர்கள் வழக்கம். மற்றக் குற்றங்களுக்கு இந்தத் தண்டனை இல்லை. வமிச விருத்தி பெண்களாலேயே உண்டாவதால் இவர்கள், "ஆணைக் கொல்வதைவிடப் பெண்ணைக் கொல்வது மிகவும் பாவம்" என்பார்கள். இவர்கள் கொள்கையின்படி விபசாரக் குற்றம் ஆண்களைப் பாதிக்குமே யொழியப் பெண்களைப் பாதிக்காது. ஒரு குற்றவாளியிடமிருந்து வசூலித்த பணத்தைக் கொண்டு தெய்வ வழிபாடுகள் நடத்தவேண்டுமென்று குடிப் பெரியோர்கள் தீர்மானம் செய்வார்கள்.

இவர்களுடைய மதாசாரங்களைத் திட்டமாக அறிவது கஷ்டம். நோய்கள் வந்து தொல்லைப்படுத்தும் காலத்தில் கிராம தேவதையைத் திருப்திப்படுத்தும் பொருட்டுப் பிராணிகளைப் பலியிடுவது இவர்கள் வழக்கம்.

நன்செய், புன்செய் நிலங்களைப் பண்படுத்திப் பயிரிட்டுத் தம் அவசியத்துக்கு வேண்டிய மட்டும் வைத்துக்கொண்டு மிகுந்த தானியங்களை விற்று ஏராளமாகப் பணம் சேர்ப்பார்கள். காரை, மணிமாலை போன்ற நகைகளை சவரர்களில் ஆண்களும் அணிவார்கள். இவர்களில் பாடகர்களும் உண்டு.

சவரர்களில் வயது வந்த பெண்களுக்கு மணம் செய்யும் வழக்கம்

மூலம்: கலிங்கத்து வரலாறு (தெலுங்குப் புத்தகம்)

உண்டென்றாலும் பால்ய விவாகங்களே அதிகம். மணமகனோ அவனைச் சேர்ந்தவர்களோ, "கன்னியைக் கொடு" என்று பெண் வீட்டாரைக் கேட்பார்கள். பெண் வீட்டார் மாப்பிள்ளையைத் தேடிக்கொண்டு போகக்கூடாது. ஆண்மகன் பல மனைவிமாரை மணம் செய்து கொள்ளலாம். பெண் ஒரு கணவனையே கைப்பிடிக்கவேண்டும். விதவையான பெண்ணும் கணவன் கைவிட்ட பெண்ணும் மறு விவாகம் செய்துகொள்ளலாம். இவர்களில் எல்லா வருணத்தாரும் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். ஒரு ஜாதியார் பசு மாமிசம் சாப்பிடுவார்கள். இவர்களுடைய பெண்ணைப் பசு மாமிசம் சாப்பிடாதவர்கள் மணம் செய்துகொள்ளலாம். ஆனால் பசு மாமிசம் சாப்பிடாதவர் பெண்களை அதைச் சாப்பிடுபவருக்குக் கொடுக்கமாட்டார்கள்.

சவர விதவை மறுமணம் செய்துகொள்ள விரும்பினால் தன் கணவனுடைய தம்பிமார்களில் ஒருவனைச் செய்துகொள்ளலாம். ஆனால் கணவனுடைய தமையனைச் செய்துகொள்ளக்கூடாது. அப்படி அவர்களில் யாரையுமே செய்துகொள்ளச் சம்மதம் இராவிட்டால், மாமனார் வீட்டுச் சொத்து எதையும் எடுத்துக்கொள்ளாமல் பிரிந்து போய்த் தனக்குப் பிடித்த வனையாவது மணக்கலாம். ஆனால் அப்படிச் செய்துகொள்வதற்குமுன் இறந்த கணவனின் ஆவிக்கு ஏதேனும் பலி கொடுக்க வேண்டும். அந்தச் சடங்கை, 'போய' என்பவன் நடத்துவான். அவன், இறந்த கணவனுடைய ஆவியை வரவழைத்து, "இதோ, பன்றி மாமிசத்தையும் கள்ளையும் உனக்குப் பலியாகத் தருகிறேன். இவைகளை ஏற்றுக்கொள். இவளையோ இவளை மணப்பவனையோ இவளுக்குப் பிறக்கும் குழந்தைகளையோ தொந்தரவு செய்யாதே. இதோடு நீ திருப்தி அடையவேண்டியது. இதற்குப் பித்ரு தேவதைகளே சாட்சி" என்று சொல்லிச் சடங்கை முடிப்பான். பின்பு அந்தப் பெண் புதிய கணவனுடைய மனைவியாகி விடுவாள்.

இவர்கள் காலை எழுந்திருந்தது முதல் இரவுவரையில் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைப்பார்கள். ஆனால், பாவம், அப்பாவிகள். பணத்தையோ தானியங்களையோ பஞ்ச காலத்துக்கு உதவுமென்று பத்திரப்படுத்தும் திறமை இல்லாதவர்கள். இவர்களிடமுள்ள ஒரு விசேஷ குணம் என்னவென்றால், எவ்வளவுதான் கஷ்டம் வந்தாலும் சரி, குடிக்கக் கூட இல்லாமல் போனாலும் சரி, பிறர் பொருளைத் திருப்பிக் கொடுத்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்கள்; ஏமாற்றுவது என்பதே இவர்களுக்குத் தெரியாது.

இவர்கள் காடுகளில் வசிப்பார்கள். விறகு வெட்டி விற்றோ நிலங்களைப் பயிரிட்டோ ஜீவிப்பார்கள். மலை யருவிகளைத் தங்கள் நிலங்களுக்குத் திருப்பிக் கரை கட்டிக்கொண்டு வேண்டிய அளவு பாய்ச்சிக்கொள்வார்கள். இதுபோன்ற வேலைகளில் கை தேர்ந்தவர்கள். விறகையோ வேறு பாரத்தையோ சுமந்தபடியே வெகு அலட்சியமாய் மலைமேல் ஏறிப் போவார்கள். மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடுவதில் இவர்கள் வெகு சமர்த்தர்கள். பெரிய பெரிய பாம்புகளையும் சுலபமாகப் பிடித்துத் தலையை நறுக்கிவிட்டுச் சமைத்து உண்பார்

கள். இலுப்பைக் கள்ளை ஏராள மாகக் குடிப்பார்கள். இவர் களுடைய முக்கியத் தொழில் விவசாயம்.

இவர்களுக்கு இருநூறு முந்நூறு வகை மூலிகைகளுக்கு மேலே தெரியும். இவைகளின் உதவியால் புலி, கரடி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகளை அடக்கி விடுவார்கள். தாங்கள் தூங்கும்போதுகூட அவைகள் தங்களை அணுகாதபடி அவைகளின் வாயைக் கட்டிவிடுவார்கள். இதனால் இவர்களுக்கு மந்திர சாஸ்திரங்களிலும் பரிசயம் இருப்ப தாக நம்ப வேண்டியிருக்கிறது. எவ்வளவு பெரிய காயத்தையும் பச்சிலைச் சாறு போட்டுக் கட்டி ஆற்றி விடுவார்கள். நோய்களுக்கு மருந்து கொடுத்தாலும் தேவதை களுக்குப் பூசை போட்டுப் பலியிட் டால்தான் குணமாகும் என்று இவர்களுக்கு நம்பிக்கை.

நம் கிராமத் தொழிலாளிகள் வேலை செய்யும்போது பாடும் ஏலப் பாட்டு, ஓடப் பாட்டுக்களைப் போலவே சவரர்களும் விறகு வெட்டும்போதும் பயிர்த் தொழில் செய்யும்போதும் உரலில் குத்தும் போதும் இருவர் மூவராகச் சேர்ந்து பாடுவார்கள். அழகிய பொருள்களைப் பார்த்தால் குழந்தைகளைப் போல் அடக்க முடியாத மகிழ்ச்சியால் பூரித்துப் போவார்கள். இவர்கள் பாடும் பாட்டு இவர்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தும் முறையில் இருக்கும். நாகரிகம் போதாவிட்டாலும் கள்ளமற்ற கருத்துள்ள அந்தப் பாட்டுக்கள் கேட்க இன்பம் தரும். பூசைபோடும் போது உணர்ச்சி தோன்றத் தேவதைகளைப்பற்றிப் பாடுவார் கள். அவைகளில் சிருங்காரம், ஹாஸ்யம், பதங்களின் அமைப்பு இவை எடுப்பாகத் தெரியும். உற்ச வங்களில் எல்லாருமாகச் சேர்ந்து பாடிக் கரடி, குரங்குகளைப்போல் ஆடுவார்கள்.

தகப்பன் உயிரோடு இருக்கும் வரையில் பிள்ளைகள் எத்தனை வயதானாலும் பாகம் பிரித்துக் கொள்ள மாட்டார்கள். பிள்ளைகள் வேறாகக் குடியிருந்தாலும் தகப் பன் இருக்கும் வீட்டிலேயே சாப்பிட வேண்டும். தகப்பனுக்குப் பின், பெரியபிள்ளை வயது வராத தன் தம்பிகளுக்குக் 'கார்டிய'னாக இருந்து காக்கவேண்டும். கடைசி யில் பாகம் சமமாகப் பிரித்துக் கொள்வார்கள். இவர்கள் ஜாதியில் தத்து எடுத்துக்கொள்ளும் வழக் கம் இல்லை. கணவன் இறந்த பின் மனைவிக்குச் சொத்து என்பது இல்லை; அது கணவனுடைய தாயாதிகளுக்கே போகும். அவள் மறுமணம் செய்துகொள்ளா விட் டால் சொத்தை அடையும் தாயாதி அவளைக் காப்பாற்ற வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு.

இவர்களுக்குள் சண்டை வந்தால் தலைவன் ராஜி செய்துவைப்பான். காட்டில் வசித்து வந்தாலும் வழிப் போக்கர்களுக்கு இவர்கள் வீண் தொந்தரவு விளைக்க மாட்டார் கள்.

கொஞ்ச காலமாகச் சர்க்கார் இவர்களுக்கென்று பாடசாலை வைத்துக் கல்வி பரப்ப முயன்று வருகிறார்கள். அதில் அவ்வளவு அக்கறை காட்டாவிட்டாலும் உத்தியோகம் கிடைக்குமே என்ற ஆசையால் இவர்கள் ஏதோ கொஞ்சம் படித்து வைக்கிறார்கள். போலீஸிலும் கல்வி இலாகாவிலும் இவர்களில் சிலர் வேலை பார்த்து வருகிறார்கள்.

[இதோ சில கேள்விகள்: எங்கே உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 65-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. இந்திய சரித்திரத்தில் இந்தச் செயல்களைச் செய்தவர்பற்றி விவரம் வருகிறது:

(அ) உருவச் சிலைக்கு மாலையிட்டவன்; (ஆ) ஒரு பெண்ணைக் கண்ணாடியில் கண்டு களித்தவன்; (இ) மகனுக்காக உயிரை விட்டவன்; (ஈ) போர்க்களத்தைக் கண்டு மனம் உருகி, 'இனிப் போரே செய்வதில்லை' என்று முடிவு செய்தவன் - இவர்கள் யார்?

2. கப்பல்களில் வேலை செய்யும் சிப்பந்திகள் தொளதொளவென்று உடுப்பு அணிந்துகொள்கிறார்களே, அது ஏன் இறுக இருக்கக்கூடாது?

3. திருப்பதி வேங்கடாசல பதியைத் தரிசிக்கப் பல இடங்களிலிருந்து மக்கள் வருகிறார்கள்; கடல் மட்டத்திலிருந்து அந்த மலை எவ்வளவு உயரம்?

4. 'கால் வலித்தால் மழை வரும்' என்று மேல்நாட்டில் சிலர் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை சரியா, தவறா?

5. ஆரோக்கியமான ஒரு மனிதன் ஒவ்வொரு நிமிஷமும் எத்தனை தடவை மூச்சுவிடுவான்? இதோ கொடுத்திருக்கும் மூன்றில் ஒன்று சரி: 30, 20, 50. அது எது என்று கண்டுபிடித்தால் போதும்.

6. சில சாமானியப் பொருள்களுக்கு வைத்தியர்களும் ரசாயன சாஸ்திரிகளும் புதுமையான பெயர்களைச் சொல்கிறார்கள். நாம் மருண்டு போகிறோம். அவர்களுடைய பாஷையில் இங்கே சில வார்த்தைகளையும் அவை குறிப்பிடும் பொருள்களையும் வரிசை மாற்றித் தருகிறோம். எது எந்தப் பொருளைக் குறிக்கிறது என்று சொல்வீர்களா?

வார்த்தைகள்

(அ) க்ளுகோஸ்.
(ஆ) ஸோடியம் டெட்ராபொரேட்.
(இ) ஸிலிகான் டை ஆக்ஸைடு.
(ஈ) மெர்க்யூரி.
(உ) கால்சியம் கார்பொனேட்.
(ஊ) ஸுக்ரோஸ்.
(எ) பைனீன்ஹைட்ரோக்ளோரைடு
(ஏ) ஆர்ஸெனஸ் ஆக்ஸைடு.
(ஐ) ஸோடியம் கார்பொனேட்.
(ஒ) ஸோடியம் க்ளோரைடு.

பொருள்

(அ) பாதரசம்.
(ஆ) சோளச் சர்க்கரை.
(இ) சாக்குக் கட்டி.
(ஈ) வெண்காரம்.
(உ) கர்ப்பூரம்.
(ஊ) வாஷிங் சோடா.
(எ) மணல்.
(ஏ) உப்பு.
(ஐ) கருப்புச் சர்க்கரை.
(ஒ) வெள்ளைப் பாஷாணம்.

7. ஒரு ரெயில் வண்டித் தொடர், மணிக்கு 60 மைல் வேகத்தில் வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. கடைசி வண்டி

யில் பின்புறம் பார்த்த ஜன்னல் ஒன்று இருந்தது. அந்த ஜன்னல் பக்கம் நின்றுகொண்ட ஒருவர் ஒரு கல்லைப் பின்புறத்தில் வீசி எறிந்தார். அவர் அப்படி வீசிய வேகம் மணிக்கு 60 மைல். அந்தக் கல் எங்கே போய் விழுந்திருக்கும்?

8. ஓர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் புள்ளி விவரம் தயாரிக்கும் உத்தியோகத்துக்கு ஒருவர் மனுப் போட்டார். அந்தக் கம்பெனியின் தலைவர் அவருக்கு ஒரு கணக்குக் கொடுத்தார்; "இதோ பாரும்; கடிகாரத்தில் மணி இரண்டு அடிக்கும்போது ஒரு கிண்ணத்தில் நோய்க் கிருமிகள் இரண்டைப் போடுகிறீர். அந்தக் கிருமிகள் செகண்டுக்கு இரண்டு மடங்காகப் பெருகக்கூடியவை. மூன்று மணி அடித்தபோது அவை அந்தக் கிண்ணம் நிறையப் பெருகிவிட்டன. அப்படி என்றால், அவை பாதிக் கிண்ணத்துக்கு வரும்போது எவ்வளவு நேரம் ஆகியிருக்கும்?" என்பதுதான் அந்தக் கணக்கு. மனுதார் இரண்டை இரண்டால் பெருக்கினார்; நாலை நாலால் பெருக்கினார்; பதினாறைப் பதினாறால் பெருக்கினார். இப்படி ஒவ்வொரு செகண்டுக்குமாக அவர் பெருக்கிக் கொண்டே போனபோது ஏட்டில் அடங்காத அவ்வளவு ஸ்தானங்களுள்ள எண் வரையில் ஏறி விட்டது. அவர் திணறிக்கொண்டிருந்தார். பழைய புள்ளி விவர உத்தியோகஸ்தர் ஒருவர் அங்கே வந்தார். இவரைப் பார்த்து அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது; "ஓய்! இது மகா சுலபமான கணக்காயிற்றே! இதைப் போடவா இவ்வளவு திணறுகிறீர்?" என்று சிரித்துவிட்டு, வெகு சுலபமாக விடை சொன்னார். அதை நீங்கள் சொல்வீர்களா?

அநுபவத்துக்கேற்ற கருத்து

ஓர் உபநிஷத்தில் அழகிய கதை ஒன்று வருகிறது. ஒரு சமயம் தேவர், அசுரர், மனிதர் இந்த மூவரும் பிரம்மதேவரிடம் உபதேசம் பெறப் போனார்கள். பிரம்மதேவர் எல்லாருக்கும் 'த' என்ற ஒரே எழுத்தை உபதேசித்தார். தேவர், "நாங்கள் காமுகர்; விஷய போகங்களில் மூழ்கியிருப்பவர். ஆகையால் பிரம்மா 'த' என்ற எழுத்தின் மூலமாக, 'தமன்' அல்லது புலனடக்கத்தைப் போதித்திருக்கிறார்" என்றார்கள். அசுரர்களோ, "நாங்கள் மிகுந்த கோபமும் கடின சித்தமும் கொண்டவர்கள். 'த' என்ற எழுத்தின் மூலமாக, பிரம்மா 'தயா' அல்லது கருணையைப் போதித்திருக்கிறார்" என்றார்கள். மனிதரோ, "நாங்கள் லோபிகள்; பணப்பித்தர். 'த' என்ற எழுத்தின் மூலமாக, தானம் செய்யும்படி பிரம்மா உபதேசம் செய்திருக்கிறார்" என்று சொல்லிக்கொண்டார்கள். பிரம்மாவோ இந்த மூன்று பேர் கருத்தும் சரியென்றே சொன்னார். ஏனென்றால், இவர்கள் எல்லாருமே தங்கள் தங்கள் அநுபவத்திலிருந்து ஒவ்வொரு கருத்தைக் கொண்டார்கள்.

—வினோபா பாவே, 'கதர் மலர்', திருப்பூர்.

அற்புத சக்தி வாய்ந்த தெய்வத்துக்குக்கூடச்
சில சமயம் துரதிருஷ்டம் நேர்கிறது!

பசு பால் சொரிந்த விக்கிரகம்

யோகேந்திரநாத் குப்த

அன்று இரவு ஜயபுர் வீதி யெல்லாம் ஜகஜ்ஜோதியாய் இருந்தது. எங்கும் தீப அலங் காரம். பல தேசங்களைச் சேர்ந்த ஜனங்கள் விசித்திரமான உடை அணிந்து கடைத் தெருவில் சாமான் வாங்கிக்கொண்டும் விற்றுக்கொண்டும் இருந்தார்கள். எங்கே பார்த்தாலும் கோவில்கள். ஒவ்வொன்றும் அருமையான சிற்ப வேலை வாய்ந்தது.

அரண்மனையின் உச்சியிலுள்ள மாடத்தில் பெரிய மணி விளக்கு ஒளிர்ந்தது. மன்னர் ஊரிலே இருக்கிறார் என்று இதற்கு அர்த்த மாம். அரண்மனைக்குள்ளே தான் ஸ்ரீ கோவிந்தஜீயின் கோவில் இருக்கிறது. பெரிய தோரண வாயில் வழியாக உள்ளே போக வேண்டும். வழியில் பல மாடங்கள் அமைந்த ஹவா - மகல் என்னும் உயரமான மாளிகை இருக்கிறது. கோடைக் காலத்தில் ராணிமார்கள் இங்கே வாசம் செய்வார்கள்.

நைவேத்தியத்துக்குக் கொஞ்சம் பூவும் சர்க்கரைப் பொங்கலும் எடுத்துக்கொண்டு போக வேண்டு மாம். அரண்மனை முற்றம் விசாலமாக இருந்தது. உற்சவ காலமானதால் சந்நிதியின் அருகில் இருந்த முபாரக் மகலில் சில படை வீரர்கள் வீர நாட்டியம் ஆடிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கோவிலில் நுழையும்போது



கோவிந்தஜியும் ராதையும்

கர்ப்பூர ஆரத்தி நடந்துகொண் டிருந்தது. ஆனால் சிறிது நேரத் துக்குள் கொஞ்சங் கொஞ்சமாக ஜனங்கள் அங்கே வந்து கூடிவிட் டார்கள். பிராகாரத்தைச் சுற்றும் போது ஆண்கள், பெண்கள் எல்லா ரும் இனிமையாகச் சங்கீர்த்தனம் செய்துகொண்டே வந்தார்கள். இங்கே எழுந்தருளியிருக்கும் கோவிந்தரைப்பற்றி எத்தனையோ அற்புதமான வரலாறுகள் உண்டு.

கிருஷ்ணருடைய பேரன் அநிருத்தன். அவனுடைய மனைவி உஷாதேவி மகா உத்தமி. அவளுக் குக் கிருஷ்ணனிடத்தில் அபார பக்தி. தனக்கு ஒரு கிருஷ்ண விக்கிரகம் செய்து தரவேண்டு மென்று கணவனைக் கேட்டாள்.

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி; ஆகஸ்ட் '50), கல்கத்தா.

இதற்காக மூன்று விக்கிரகம் வார்க்க வேண்டியிருந்ததாம். முதல் விக்கிரகம் அழகாக இருந்தாலும் அவ்வளவு திருப்தியாகப் படவில்லை. இதற்கு மதன மோகன் என்று பெயர். இரண்டாம் தரம் வார்த்ததும் ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. இதற்குக் கோபீநாத் என்று பெயர். மூன்றாந்தரம் வார்த்த விக்கிரகத்தைப் பார்த்துவிட்டு உஷாதேவி சட்டென்று முக்காட்டினால் முகத்தை மறைத்துக்கொண்டாளாம். அதனால், இது அசல் கிருஷ்ண பகவானைப் போலவே இருந்தது என்று தெரிந்தது. இதுதான் இப்போது கோவிந்தஜீ என்று பிரசித்தி பெற்று விளங்கும் மூர்த்தி. இந்த மூன்று விக்கிரகங்களையும் சேர்ந்து பார்த்தவர்கள் சாட்சாத் கிருஷ்ண பகவானின் திருவுள்ளத்தையும் திருமுகத்தையும் பாதமலரையும் ஒரே சமயத்தில் தரிசிப்பதாக ஐதிகம்.

கஜினி முகம்மது படையெடுத்துச் சோமநாதர் கோவிலைத் தவிடுபொடியாக்கினான். அது முதல் நம் நாட்டில் பல கோவில்களுக்கு இப்படித் துர்த்தசை ஏற்பட்டு வருகிறது. இதே மாதிரி கோவிந்தஜீயின் கோவிலுக்கும் ஆபத்து நேர இருந்தது. அப்போது யமுனைக்கரையில் இந்த விக்கிரகத்தைப் புதைத்துவிட்டார்கள். பின்னால் அது கிடைத்த வரலாறு ரசமானது. ஸ்ரீ கிருஷ்ண சைதன்யருடைய சிஷ்யர்களில் முக்கியமானவர் ரூப கோஸ்வாமி. இவர் பிருந்தாவனத்தின் ஒரு மூலையில் யமுனைக்கரையோரம் ஒரு சிறு குடிசையில் வசித்து வந்தார். அங்கே பல நாள் பக்தி சாதனையில் ஈடுபட்டிருந்தார். அப்போது ஒவ்வொரு நாளும் இரவு ஒரு பசு அங்கே காட்டு வழியாகப் போவது போல் அவர் சொப்பனம் காணுவது வழக்கம். கடைசியில் ஒரு நாள் எழுந்து பார்த்தபோது நிஜமாகவே ஒரு பசு காட்டுக்குள் நுழைவதைக் கண்டார். அதைப் பின் தொடர்ந்தார். காட்டின் அடர்ந்த பாகத்தில் ஒரு மண் மேட்டண்டை வந்ததும் அந்தப் பசு நின்றது. அதன் மடியிலிருந்து தானாகவே அந்த மணல் மேட்டின்மேல் பால் தாரை தாரையாகச் சொரிந்தது. இதில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டுமென்று எண்ணினார் ரூபகோஸ்வாமி. அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தபோது ஸ்ரீ கோவிந்தஜீயின் விக்கிரகம் கிடைத்தது. அதை ஒரு குடிசையில் வைத்துப் பூஜித்து வந்தார். அப்போது ஆண்டு வந்த மொகல் பாதுஷா காபூலை நோக்கிப் படையெடுத்தான். ராஜபுத்திர மன்னரான மான்சிங்கும் அவனுக்குத் துணையாகப் புறப்பட்டுப் போயிருந்தார். காபூல் மன்னன் மொகல் பாதுஷாவுக்குப் பணிந்துவிட்டான். அங்கே மான்சிங் பல நாள் நோயுற்றுப் படுத்த படுக்கையாகக் கிடந்தார். அப்போது, "இந்த நோய் நீங்கி எழுந்திருந்தால் கோவிந்தஜீக்கு ஒரு கோவில் கட்டுவேன்" என்று பிரார்த்தனை செய்துகொண்டார். விரைவில் நோய் குணமாயிற்று. காபூலிலிருந்து திரும்பி வந்ததும் சிவப்புக் கல்லில் பிருந்தாவனத்தில் கோவிந்தஜீக்குப் பிரம்மாண்டமான ஓர் அழகிய கோவில் கட்டி முடித்தார். இதற்கு இப்போது 'மான மந்திரம்' என்று பெயர் வழங்கி வருகிறது. இது பிருந்தாவனத்தில் இருக்கிறது. அற்புத

மான சிற்பவேலை வாய்ந்தது. இதன் கோபுர உச்சியில் இரா வேளையில் பெரிய விளக்கு ஒன்று எரியுமாம். இதற்குத் தினந் தோறும் ஒரு மணங்கு நெய் செலவாகும் என்பார்கள். ஒரு நாள் இரவு ஆக்ரா அரண்மனை மாடியிலிருந்து இதை மொகல் பாதுஷாவின் ராணி கவனித்தாள். "அது என்ன?" என்று கணவனை விசாரித்தாள். "எனக்குத் தெரியாதே" என்றான் பாதுஷா.

"என்ன, நீங்கள் இந்த நாட்டுக்கே சக்கரவர்த்தி! இவ்வளவு சமீபத்தில் இருக்கும் விஷயங் கூடவா உங்களுக்குத் தெரியவில்லை!" என்று கேட்டாள்.

ரோஷத்தோடு பாதுஷா விஷயத்தை விசாரித்து அறிந்தான். 'இனி ஆக்ராவுக்குச் சமீபத்தில் விக்கிரகமோ கோவிலோ எதுவும் இருக்கக்கூடாது' என்று உத்தரவிட்டுவிட்டானும்.

இதைக் கேட்டதும் ஜயபுர் மன்னர், கோவிந்தஜீயின் விக்கிரகத்தையும் மற்றப் பிரதிமைகளையும் தம் ஊருக்கு எடுத்துக்கொண்டு போனார். 1711-இலிருந்து கொஞ்ச நாள் வரையில் இது ஜயபுருக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் இருந்தது. 1891-இல் அம்பர் காட் என்ற இடத்துக்கு எடுத்துப் போனார்கள். மகாராஜா ஜயசிம்மர் கடைசியில் ஜயபுர் நகரத்தைக் கட்டி முடித்ததும் இந்த விக்கிரகத்தை அங்கே கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தார். அதுமுதல் கோவிந்தஜீயின் பிரதிநிதிகளாகவே ஜயபுர் மன்னர்கள் ஆண்டுவருகிறார்கள்.

க்விஸ் விடை

(1) (அ) சம்யுக்தை; (ஆ) அலாவுத்தீன்; (இ) பாபர்; (ஈ) அசோகன். (2) நெருக்கடி சமயங்களில் சட்டென்று மடக்கிக்கொள்ளத் தொளதொளப்பாக இருந்தால் முடியும்; இறுக இருந்தால் முடியுமா? (3) 2,820 அடி. (4) சரி என்றே தற்கால விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மிகவும் உணர்ச்சியுள்ள கால்கள், அதிலும் முக்கியமாக அவைகளில் பிடிப்பான ஜோடு அணிந்திருக்கும்போது ஆகாயத்திலுள்ள அழுத்த மாறுதல்களை உணர்ந்துகொள்ளும் என்றும், அதனால் வலி ஏற்படும் என்றும் அவர்கள் சொல்கிறார்கள். (5) 20. (6) அ-ஆ; ஆ-ஈ; இ-எ; ஈ-அ; உ-இ; ஊ-ஐ; எ-உ; ஏ-ஒ; ஐ-ஊ; ஒ-ஏ. (7) எந்த இடத்தில் இருந்தபோது எறிந்தாரோ அங்கேயேதான் விழுந்திருக்கும். ஏனென்றால், வீசிய வேகமும் வண்டியின் வேகமும் ஒன்றுக்கொன்று ஈடுபட்டு, கல் செங்குத்தாக விழுந்திருக்கும். (8) மூன்று அடிக்க ஒரு செகண்டு இருக்கும்போது பாதிக் கிண்ணத்துக்கு வந்திருக்கும். இதற்குப் பெருக்கலெல்லாம் எதற்கு?

கோடை மழை

மூல ஆசிரியர்: வி. ஸ. காண்டேகர்
தமிழ் செய்தவர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ.

****

இந்தியாவிலேயே முதன்மையான கதாசிரியர் ஏழெட்டுப் பேருக்குள் ஒருவர் காண்டேகர். அவரையும் சரி, அவருடைய நூல்களைத் தமிழில் கொண்டுவந்திருக்கும் கா. ஸ்ரீ. ஸ்ரீ - யையும் சரி, தமிழ் நாட்டுக்குப் புதிதாக அறிமுகம் செய்துவைக்கத் தேவையில்லை.

****

"இதென்ன, இன்று வானம் இந்தப் பாடு படுத்துகிறதே!" என்று தாயைப் பார்த்துச் சொல்லிக்கொண்டே, மாலதி மூட்டை கட்டலானாள்.

"தெய்வம் உனக்குச் சொல்கிறது" என்றாள் பார்வதி.

ஜரிகைப் புடைவையை மடித்த வண்ணம், "என்ன சொல்கிறது?" என்று மாலதி கேட்டாள்.

"இன்று நீ போகவேண்டாம் என்கிறான் ஆண்டவன்."

நாடக மேடையில் அரைக்கணத்தில் ஒளி இருளாக மாறுவதுண்டு. அன்று இயற்கையும் அப்படித்தான் மாறியது. சற்று நேரம் முன்பு நல்ல வெயில் அடித்தது. திடீரென்று எங்கிருந்தோ முகில்கள் சூழ்ந்தன. சல்லடையிலிருந்து மாவு விழுவதுபோல, பிசுபிசுவென்று மழை தூறியது.

மாலதி மிகுந்த அன்போடு தாயைப் பார்த்தாள். "பிறந்தகத்தில் இருக்க யாருக்காவது அலுப்புத் தோன்றுமா?" என்றாள்.

"எல்லாம் வாய்ப்பேச்சோடு சரி!"

"பின்னே என்ன, உன்னைக் கட்டி அணைத்துக்கொள்ளட்டுமா?"

மாலதி இதை வேடிக்கையாகத்தான் கேட்டாள்; ஆனால் தாயின் விழிக்கடையில் தேங்கிய நீர்த்துளியைக் கண்டதும் அவள் நெஞ்சம் கலங்கியது. கையில் இருந்த புடைவையை அவள் அப்படியே வைத்துவிட்டு அம்மாவிடம் ஓடிவந்து, அந்தக் கண்ணீருக்கு அணை கட்டுபவள்போல அவளை இறுக அணைத்துக்கொண்டாள்.

கலகத்தை அடக்கச் சென்ற அவள் கண்கள் எதிரியோடு கலந்துகொண்டன.

அன்புக் கண்ணீர் என்பது என்ன? கங்கை வெள்ளம்!

"இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகியும் நீ இன்னும் சிறு குழந்தையாக இருக்கிறாயே, மாலதி!"

"ஏன், நான் என்ன செய்தேன்?"

காப்பிரைட்: 'ஊன் பாவுஸ்' (சிறு கதைத் தொகுப்பு: மராட்டிப் புத்தகம்)

"எதுக்குப் பைத்தியம்போல அழுகிறாய்?"

"ஏழு குழந்தைகளின் பாட்டி இப்படி அழும்போது இரண்டு குழந்தைகளின் தாய்—"

"குறைவாகத்தான் அழவேண்டும். கணக்கு வேண்டுமானால் போட்டுப் பார்!" என்று கூறிய படியே, அம்மா அந்த அணைப்பி லிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

"இதோ பாரம்மா, வெயில் வந்துவிட்டது!"

மழை நின்று வெயில் பிரகாச மாக வீசியது. மழையும் வெயிலும் அன்று கண்ணாமூச்சி விளையாடுவது போலத் தோன்றின.

வாசல் திண்ணையில் சதாசிவம் பாக்குவெட்டியால் பாக்கு நறுக்கிக் கொண்டு இருந்தார். பாக்குவெட்டியின் ஓசை நடுவில் நின்றது. "மாலதி!" என்று அவர் கூப்பிட்டார்.

"என்ன வேண்டும், அப்பா?"

"பஸ்ஸுக்கு நேரமாகிறதே!"

மாலதி பரபர வென்று சாமான்களை எடுத்து வைத்தாள். அவளுடைய இளவரசன், பாக்கு வெட்டியின் இன்னிசையைக் கேட்பதில் முனைந்திருந்தான். ராஜ கன்னிகை தொட்டி லில் தூங்கினாள்; இல்லாவிட்டால் இதற்குள் மாலதிக்கு வேலையே முடிந்திராது.

வாசலில் பஸ்ஸின் ஹார்ன் ஊதியது. மாலதி குழந்தைகளோடு பூஜையறைக்குச் சென்று வணங்கினாள். சதாசிவம் தெய்வத்தின் முன்னால் வெற்றிலை பாக்கும் தேங்காயும் வைத்தார். மாலதி தாய் தந்தையரை வணங்கி நின்றாள். அம்மா எல்லார் கையிலும் தயிர் ஊற்றினாள்.

"போய் வருகிறேன் என்று பாட்டியிடம் சொல்லு" என்று மாலதி மகனிடம் கூறினாள்.

"பாட்டி, போய்வறேன்" என்றான் இளவரசன்.

ராஜகுமாரி இன்னும் மௌன விரதத்தை விடவில்லை. ஆனால் பாட்டியைக் கண்டதும் அவள் கைநீட்டிப் பாய்ந்தாள்.

பார்வதியின் உள்ளம் பொங்கியது. வாசல் வரைக்கும் வந்து அவள் கழுத்தசைவினாலேயே மாலதிக்கு விடை கொடுத்தாள்.

சதாசிவம் அவர்களைக் கொண்டு விடப் போனார். பார்வதி வாசலிலேயே நின்றாள். வீட்டுக்குள் போக அவளுக்குப் பிடிக்கவே இல்லை. தாயின் சேலைத் தலைப்பின் மறைவிலிருந்து எட்டிப் பார்க்கும் சிறுகுழந்தைபோல இருந்த அந்த ஒய்யாரமான இரட்டையடுக்கு வீடு அவளுக்குப் பயங்கரமாகத் தோன்றியது. எவ்வளவு அழகாக இருந்த வீடு அது! இப்போது வெறிச்சென்று கிடந்தது. தேன் இல்லாத தேனடை கூட அழகாகத் தென்படுகிறது. ஆனால் அது வெறும் அழகுதான். அந்தத் தேனடையைக் கண்டு தேனின் இனிமையைச் சுவைக்க முடியுமா?

'இல்லறம் என்பது பப்பாளியைப் போல. அதன் ஒரு முனை இனிமையானது; மற்றொரு முனையில் அவ்வளவு சுவை இல்லை. இன்சுவையுள்ள பக்கமாக நாம் பப்பாளியைத் தின்ன ஆரம்பித்தோம். இனி அதன் சுவையற்ற பகுதியும், நினைவுகளாகிய நூற்றுக் கணக்கான உபயோகமற்ற விதைகளுமே மிஞ்சியிருக்கின்றன' என்று பார்வதிக்குத் தோன்றிற்று.

அவள் அந்த வீட்டைச் சோர்வோடு பார்த்தாள். அங்கே இருந்துதான் அவள் நாற்பது கோடைகளையும் நாற்பது மழைக் காலங்களையும் கண்டிருக்கிறாள். ஆனால் இன்று போலத் தனியாக - தன்னந்தனியாக - கணவனும் அவளும் மட்டுமாக அங்கே வசிக்கும் சந்தர்ப்பம் இந்த நாற்பது வருஷங்களில் ஒரு தடவைகூட ஏற்பட்டதில்லை. அவளுக்குக் கல்யாணம் ஆனபோது மாமனாரும் மாமியாரும், ஓரகத்தியும் நாத்திகளுமாக அந்த வீடு நிரம்பியிருந்தது. கிணற்றிலிருந்து சற்று நேரம் விட்டு விட்டுத் தண்ணீர் இழுப்பது போல், சாவு, கல்யாணம், வேலை வெட்டி இப்படி ஏதாவது ஒரு காரணத்தால் ஒவ்வொருவராக அந்த வீட்டைவிட்டுப் போனார்கள் என்பது உண்மை. ஆனால் கிணற்றைப்போலவே அந்தக் குடும்பத்திலும் உயிரூற்றுச் சுரந்து கொண்டே இருந்தது. பார்வதிக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. மூன்று அண்ணன்மாருடைய பரிசு தனக்குக் கிடைக்கும் என்று உறுதிப்படுத்திக்கொண்டுதானோ என்னவோ, மாலதி அந்த வீட்டில் வந்தாள்.

பிறகு பையன்கள் படிக்கப் போனார்கள். மாலதிமட்டும் வீட்டில் இருந்தாள். மெல்ல மெல்ல நாட்டுப் பெண்கள் வந்தார்கள். மாலதிக்குமணமானதும் எவளாவது ஒரு மருமகள் மாறி மாறி வீட்டில் இருப்பாள். இப்போது நாட்டுப் பெண்கள் எல்லாரும் அவரவர் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு வெளியூர்களில் இருக்கிறார்கள். மாலதிக்கும் புக்ககத்தில் பற்று மிகுந்துவிட்டது. இறைத்து இறைத்துக் கிணறு வற்றிப் போவதுபோல, பார்வதியின் வாழ்க்கையில் இன்று முதல் தடவையாக அந்த வீடு காலியாகத் தென்பட்டது.

வீட்டைப் பார்க்கப் பிடிக்காமல் அவள் இயல்பாக மேலே பார்வை

யைச் செலுத்தினுள். மரத்தில் ஓர் அழகிய கூடு தென்பட்டது. ஆனல் குஞ்சுகள் கொஞ்சுவதாக அவள் காதுக்குக் கேட்கவில்லே. 'இந்தக் கூட்டைப்போலத்தான் இனி நம் வீடும் இருக்கும். ஏன் அப்படி? அவருக்கு நம்மிடம் அன்பு இல்லேயா? சோறு, துணி, மருந்து, நகைநட்டு எதில்தான் அவர் நமக்குக் குறைவு செய்திருக்கிருர்? இந்த நாற்பது வருஷகாலத்தில் அவர் ஒரு நாளும் என்மேல் கை வைத்ததில்லே. எத்தனேயோ பேர் மனேவிமாரின் கழுத்தில் ஓயாமல் கத்தியை வைப்பது நமக்குத் தெரியாதா? இன்ன பொருள் வேண்டுமென்று நான் சொல்லி, அவர் வாங்கிவரவில்லே என்று ஒரு தடவைகூட நடந்ததில்லே. அவர் ஏதாவது சமாதானம் சொன்னுலும் எவ்வளவு அமைதியாகச் சொல்லு வார்!' என்று அவளுக்குத் தோன் றிற்று.

ஆயினும் சதாசிவத்தின் இந்த நாற்பது வருஷத்திய அன்பினுல் பார்வதிக்குத் திருப்தி உண்டாக வில்லே. வயலில் தாராளமான காற்றுக் கிடைக்கிறது; சோலேயி லுந்தான் அது கிடைக்கிறது. ஆனல் சோலேயிலுள்ள மணம் வீசும் காற்றின் பெருமை வயலி லுள்ள காற்றுக்கு ஏது?

அவளுடைய உள்ளத்துக்கு ஏதோ தனிப் பொருள் ஒன்று வேண்டியிருந்தது. கணவனுடைய கண்களில் அதை முதல் முதலில் அவள் காண முயன்ருள். சிறு குழந்தைக்குப் பிரியமான பொம்மை கிடைத்ததும் அதன் கண்கள் ஒளி வீசுவதுபோல், அவருடைய கண் கள் கல்யாணப் பந்தலில் பிரகாசித் தன. முதல் நாள் அவள் அவரைத் தனியே சந்தித்தபோது ஆஹா, அந்தமோகனப் பார்வை! பொம்மை இப்போது பட்சணமாக மாறியிருந் தது. பிறகு குழந்தைகள் பிறந்தன. சதாசிவத்துக்குப் புகழும் பணமும் கிடைத்தன. முதல் பார்வையில் இருந்த சஞ்சலம் போய், கம்பீரம் வந்தது. ஆனல் பார்வதிக்கு வேண்டியிருந்த பொருள் அவர் கண்களில் எப்போ துமே தென்படவில்லே. 'சில கொடி களின் இலேகள்தான் அழகாக இருக்கும். அவற்றின் மலரை மோந்து மூக்கைக் கோணிக்கொள் வதால் என்ன பயன்?' என்று அவள் பல முறை எண்ணினுள். இந்த மாதிரி சமயத்திலெல்லாம் அவளுக்கு ஒரு சம்பவம் ஞாபகத் துக்கு வரும்.

அவளுடைய முதல் கர்ப்பத்தின் போது நிகழ்ந்த செய்தி அது. அப்போது அவளுக்கு ஐந்தாறு மாதம். கைகால்கள் ஓய்ந்து போயின. மாமியார் மிகவும் கண் டிப்பானவள். பார்வதியைப் பிறந்த வீட்டுக்கு அனுப்ப அவள் சம்மதிக்க வில்லே. வேலேயில் கொஞ்சம் குறைந்தாலும் திட்டுவாள்.

அப்போது ஒருநாள் சதாசிவம் ஏதோ பேச்சுவாக்கில், "இப்போது நீ உன் விருப்பப்படி சந்தோஷமாக இருக்கவேண்டிய நாள் - உனக்கு என்ன வேண்டுமானுலும்—" என்று பார்வதியிடம் சொன்னர்.

அவளுக்கு எரிச்சல் தாங்கவில்லே. "உண்மைதான் நீங்கள் சொல்வது. எனக்குக் குழந்தை வேண்டும்; ஆனல்—" என்ருள்.

"யார் வேண்டாம்?"

கேள்வியின் பதிலே மாற்றுவதற் காக, "எனக்கு ஒரே ஓர் ஆசை!" என்று அவள் சொன்னுள்.

"என்ன?"

"நாம் எங்காவது தனியே போய்க் கொஞ்ச நாளைக்கு இருக்கலாம், வாருங்களேன்!"

"குடும்பத்தில் சச்சரவு ஏற்படும் படியான இந்தமாதிரி ஆசையைத் திருப்திப்படுத்த என்னால் முடியாது."

மாமியாரின் தொந்தரவிலிருந்து தப்புவதற்குத்தான் பார்வதி இதைச் சொன்னாள். சதாசிவம் பிறகு நாள் கடத்திக்கொண்டே இருந்தார். தனக்கு அவர் எவ்வித மான சுதந்தரமும் கொடுக்கமாட்டார் என்று அன்றையிலிருந்து அவளுக்கு நிச்சயமாகிவிட்டது. சதாசிவம் நாற்பது ஆண்டுகள் அவளிடம் அன்பு செலுத்தினார். ஆனால் அது மனைவி என்ற முறையில், வீட்டுக்காரி என்ற முறையில், தாய் என்ற முறையில்.

சதாசிவம் திரும்பிவருவதைப் பார்வதி கண்டாள். அவர் தம் அங்கவஸ்திரத்தினால் கண்ணைத் துடைத்துக்கொள்வதை அவள் கவனித்தாள். வீடு வெறிச்சென்று இருந்ததனால் அவருக்கும் வருத்தமாக இருக்கும். அவள் மரத்தின் மறைவில் நின்றிருந்தாள். அவர் நேராக வீட்டை நோக்கிப் போனார். ஆனால் படிகளில் ஏறவில்லை. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, பள்ளியிலிருந்து வந்த சிறுவன் தாயை மகிழ்ச்சியோடு கூப்பிடுவதுபோல, "பார்வதி!" என்று கூவினார்.

அந்தக் கூக்குரல் அவள் காதில் விழுந்தது. ஆனால் ஆச்சரியத்தினால் அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கல்யாணத்தின்போது சடங்குக்காகக்கூட அவர் அவளைப் பெயர் சொல்லிக் கூப்பிடவில்லை. தூரத்து உறவில் எவளோ ஒரு தங்கை, அவர் மனைவியின் பெயரைச் சொல்லத்தான் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள். அப்போது அவர், "மலைமகளுக்கு வடமொழியில் என்ன பெயரோ அதுதான் என் மனைவியின் பெயர்" என்றார்.

சதாசிவம் படிகளில் ஏறி வீட்டுக்குள் போனார். அவசரமாகத் தானும் உள்ளே செல்ல வேண்டுமென்று அவளுக்குத் தோன்றிற்று. ஆனால் மழைத்துளி விழத் தொடங்கியதும் சாதகப் பறவை வாய் மூடுமா?

அவள் அங்கேயே நின்றிருந்தாள். கூடத்திலிருந்து, "பார்வதி!" என்ற கூக்குரல் கேட்டது.

இவ்வளவு நேரம் வீசிய வெயில் மறைந்து, மறுபடி தூற்றல் ஆரம்பித்தது.

தான் மழையில் நனைவதாகவே அவளுக்குத் தோன்றவில்லை. அவருடைய கூக்குரல்தான் அவள் காதில் சுழன்றது.

புழைக்கடையிலிருந்து, "பார்வதி!" என்ற குரல் வந்தது.

பழக்கமான அவருடைய குரலைக் கேட்டதும் தொழுவத்தில் இருந்த பசு கூவியது.

தன்னைத் தேடுவதற்காக அவர் பின்புறம் போயிருப்பது தெரிந்திருந்தும் அவள் நின்ற இடத்தை விட்டு அசையவில்லை. குடும்பத்தில் இந்த இன்பமான கண்ணாமூச்சி விளையாட்டை நாற்பது வருஷம் கழித்து இப்போதுதான் அவள் முதல் முதலாக விளையாடுகிறாள்.

ஆகாயத்திலும் அதுதான் நடந்தது. மேற்கே சென்ற கதிரவன் மழைத் தேவதையோடு வேடிக்கையாக விளையாடிக்கொண்டிருந்தான்.

அந்தத் தூற்றலில் நனைந்துகொண்டே சதாசிவம் சுற்றினார். அவருக்கு உரக்கப் பதில் சொல்ல

வேண்டும் என்றுதான் பார்வதி விரும்பினள். ஆனல் மனமும் உதடும் எப்போதும் இணைகின்றனவா என்ன ?

அவள் இருக்கும் பக்கமாக அவர் திரும்பினர். மரத்தடியில் அவள் நனைந்துகொண்டு நிற்பதைக் கண்டதும் அவர் புன்னகை புரிந்து, "இப்படித் தூற்றலில் நனைய நீ என்ன சிறு குழந்தையா?" என்றார்.

"பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது மட்டும் என்னவாம்?"

"அதற்குக் காரணம் இருக்கிறது."

"என்ன ?"

"இன்று மாலதி போனது நல்லதுதானே?"

"இதென்ன பேச்சு? யார் காதிலாவது விழுந்தால் என்ன சொல்லமாட்டார்கள்!"

"எனக்கு என்னவோ அது சரியாகத்தான் தோன்றுகிறது!"

"ஆண்களின் மனமே கடுமையானது."

"நீ என்ன சொன்னலும் சரி, எனக்கு இப்போது மிகவும் ஆனந்தமாக இருக்கிறது."

"அதற்காகத்தான் கண்ணைத் துடைத்துக்கொண்டீர்களோ? இவ்வளவு ஆனந்தத்துக்குக் காரணம் என்ன, சொல்லுங்களேன்!"

"நான் எல்லாக் கடன்களையும் தீர்த்தாகிவிட்டது. ஒரே ஒரு கடன் மட்டும் பல வருஷங்களாக நின்றிருந்தது."

"மாலதி உங்களுக்கு இவ்வளவு பளுவாகவா இருந்தாள்? கொடிக்குக் காய் கனமா என்ன? யாரிடம் கடன் என்கிறீர்கள் ?"

"உன்னிடந்தான்."

"என்னிடமா? எனக்கு ஞாபகம் இல்லையே!"

"நீ பெரிய தாராளமான சாவ்கார். இந்தக் கடன் நாற்பது வருஷமாகப் பாக்கி."

"அப்படியானல் கடன் பத்திரம் காலாவதியாகிவிட்டதோ?"

"ஆனல் மனத்திலிருந்து அது அழியவில்லையே?"

"அப்படிப்பட்ட கடன் என்ன என்றுதான் தெரிந்துகொள்கிறேனே!"

சதாசிவம் அவளிடம் நெருங்கி வந்து அன்போடு பார்த்துக்கொண்டே, "உன்னுடைய ஓர் ஆசையை நான் ஒரு நாள்கூட நிறைவேற்றவில்லையே?" என்றார்.

"அது என்ன ?"

"நாம் இருவரும் எங்காவது தனியாக இருக்கவேண்டும், ராஜாவும் ராணியுமாக! நாற்பது வருஷங்கள் கழித்து இன்று அந்தச் சந்தர்ப்பம் வந்திருக்கிறது, பார்வதி!"

அவள் அவருடைய கண்களைப் பார்த்தாள். மணப்பந்தலில் நிற்கும் மணமகள், படுக்கையறை அழகி, குடும்பத்துத் தொல்லைகளைத் தாங்கும் வீட்டுத்தலைவி, குழந்தைகளின் தாய் ஆகிய இத்தனை நோக்கங்களோடு இன்றுவரைக்கும் அவர் அவளைப் பார்த்திருக்கிறார். ஆனல் இன்றைய இந்தப் பார்வை முற்றும் புதிதாக இருந்தது. பரிவு, வேட்கை, உதவி ஆகிய எல்லாவற்றுக்கும் புறம்பே ஓர் அற்புத ஒளி அந்தப் பார்வையில் மிளிர்ந்தது. கிணற்றில் வற்றிக் கிடந்த ஊற்றுக் களகளவென்று திடீரெனச் சுரப்பதுபோல, பார்வதியின் உள்ளம் பொங்கியது.

"நீ எப்போதாவது மிருச்சகடிக நாடகம் பார்த்திருக்கிறாயா?" என்று சதாசிவம் கேட்டார்.

"சிறுவயதில் பார்த்திருக்கிறேன்."

''வசந்தசேனை இப்படித்தானே மழையில் நனைந்துகொண்டு போகிருள்?''

கிழத்தனத்தில் பாலியம் திரும்பும் என்று ஏன் சொல்கிருர்கள் என்பது இப்போதுதான் பார்வதிக்கு விளங்கியது. அவள் தன் மகிழ்ச்சியை மறைப்பதற்காக மேலே பார்த்தாள்.

மரத்தின்மேல் கூடு அசைவது தெரிந்தது. மழையில் நனைந்த ஜோடிக்கிளிகள் சிறகை அடித்துக் கொண்டு கூட்டுக்குள் புகுந்தன. ஆகாயத்தில் அழகிய வானவில் தெரிந்தது. மிகவும் தெளிவாகத் தெரிந்ததால் அதன் அழகு சற்றுக் குறைந்திருப்பதாக அவளுக்குத் தோன்றிற்று. எதிர்த்திசையில் அவள் பார்வையைத் திருப்பினுள். அங்கும் வானவில் இருந்தது; அந்த வானவில்லின் பிரதிபிம்பந்தானே இது என்று நினைக்கும்படியாக இருந்தது. ஆனுல் அது மங்கலாகவும் அதனுலேயே மோகனமாகவும் தென்பட்டது.

ஆணி போனதால்

பெஞ்சமின் பிராங்கிளின் ஒரு சமயம் இப்படி எழுதினுர்:

''சின்ன விஷயம் ஒன்றை அசட்டை செய்வதால் பெருங் கேடு விளையக் கூடும். ஆணி போனதால், லாடம் போச்சு; லாடம் போனதால் குதிரை போச்சு; குதிரை போனதால், அதில் சவாரி செய்த மனிதனே போய்விட்டான்.''

—வில்லியம் ஸி. புல்லிட்

செத்த பிறகு

உலகத்தையே ஜயிக்கப் புறப்பட்ட மகா அலெக்சாண்டர் என்ற மாஸிடோனியா மன்னரின் காலத்தில் டயொஜினீஸ் என்று ஒரு ஞானி இருந்தார்.

அந்த ஞானி ஒரு சமயம் ஏராளமான மனித எலும்புகளைக் குவித்து வைத்து, அவைகளை என்னவோ ஆராய்ந்துகொண்டிருந்தார்.

இதைக் கண்ட அலெக்சாண்டர், ''என்ன தேடுகிறீர்கள்?'' என்று கேட்டார். ''வேறு ஒன்றுமில்லை. இவைகளிலே உங்கள் தகப்பஞரின் எலும்பு எது என்று கண்டுபிடிக்கத்தான் முயன்றுகொண்டிருக்கிறேன். மற்ற அடிமைகளின் எலும்புக்கும் உங்கள் தகப்பஞரின் எலும்புக்கும் ஒன்றும் வித்தியாசம் தெரியாததால் கஷ்டமாயிருக்கிறது'' என்ருர் ஞானி.

—'மகஸீன் டைஜெஸ்ட்'

பாரிஸ் கூனன்

விக்டர் ஹ்யூகோ

★

'ஏழை படும் பாடு' (லா மிஸரபிள்) என்ற நாவலை எழுதிய இதே ஆசிரியர்தான் இந்த 'நாட்டர் டாம் கூனன்' (ஹஞ்ச்பாக் அவ் நாட்டர் டாம்) என்பதையும் எழுதியவர். இரண்டாவது வட்டமேஜை மகா நாட்டுக்குச் சென்ற மகாத்மா காந்தி, மார்ஸேல்ஸ் நகரில் அடி எடுத்து வைத்தபோது, "ஒரு விக்டர் ஹ்யூகோவையும் ஒரு ரொமேன் ரோலந்தையும் பெற்றெடுத்த நாடு அல்லவா இது!" என்று வியந்தார். விக்டர் ஹ்யூகோ 1802-இல் பிறந்து 1885-வரை வாழ்ந்த பிரெஞ்சு ஆசிரியர்; சிறந்த கவிஞர்; நாடகாசிரியர்; வேதாந்தி; சரித்திராசிரியர்; அரசியல்வாதி. பதினாறு வயதில் இவர் தமது முதல் நாவலை எழுதினார். 'ஏழை படும் பாடு' ஓர் அற்புத காவியம் என்றே சொல்ல வேண்டும். 'நாட்டர் டாம் கூனன்' மகா உருக்கமான நாவல். இரண்டும் உலகப் பிரசித்தமானவை.

[படம்: விக்டர் ஹ்யூகோ]

பாரிஸ் கூனன்

1482-ஆம் ஆண்டு ஜனவரி மீ 6-ஆம் தேதி பாரிஸ் நகரம் ஒரே அல்லோலகல்லோலப் பட்டது. அன்று இரட்டை விழாக் கொண்டாடும் நாள். ஒன்று 'எபி பனி' என்ற மன்னர் தினம்; மற்றது, மூடர் விருந்து. 'நீதி மாளிகை'யில் அன்று நடக்கப் போகும் மர்ம நாடகத்தைப் பார்ப்பதற்காக ஜனங்களெல்லாம் ஆவலோடு காத்திருந்தார்கள். அந்த நாடகம் முடிந்ததும் மூடர்களின் போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிளாண்டர்ஸ் நாட்டு ராஜாங்க ஸ்தானிகர்கள் அந்த நாடகத்தைப் பார்ப்பதற்காக இரண்டு நாள் முன்னதாகவே வந்திருந்தார்கள்.

'நீதிமாளிகை'யில் உள்ள பெரிய மண்டபத்தின் ஒருபுறத்தில் பிரமாண்டமான சலவைக்கல் மேஜை ஒன்று போட்டிருந்தது. நாடகம் நடிப்பதற்கான மேடையை அந்த மேஜைக்கு மேலே மிகவும் உயரமாக அமைத்திருந்தார்கள். மேடைக்குக் கீழ் உள்ள இடைவெளியே நடிகர்கள் வேஷம் பூணும் அறை. அலங்காரத் திரைகளைத் தொங்கவிட்டு இதை மறைத்திருந்தார்கள். வேஷம் பூண்ட நடிகன் இந்த அறையிலிருந்து மேலே ஏறி மேடைக்கு வருவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது ஒரு முரட்டு ஏணி. சபையோர் அத்தனை பேரும் முற்றும் பார்க்கக் கூடியபடி பகிரங்கமாகக் கிடந்தது அந்த ஏணி.

மண்டபத்தில் கூடிய ஜனங்கள் வெகு நேரம்வரை நல்லதனமாகவும் உற்சாகத்தோடும் காத்திருந்தார்கள். கூச்சலிட்டும் பாட்டுப் பாடியும் ஒருவரை ஒருவர் பச்சை பச்சையாகக் கேலி செய்தும் பொழுது போக்கிக்கொண்டிருந்தார்கள். மணி பன்னிரண்டு நெருங்கிவிட்டது; பிளாண்டர்ஸ் நாட்டு ஸ்தானிகர்கள் வந்து சேரவும், நாடகம் தொடங்கவும் குறித்த நேரம் அதுதான். ஜனங்களில் சில பகுதியினருக்கு எரிச்சல் மூண்டுவிட்ட குறிகள் தோன்றின. சர்வகலாசாலையின் தலைவரும் பிற அதிகாரிகளும் இப்போது வந்து சேர்ந்ததால், அந்த ஜனங்களின் சலிப்புச் சிறிது தணிந்தது.

மணி பன்னிரண்டு அடித்துவிட்டது. ஜனங்களின் சந்தடி சட்டென்று முற்றும் அடங்கி எங்கும் மௌனம் நிலவியது. பிளாண்டர்ஸ் நாட்டு ஸ்தானிகர்களுக்காகப் போட்டிருந்த பீடங்களையே எல்லார் கண்களும் நோக்கின. பல நிமிஷ நேரம் சென்றது. அந்த ஸ்தானிகர்கள் வந்து சேரவில்லை. ஜனங்கள் மீண்டும் அமைதி குலைந்தார்கள்; கோபக் குரல்கள் எழுந்தன.

அதிகாரிகள் என்ன செய்தும் ஜனங்களைச் சாந்தப்படுத்த முடியவில்லை. வேஷம் பூணும் அறையின் திரைகளைத் தூக்கிவிட்டு, நடிகர் வியாழபகவான் மெல்ல வெளியே தலையை நீட்டி, சலவைக்கல் மேஜையின் ஓரத்துக்கு வந்து சேர்ந்தார். "மாட்சிமை தங்கிய குருபிரான் வந்ததும் ஆட்டம் தொடங்கும்" என்று அறிவித்தார். அவர் பேசி முடிக்கும்வரையில் அமைதியாக இருந்த ஜனங்கள்,

அதற்குப் பின், "உடனே ஆட்டம் தொடங்க வேண்டும். இல்லாவிட்டால், உங்கள் எல்லாரையும் நொறுக்கித் தள்ளி விடுவோம்" என்று கூச்சலிட்டார்கள்.

கந்தல் உடுத்திருந்த அழகான ஒரு வாலிபர், இந்தச் சமயத்தில் வியாழபகவானின் அருகே சென்றார். "வியாழமூர்த்தியே, உடனே தொடங்கிவிடுங்கள் ஆட்டத்தை. குருபிரானிடமும் கொத்தவாலிடமும் நான் சொல்லிச் சரிப்படுத்தி விடுகிறேன்" என்றார்.

நடிகனும் சிறிதும் தயங்காமல், "நகர மக்களே, இதோ தொடங்கி விடுகிறோம்" என்று உரக்கக் கத்தினன்.

இதைக் கேட்ட ஜனங்கள் அளவிலடங்காத குதூகலத்துடன் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

அந்தச் சந்தடி அடங்குவதற்கு முன்னே, நாடக மேடைமீது நான்கு நடிகர்கள் ஏறினர்கள்.

ஆட்டம் தொடங்கியது. நடிகர்கள் உடுத்திருந்த விநோதமான உடைதான் சற்றுத் தமாஷாயிருந்தது. வேறொன்றும் சுவாரஸ்யப்படவில்லை. ஆனால், நாடக பாத்திரங்களின் சம்பாஷணைகளை ஒரே ஓர் ஆசாமி மட்டும் வெகு கவனமாய்க் கேட்டுக்கொண் டிருந்தார். அவர்தான் அந்த அழகான வாலிபர்; "குருபிரானிடம் நான் சொல்லிக்கொள்கிறேன்" என்று வியாழ பகவானிடம் சொன்னரே அந்த வாலிபர். பீயரி கிரின்காயிர் என்பது அவர் பெயர். நாடகத்தில் அவர் கொண்ட சிரத்தைக்கு ஒரு காரணம் உண்டு: இந்த நாடகத்தை எழுதிய ஆசிரியர் அவரே.

நாடகம் வெகு மும்முரமாக ஓடத் தொடங்கிய சமயத்தில் குருபிரானும் பிளாண்டர்ஸ் நாட்டு ஸ்தானிகர்களும் அவர்களுடைய எடுபிடி ஆள் பரிவாரங்களும் மண்டபத்தில் நுழைந்தார்கள். நாடகத்தை நடிகர்கள் சற்று நிறுத்தினர்கள். குருபிரானும் பிறரும் அமர்வதற்காக ஒதுக்கி வைத்திருந்த பீடங்களின் மீதே எல்லார் கண்களும் சென்றன.

அந்தப் பிரபலஸ்தர்களைக் கண்டு, ஜனங்கள் சிறிது நேரம்வரைக்கும் பிரமித்துப்போய் அமைதியாயிருந்தார்கள். ஆனல், அது 'மூடர்களின் விருந்து' நடக்கும் நாள்தானே; அன்றுதான் தங்கள் இஷ்டப்படியெல்லாம் நடக்கலாமே என்ற விஷயம் சட்டென்று ஜனங்களுக்கு ஞாபகம் வந்துவிட்டது. குருபிரானையும் அவருடைய பரிவாரத்தையும்பற்றிக் கண்டபடியெல்லாம் கேலி செய்யத் தொடங்கினர்கள்.

பதினைந்து நிமிஷத்துக்கெல்லாம், சிரித்த முகமும் நெட்டையான உடம்பும் உள்ள ஒருவர் எழுந்து நின்றார். பிளாண்டர்ஸ் நாட்டு ஸ்தானிகர் அவர். ஜனங்களை நோக்கி, "ஆட்டத்தை உடனே நிறுத்திவிடலாம். மூடர்களின் போப்பாண்டவரைச் சபையோர் தேர்ந்தெடுக்க ஆரம்பிக்கலாம்" என்று அவர் சொன்னர். மேலும் தொடர்ந்து, "எங்கள் கெண்ட் நகரில் மூடர்களின் போப்பாண்டவரை நாங்களும் தேர்ந்தெடுப்பது உண்டு. அதற்கு நாங்கள் இந்த மாதிரிதான் ஒரு கூட்டத்தைக் கூட்டுவோம். ஜனங்களில் எவனுக்கு விருப்பமோ அவன் ஒரு தொளை வழியாகத் தலையை நீட்டி மற்றவருக்கு அழகு காட்டலாம். அப்படி அழகு காட்டுகிறவரில் எவன் மிகவும் விகாரமாக முகத்தை

மாற்றுகிருனே அவனே மூடர்களின் போப்பாண்டவர். எங்கள் நாட்டில் நடக்கும் இந்த வழக்கத்தையே நீங்களும் இப்போது இங்கே பின்பற்றலாம்'' என்று யோசனை சொன்ஞர்.

நகரவாசிகள் இந்த யோசனையை மிகவும் குதூகலத்தோடு ஆதரித்தார்கள். சலவைக்கல் மேஜைக்கு எதிரே ஒரு சின்னஞ் சிறு கோயில் இருந்தது. போப்பாண்டவர் பதவித் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களெல்லாம் அந்தக் கோயிலுக்குள் புகுந்து, அதன் ஜன்னல் வழியாகத் தலையை நீட்டிச் சபையோருக்கு அழகு காட்டவேண்டும் என்று ஏற்பாடாயிற்று.

ஒருவருக்குப் பின் ஒருவராக அநேக அபேட்சகர்கள் இப்படி அழகு காட்டி, ஜனங்களை மகிழ்வித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் மகா விகாரமாகத் தங்கள் முகங்களைக் கோணங்கி செய்துகொண்டார்கள். எவருடைய முகம் பரம விகாரமாயிருந்தது என்று முடிவு செய்வதே அசாத்தியமாகத் தோன்றியது. இந்த நிலையில் திடீரென்று இடிமுழக்கம் போன்ற சந்தோஷ ஆரவாரம் வானைப் பிளந்தது. மூடர்களின் போப்பாண்டவரை எல்லாரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள்.

அந்த நிமிஷத்தில் காட்சியளித்த ஒரு முகத்தைப்போல் சர்வ விகாரமான ஒன்றை அதற்கு முன் எவரும் எங்கும் கண்டதில்லை. நம்பவே முடியாத அவ்வளவு விகாரமாயிருந்தது அந்த முகம். குதிரை லாடம் போன்ற வாய்; முப்பட்டைத் தேர்போன்ற மூக்கு; வள்ளிக்கிழங்கின் சல்லிவேர்கள் போன்ற புருவ மயிர் தொங்கிய ஒரு கண்: சுண்டைக்காய் போன்ற சதை மூடிய மறு கண்; கோணல் மாணலான பல் வரிசை; வக்கிர தந்தம் ஒன்று துருத்திக்கொண்டிருந்த எருமைத் தோல் உதடு - இத்தனை அவலட்சணங்களும் அந்த முகத்தில் பொருந்தியிருந்தன. அபூர்வமான அந்த முகம் எதற்கு உரியதோ அந்த உடம்பு முழுவதும் தோன்றியபோது, ஜனங்களின் குதூகலம் எல்லை கடந்து போயிற்று. அந்த உடம்பின் முதுகிலே பிரம்மாண்டமான ஒரு முண்டு நிமிர்ந்து நின்றது; அதற்கு ஈடு கொடுக்கும் துலாக்கோல் போலத் தொப்பை 'பும்' என்று உப்பியிருந்தது. கையும் காலும் ராட்சசப் பருமன் பருத்திருந்தன. காலின் கோணலைச் சொல்லி முடியாது. அவன்தான் குவாசிமோடோ! ஆலயமணி அடிக்கும் சிப்பந்தி; நாட்டர் டாம் மாதாகோயிலில் வேலைபார்க்கும் கூனன்; ஒற்றைக் கண்ணன்; கப்பைக் காலன்; பெருஞ் செவிடன்!

மூடர்களின் போப்பாண்டவருக்குரிய அட்டைக் கிரீடத்தையும் ஜிகினுப் போர்வையையும், கூனனுக்குச் சார்த்திவிட்டார்கள். அவனுக்கு ஒன்றும் புரியாததால், அவனும் வெகு உற்சாகமாகவே இருந்தான். பலவர்ணம் பூசிய ஒரு டோலியில் அவனை உட்கார்த்திவைத்தார்கள். மூடர்கள் சங்கத்து ஸ்ரீபாதந்தாங்கிகள் பன்னிரண்டு பேர், அந்த டோலியைத் தங்கள் தோளிலே தூக்கி வைத்துக்கொண்டார்கள். நகரத்திலே வீதிவலம் வரப் பவனி புறப்பட்டுவிட்டது.

நீம் நாடகத்தைப் பூர்த்தியாய் நடித்துவிடலாம் என்ற நம்பிக்கை ஆசிரியர் கிரின்காயிருக்கு மட்டும்

இன்னும் தளரவில்லை. அதை நடித்து முடிக்குப்படி கடைசி முயற்சியாக நடிகர்களை அவர் தூண்டிக்கொண்டிருந்தார். மிச்சம் மீதி இருந்த நடிப்பைக் காண, மண்டபத்தில் மிகச் சிலரே பின் தங்கியிருந்தார்கள்.

இந்த வேளையில், "எஸ்மெரால்டா! சதுக்கத்தில் எஸ்மெரால்டா!" என்று யாரோ கத்தினார்கள். 'அது யாரடா எஸ்மெரால்டா!' என்று அந்த ஆசாமியைப் பார்க்கும் ஆவலுடன் எல்லாரும் எழுந்து ஓட்டமாய் ஓடி விட்டார்கள்.

ஆசிரியரின் கடைசி நம்பிக்கையிலும் மண் விழுந்தது. "இந்தப் பாரிஸ் நகரவாசிகளே மகா முட்டாள்கள்!" என்று சபித்துக் கொண்டே, அவருங்கூட வீதியை நோக்கி ஓடினார். கால் போன திசையில் வெகு நேரம் வரைக்கும் நடந்து திரிந்தார். பிறகு, கிரீவ் என்னும் இடத்தில் ஏதோ சொக்கப் பனை கொளுத்தி எரிந்துகொண்டிருப்பதைக் கண்டு அதன் அருகே சென்றார்.

அந்தத் தீயைச் சூழ்ந்து வட்டமாக ஜனங்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நடுவிலே ஒரு வாலிபப் பெண் நாட்டியமாடிக் கொண்டிருந்தாள். அதில் லயித்துப் போய் அத்தனை பேரும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தப் பெண் சற்றுக் கறுப்பாயும் கொடிபோல் ஒல்லியாயும் இருந்தாள். என்றாலும், மிகவும் லட்சணமாக இருந்தாள். தரையிலே கால்விரல்களை ஊன்றித் தலைக்கு மேலே தன் சுந்தரக் கைகளைத் தூக்கி, அவள் தட்டாமாலை சுற்றியபோது, அவளுடைய கரிய விழிகள் தீச்சுடர்போல் மின்னின. அவள் ஒரு குறத்தி என்று நன்றாய் விளங்கியது.

நூற்றுக்கணக்கான பேரின் கண்கள் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தன. அவைகளில் ஒரே ஒரு ஜதை மட்டும் விஷப் பார்வை பார்த்தன. அந்தப் பார்வையிலே ஒரு புறம் தன்னை மறந்த பரவசம் ததும்பியது; மறுபுறம் பயங்கர அருவருப்புப் பொங்கியது. இந்தக் கண்களுக்குரிய மனிதனுக்கு வயது முப்பத்தைந்துக்கு மேல் இராது. இதற்குள்ளே அவன் தலையில் வழுக்கை விழுந்திருந்தது; கண்களில் சுருக்கம் விழுந்திருந்தது. கூட்டத்தில் மறைந்திருந்த அவனுடைய உடையைக் காண முடியவில்லை.

குறப்பெண் தன் ஆட்டத்தை நிறுத்திவிட்டுக் குனிந்தாள். தன் அருகே படுத்திருந்த ஓர் ஆட்டுக் குட்டியைக் கூப்பிட்டாள். அது உடனே துள்ளி எழுந்தது. தன் எஜமானி போட்ட உத்தரவுகளுக்கெல்லாம் கீழ்ப்படிந்து, சாமர்த்தியமாய்ப் பல வேடிக்கைகள் செய்தது. அதைப் பார்த்தவரெல்லாம் வியந்து நின்றார்கள்.

"இதில் ஏதோ மந்திர சூன்யம் இருக்கிறது!" என்றான் அந்த வழுக்கைத் தலையன். ஜனங்களெல்லாம் இதைக் கேட்டுப் பேராரவாரம் செய்தார்கள். அந்தக் குறப் பெண் மட்டும் நடுநடுங்கியவளாய்த் திரும்பி, தன் வேடிக்கையைத் தொடர்ந்து செய்ய முயன்றாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் சதுக்கத்தின் ஒரு மூலையிலிருந்து எவளோ ஒரு பெண்ணின் குரல் கேட்டது: "ஏ எகிப்து நாட்டு மாயக்கள்ளி, இந்த இடத்திலிருந்து போகிறாயா இல்லையா?" என்று தான் கத்தியது அந்தக் குரல்.

அதிலே விஷம் தோய்ந்திருந்தது. அதைப் பின்பற்றி வேறு பலர் இன்னும் மோசமாகக் கூச்சலிட்டார்கள். இதே சமயத்தில் மூடர்களின் போப்பாண்டவருடைய ஊர்வலம் வந்து சேர்ந்தது. அதைக் கண்டதும் குறப்பெண்ணை மறந்து எல்லாரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.

டோலியில் கூனன் மிகவும் பெருமையோடு உட்கார்ந்திருந்தான். போப்பாண்டவரின் அடையாளமாகக் கில்ட் கொடுத்த மரச் செங்கோல் ஒன்று கூனன் கையில் இருந்தது. டோலியிடம் நெருங்கினான் அந்த வழுக்கைத் தலையன். கூனன் கைச் செங்கோலை வெடுக்கென்று பிடுங்கினான். யார் அந்த வழுக்கைத் தலையன் என்பதை ஆசிரியர் கிரின்காயிர் அறிந்து கொண்டார். குருபிரானுக்கு அடுத்த உபகுரு அவன். கிளாடி பிராலோ என்பது அவனுடைய பெயர். உபகுருவின் செயலைக் கண்டு ஜனங்களெல்லாம் திகைத்துப் போனார்கள். பீமசேனனைப் போன்ற பலமுள்ளவன் கூனன். உபகுருவைச் சதை சதையாய் அவன் பிய்த்தெறியப் போகிறான் என்றே ஜனங்கள் எண்ணினார்கள். ஆனால், எல்லாரும் ஆச்சரியப்படும்படி, வழுக்கைத் தலையனுக்கு முன்னே, போப்பாண்டவரான கூனன் குனிந்து மண்டியிட்டுக் கீழே உட்கார்ந்துவிட்டான். அந்த நிலையில் கூனனின் கில்ட் கிரீடத்தையும் ஜிகினாப் போர்வையையும் வழுக்கைத் தலையன் பிடித்து இழுத்துப் பிடுங்கி எறிந்தான்.

மூடர் திருக்கோஷ்டியாருக்கு இது பெரிய அவமானமாய்ப் போயிற்று. மண்டியிட்டு எழுந்த பிறகு கூட்டத்தின் நடுவே கடும் புலிபோல் பல்லை நறநறவென்று கடித்து வழி விலக்கிக்கொண்டு, உபகுருவைக் கூனன் பத்திரமாய் வெளியே அழைத்துச் சென்றான். கூனன் மட்டும் இப்படிச் செய்திராவிட்டால், உபகுருவை மூடர் திருக்கோஷ்டியார் நையப் புடைத்துப் புரட்டியிருப்பார்கள்.

அந்த விசித்திரமான இரட்டையர்-கூனனும் உபகுருவும்-தூரத்தில் மறையும் வரைக்கும் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தார் ஆசிரியர். பிறகு அந்தக் குறப் பெண்மீது அவருடைய நாட்டம் சென்றது. வீதி வழியே அவளைத் தொடர்ந்தார்.

இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. இருண்ட சந்து பொந்துகள் பலவற்றில் குறப் பெண் நுழைந்தாள். அங்கெல்லாம் மனித நடமாட்டம் மிகவும் குறைவாக இருந்தது.

கடைசியில் அவள் ஒரு மூலையில் திரும்பி, ஆசிரியரின் பார்வைக்கு மறைந்தே போய்விட்டாள். ஆனால், சிறிது நேரத்தில் அவள் வீரிட்டு அலறிய குரல் கேட்டது. ஆசிரியர் ஓடிப்போய்ப் பார்த்தார். இரண்டு முரடர்களின் கையில் சிக்கி, அவர்களிடமிருந்து தப்புவதற்காகக் குறப்பெண் திமிறிக்கொண்டிருந்தாள். முரடர்களில் ஒருவன் அந்தக் கூனன்தான். ஆசிரியருக்கு அவன் ஓர் அறை கொடுத்தான். ஆசிரியர் அப்படியே சுருண்டு ஜலதாரையில் போய் விழுந்தார்.

குறப் பெண்ணைக் கூனன் அலாக்காய்த் தூக்கப் போகிற சமயம். அப்போது பக்கத்து வீதியிலிருந்து ஒரு குதிரை வீரன் பாய்ந்தோடி வந்தான். அவனைத் தொடர்ந்து பத்துப் பன்னிரண்டு சோல்ஜர்களும் ஓடி வந்தார்கள். கூனனின் கையிலிருந்து குறப்

பெண்ணை அவர்கள் விடுவித்தார்கள். இந்தச் சமயம் பார்த்துக் கூனனின் துணைவன் மெள்ள நழுவிவிட்டான்.

குதிரை வீரனைப் பார்த்து, "தங்கள் பெயர் என்னவோ?" என்று விசாரித்தாள் குறப் பெண்.

"அம்மணி, என் பெயர் காப்டன் பீபஸ்" என்றான் குதிரை வீரன்.

அவனுக்கு அவள் நன்றி தெரிவித்தாள். அவன் தன் மீசையை முறுக்கி விட்டுக்கொண்டான். இதுதான் சமயம் என்று திரும்பி இருளில் மறைந்தாள் குறப் பெண்.

இதெல்லாம் நடந்து எல்லாரும் போய்விட்டார்கள். சாக்கடையில் விழுந்த ஆசிரியருக்கு மயக்கம் தெளிந்து அவர் எழுந்தார். அப்போது தெருவில் ஆளரவமே இல்லை. ஆசிரியர் எங்கே படுப்பதென்று தெரியாமல் அலைந்து தவித்தார். யாரும் அஞ்சும் 'அதிசய நிலையம்' என்ற இடத்துக்குள் எப்படியோ தட்டித் தடவிக் கடைசியில் நுழைந்தார். திருடர்கள், தாசிகள், துன்மார்க்கர்கள், கொலைகாரர்கள் இவர்களெல்லாம் வசிப்பது அந்த இடம். முரடர்களின் கோஷ்டி ஒன்று அவரைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய்த் தங்கள் 'ராஜா'வின் முன்னிலையில் நிறுத்தியது. "இங்கே இருக்கும் பெண்களில் யாராவது ஒருத்தி உன்னைப் புருஷனாக ஏற்றுக் கொள்ளும்படி இணங்கச் செய். இல்லையானால் நீ தூக்கு மாட்டிச் சாக வேண்டியதுதான்" என்று அந்த 'ராஜா' தீர்ப்பளித்து விட்டார். ஆசிரியர் என்ன முயன்றும், அவரைப் பெரும்பாலான பெண்கள் திரும்பிக்கூடப் பார்க்காமல் ஏளனம் செய்து போய் விட்டார்கள். ஆசிரியரின் கழுத்தில் தூக்குக் கயிற்றை முரடர்கள் மாட்டப்போகும் சமயம். அப்போது, "எஸ்மெரால்டா! எஸ்மெரால்டா!" என்ற சத்தம் கேட்டு, அவர்கள் தடைப்பட்டு நின்றார்கள். ஆசிரியர் கிரின்காயிர் திரும்பிப் பார்த்தார். அந்த நாட்டியக்காரியான குறப் பெண்தான் அங்கே வந்து தென்பட்டாள்.

"இந்த ஆளைத் தூக்கில் போடப் போகிறீர்களா?" என்று ராஜாவை அவள் கேட்டாள்.

"ஆமாம், தங்கச்சி. இல்லாவிட்டால், நீ வேண்டுமானால் இவனைக் கல்யாணம் செய்துகொள்" என்று ராஜா பதில் சொன்னார்.

நாட்டியக்காரி தன் உதட்டை மடித்துக்கொண்டு, "நானே இவனைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறேன்" என்றாள்.

அப்படியே கல்யாணம் நடந்து முடிந்தது. ஆசிரியருக்கு மகிழ்ச்சிதான். ஆனால், மற்றப் புது மணத் தம்பதிகளுடைய முதல் இரவைப் போல் இல்லை இவர்களுடையது. நாட்டியக்காரியிடம் காதல் செய்ய முயன்றார் ஆசிரியர். அவளோ தன் இடுப்பிலிருந்த ஒரு கத்தியை எடுத்து வெளியே நீட்டி, "என்னைத் தொட்டால் உன்னைக் குத்திக் கொன்று விடுவேன்" என்று ஆசிரியரைப் பயமுறுத்தினாள். ஆசிரியர் வாய் பேசாமல் ஓர் அறையில் படுத்துறங்கினார்; நாட்டியக்காரி மற்றோர் அறையில் தனியே படுத்துறங்கினாள்.

கூனனுக்கு இப்போது வயது இருபது. பதினாறு வருஷங்களுக்கு முன் யாரோ அவனை ஒரு தொட்டிலோடு அநாதைக் குழந்தையாக நாட்டர் டாம் ஆலயத்தில் விட்டுப் போய்விட்டார்கள். தொட்டிலைப் பல கிழவிகள் சூழ்ந்துகொண்டு

குழந்தையைப் பார்த்தார்கள். அது பரமவிகாரமாக இருக்கக் கண்டு பயந்து, 'இது பிசாசின் குழந்தை; இதை உடனே கொள்ளி வைத்துக் கொளுத்தி விடவேண்டும்' என்று முடிவு செய்தார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்து விட்டார்கள். அப்போது வாலிபப் பாதிரியாயிருந்த கிளாடி பிராலோ வந்து குறுக்கிட்டான்.

தொண தொண என்று பேசிக் கொண்டிருந்த அந்தக் கிழட்டுப் பிணங்களையெல்லாம் ஒரு புறம் பிடித்துத் தள்ளினான். தொட்டிலிலிருந்த குழந்தைக்குமேலே தன் கையை நீட்டிக்கொண்டு, "இந்தக் குழந்தையை நான் ஸ்வீகாரம் செய்துகொள்ளுகிறேன்" என்றான். கிழவிகளெல்லாம் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். "உபகுருவுக்கு மந்திரம், மாயமெல்லாம் தெரியும் என்று முன்பே நான் சொல்லவில்லையா?" என்று ஒரு கிழடு முணுமுணுத்தது.

பாதிரி கிளாடி சாமான்யமானவன் அல்ல. தன் வேலையைப் பக்தி சிரத்தையாய்ச் செய்பவன். கண்டிப்பும் கடுமையும் வாய்ந்தவன். கூனனை மகனாக ஏற்பதற்கு முன்பு, தன் தம்பி ஜிஹான் என்பவனிடமே பாதிரி முழு அன்பும் வைத்திருந்தான். தம்பியைச் சின்னஞ் சிறு வயது முதலே தூக்கி வளர்த்தவன் அவனேதான்.

கூனன் வளர்ந்து ஆளானான். பாதிரிக்குப் பதவி உயர்ந்தது. அவன் உபகுருவானான். ஆலயத்தில் மணியடிக்கும் வேலையைக் கூனனுக்கு வாங்கிக் கொடுத்தான். கோயில் மணியை அடிப்பது, உபகுருவுக்குப் பணிவது - இந்த இரண்டு வேலையுந்தான் கூனனுக்குத் தெரியும்; இந்த இரண்டு வேலைக்காகவுமே அவன் உயிர்வாழ்ந்தான். வெளி உலகத்திலிருந்து அவனை அடியோடு பிரித்துவைப்பதற்காகத்தானோ என்னவோ, கோயில் மணியின் இடியோசை அவன் காதை முழுச் செவிடாக்கி விட்டது; மனிதக் குரல் அவன் காதில் கேட்பதே இல்லை.

தம்பி ஜிஹானிடமே முழு அன்பும் வைத்திருந்த உப குரு, தன்னைப் போலவே தம்பியும் மதக் கல்வி கற்றுச் சமயத் தொண்டு புரிய வேண்டுமென்று ஆசைப்பட்டான். தம்பியோ குடி, சூதாட்டம், வேசை வீடு இவைகளில் ஈடுபட்டான். உபகுரு எவ்வளவோ கண்டித்தும், தம்பி தன் துன்மார்க்கத்தை விட்டுத் திருந்தவில்லை. இதனால் மனம் உடைந்த உபகுரு எப்போதும் தன் புத்தகசாலைக்குள் அடைந்து கிடந்தான்; வேதாந்த ரகசியங்கள் அடங்கிய நூல்களைப் படிப்பதிலே தன் நேரத்தையெல்லாம் கழித்தான். இதனால் தான் உபகுருவுக்கு 'மந்திரவாதி' என்ற பெயர் வந்து சேர்ந்தது. வேதாந்த ரகசியங்களும் மந்திரவாதமும் ஒன்று என்றுதானே சாமான்ய மக்கள் எண்ணுகிறார்கள்!

அங்கே கூனனைக் காப்டன் பீபஸும் அவனுடைய வில்வீரர்களும் கைது செய்த பிறகு, அவனை நியாயாதிபதியின் முன்பு கொண்டு போய் நிறுத்தினார்கள். இரா நேரத்தில் கலகம் செய்தது, வேசை ஒருத்தியை அடித்துத் துன்புறுத்தியது, துரைத்தனச் சிப்பந்திகளை எதிர்த்தது இந்த மூன்று குற்றங்களையும் கூனன் புரிந்ததாக முடிவாயிற்று. கூனனைத் தொழுவில் மாட்டி அவன் முதுகிலே கசையடி கொடுக்கவேண்டுமென்று நியாயாதிபதி தீர்ப்பளித்தார்.

முந்திய நாள் குறப் பெண் எஸ்மெரால்டாவை ஆசிரியர் கிரின்காயிர் கண்ட அதே கிரீவ் என்னும் இடத்தில்தான் தொழுக்கட்டை இருந்தது. அந்த இடத்துக்கே கூனனை அழைத்துச் சென்றார்கள்.

அங்கே குறப் பெண் நாட்டிய மாடி வித்தை காட்டியபோது, சதுக்கத்தின் ஒரு மூலையிலிருந்து கூச்சலிட்டாளே ஒரு பெண், அவள் வேறு யாரும் அல்ல; கன்னி மாடத்தைச் சேர்ந்த சகோதரி குலேல் என்பவளே. இந்தத் தொழுக்கட்டைக்குப் பக்கத்தில் இருக்கும் சிறைக்குள்ளே பதினாறு வருஷ காலமாக அவள் அடைந்து கிடக்கிறாள். துரைத்தன அதிகாரிகள் யாரும் அவளைச் சிறையில் தள்ளவில்லை. தனக்குத்தானே விதித்துக்கொண்ட ஒரு பிராயச்சித்தமாகவே இப்படி அவள் சிறைவாசம் செய்தாள்.

சின்ன வயதில் சகோதரி குலேல் மகா அழகாக இருந்தாள். மனம் போனபடி சுகம் அநுபவித்தாள். இருபதாவது வயதில் அவள் அழகு மங்கியதைக் கண்டு, அவளை அவளுடைய கடைசிக் காதலன் கைவிட்டு ஓடிவிட்டான். அப்போது அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தது. வேறு யாரும் துணையில்லை. அவள் அந்தக் குழந்தைமீது அளவற்ற வாஞ்சை வைத்தாள்.

குழந்தைக்கு ஒரு வயதாயிற்று. ஒரு நாள் அதைத் தூங்க வைத்து விட்டு, வெளியே போய்த் திரும்பி வந்து பார்த்தால் தொட்டில் சூன்யமாயிருந்தது. குழந்தையின் ஒரு பாதரட்சை மட்டும் கீழே கிடந்தது. குழந்தையையாரோ திருடிச்சென்றபோது, அந்தப் பாதரட்சை தவறுதலாக நழுவி விழுந்திருக்க வேண்டும். அன்று காலையில் அந்தப் பக்கத்தில் குறத்திகள் கூட்டம் ஒன்று வந்திருந்தது. அந்தக் கூட்டத்தினர்தான குழந்தையைத் திருடிச் சென்றிருக்க வேண்டும் என்று குலேல் நினைத்தாள்.

குழந்தையைக் குலேல் எங்கெல்லாமோ தேடியும் அது கிடைக்கவில்லை. ஆனால் வீடு திரும்பியபோது, கூடத்திலே பயங்கர ராட்சசக் குழந்தை ஒன்று தவழ்ந்துகொண்டிருந்தது. அதன் ஒரு கால் முடம்; ஒரு கண் குருடு! சுந்தரப் பெண்ணுக்குப் பதிலாக இந்த ராட்சசக் குஞ்சு வந்து சேர்ந்தது கண்டு, தாங்காத துக்கமும் ஆத்திரமும் அடைந்தாள் குலேல். அந்த ராட்சசக் குழந்தையை அங்கேயே விட்டு விட்டு, பித்துப்பிடித்தவளைப்போல், மகளின் ஒற்றைப் பாதரட்சையைக் கையில் எடுத்துக்கொண்டு, பாரிஸ் நகரை நோக்கிப் புறப்பட்டாள். தன் வாலிப வயதில் செய்த அக்கிரமங்களுக்கெல்லாம் கடவுள் விதித்த தண்டனை இது என்று எண்ணிக் கொண்டாள். இப்படி ஓர் இருட்டறையில் புகுந்துவிட்டாள். அன்று முதல் இன்று வரையில் அதை விட்டு வெளிவரவே யில்லை. யாராவது தர்மத்துக்காக ஜன்னல் வழியாக ஏதாவது உணவு போட்டால் உண்டு; இல்லாவிட்டால் உபவாசந்தான். இவ்விதம் குலேல் வாழ்ந்து வருகிறாள். எல்லாரும் அவளைச் சகோதரி குலேல் என்றே குறிப்பிடுகிறார்கள். ஆனால் பேக்கட்லா சாண்டப்ளூரி என்பதுதான் அவளுடைய உண்மைப் பெயர்.

அவள் வீட்டிலே விட்டு வந்த குரூபமான குழந்தையை அந்த ஊர்ப் பெரிய பாதிரி கவனித்தார். அதன்மீது இருக்கக் கூடிய

பிசாசை ஓட்டுவதற்காக வெகு ஜாக்கிரதையாக மந்திரமெல்லாம் ஜபித்தார். பிறகு அதை ஓர் அநாதைக் குழந்தையாக நாட்டர்டாம் ஆலயத்தில் கொண்டு போய் விட்டு விடும்படி ஏற்பாடு செய்தார். அப்படி யாரோ கொண்டு வந்து விட்ட குழந்தையே, கிளாடி ஸ்வீகாரம் செய்துகொண்டது.

குலேல் அடைபட்டுக் கிடந்த அறையிலிருந்து பார்த்தால், கூனன் கசையடி வாங்கப் போகிற தொழுக்கட்டை தெரியும்.

பாவம்! கூனனின் உடம்பில் ரத்த விளாருய்ப் பெருக்கெடுத் தோடும்வரையில் காவலர்கள் அடித்தார்கள். பிறகு ஒரு மணி நேரம் தொழுக்கட்டையிலே மாட்டியபடி வைத்திருந்தார்கள். உடல் வேதனை ஒருபுறம்; சுற்றிலும் வந்து கூடிய சோம்பேறிக் கும்பல் செய்த கேலி மறுபுறம். இரண்டு நாளைக்கு முன்பு எந்த இடத்தில் மூடர்களின் போப் பாண்டவராக டோலியில் கூனன் வெற்றி விஜயம் புரிந்தானே அந்த இடத்திலேயே அவன் இப்போது சித்திரவதைக்கு ஆளானன்.

தொழுக்கட்டையில் கூனனை மாட்டிய சிறிது நேரத்துக்கெல்லாம், சாமியார் ஒருவன் ஒரு கோவேறு கழுதைமேல் ஏறிக் கொண்டு அந்தப் பக்கம் வருவதைக் கூனன் கண்டான். உடனே கூனனின் கோர சொரூபம் மிகவும் சாந்தம் அடைந்தது; அவனுக்கு ஆனந்தம் பொங்கிவிட்டது என்றே சொல்லலாம். தன் வேதனையிலிருந்து தன்னைச் சாமியார் விடுவிப்பான் என்று கூனன் எதிர்பார்ப்பதாய்த் தோன்றியது. ஆனல், தொழுவில் மாட்டிக்கொண் டிருப்பவன் யார் என்பதைச் சாமியார் அறிந்துகொண்டவுடன். சவாரி செய்தபடியே கோவேறு கழுதையை வேறுபுறம் திருப்பி வெகு வேகமாய் ஓட்டிக்கொண்டு போய்விட்டான். கூனனின் அன்புக்குப் பாத்திரமான ஒரே ஒரு ஜீவனும் இப்படி அவனைக் கைவிட்டுச் சென்றுவிட்டது. சொல்லப் போனல், இந்தச் சாமியார்தான் கூனனின் இந்த வேதனைக்கெல்லாம் காரணம். குறப் பெண் எஸ்மெரால்டாவைத் தூக்கிவரும்படி கூனனுக்குக் கட்டளையிட்டவனும் அந்த வேலைக்குத் துணை வந்தவனும் இதே சாமியார்தான்.

உபகுரு கிளாடி - அவன்தான் சாமியார்- மறுபக்கம் போன பிறகு, கூனனின் உடல் மட்டும் அல்ல, மனமும் உடைந்து போயிற்று. அவனுக்குக் கொடிய நாவறட்சி ஏற்பட்டது. "தண்ணீர்! தண்ணீர்!" என்று பரிதாபகரமாய், அவன் கத்தினன். சூழ்ந்திருந்த சோம்பேறிக் கும்பல் இதைக் கேட்டுக் கேலி செய்து, கல்லையும் சாக்கடைச் சேற்றையும் வாரி அவன்மீது வீசி எறிந்தது.

தண்ணீருக்காக மூன்று தடவை அவன் கத்திவிட்டான். அப்போது வாலிபப் பெண்ணெருத்தி, தன் தொழுக்கட்டையை நோக்கி வருவதைக் கூனன் கண்டான். அவளைப் பின் தொடர்ந்து ஓர் ஆட்டுக்குட்டியும் வந்தது. 'நாம் தூக்கி வர முயன்ற பெண் இவளே' என்று இதைக் கொண்டு அவன் அடையாளம் கண்டுகொண்டான். கட்டுண்டு திக்கற்றிருக்கும் தன்னை அடிக்கத்தான் அவள் வருகிருள் என்று எண்ணிக்கொண்டான். அவள் கையிலே படாமல் தப்ப வேண்டும் என்ற இச்சையுடன் கண்ணிலே தீப்பொறி பறக்க,

வீணே திமிறத் தொடங்கினுன். ஆனுல், அவளோ அவனை அடிக்கக் கையோங்குவதற்குப் பதிலாக ஒரு சுரைக் குடுக்கையைத் தன் இடுப் புத் தோல் வாரிலிருந்து தூக்கி, கூனனின் வறண்ட உதடுகளில் தண்ணீரை ஊற்றினுள். கூனன் பேராவலோடு அதைப் பருகினுன். ரத்தம் போல் சிவந்திருந்த அவன் விழிகளிலிருந்து கண்ணீர் முத்துக் கள் உதிர்ந்தன.

சுற்றியிருந்த கும்பல் இந்த உருக்கமான காட்சியைப் பார்த்துக் கொண்டேயிருக்கும்போது, ஆத்திரமாய்த் திட்டும் குரல் ஒன்று கேட்டது. இதையெல் லாம் தன் சிறையிலிருந்தபடியே கவனித்துக்கொண்டிருந்த சகோதரி குடேல் போட்ட கூச்சல்தான் அது. கூனனுக்குத் தண்ணீர் ஊற்றியவள் நாட்டியக்காரியான குறப் பெண்தான் என்று குடேல் கண்டுகொண்டாள். உடனே வெறி பிடித்தவளைப்போல, "எகிப்து நாட்டு மூதேவியே, நீ நாசமாய்ப் போ! போ! தொலை!" என்று திட்டினுள்.

தொழுக்கட்டை மேடைப் படிகளிலிருந்து குறப் பெண் எஸ்மெரால்டா கீழிறங்கியபோது, "இறங்கு! இறங்கு! ஏ குழந்தை திருடியே, இறங்கு. இன்னெரு நாள் நீயும் இந்தத் தொழுக்கட்டை யில் சிக்க வேண்டியவள்தான்" என்று மீண்டும் குடேல் கத்தினுள்.

கூனன் குவாசிமோடோ விடுதலை பெற்று, நாட்டர் டாம் ஆலயத்தில் திரும்பவும் மணியடிக்கச் சென்றுன். ஆனுல், அதில் முன் அத்தனை உற்சாகம் அவனுக்கு இல்லை. தொழுக்கட்டையில் மாட்டிக்கொள்வதற்கு முன்பு, ஆலய மணிமீதும் உபகுருவின் மீதுமே பதிந்திருந்த அவனுடைய உள்ளத்தை, அந்தத் தெய்வ கன்னிகையின் ஞாபகம் ஒன்றே ஆட் கொண்டு விட்டது - முரட்டுத்தனமாய் அவன் அவளைப் பிடித்துவரப் போனதற்குப் பதிலாகக் கருணையோடு அவனுக்கு உபகாரம் செய்த அந்தக் குறப் பெண்ணைப்பற்றிய ஞாபகந்தான்.

உபகுரு கிளாடியின் மனத்தையும் அதே பெண்ணின் ஞாபகம் ஆட்கொண்டது. அவளை நினைத்த படியே, ஆலயத்தின் தனியறை ஒன்றில் மணிக்கணக்காய் உபகுரு அடைந்து கிடக்கத் தொடங் கினுன். நாட்டியக்காரியை ஆசிரியர் கிரின்காயிர் மணந்து கொண்டாலும் அவள் கன்னி கழியாமல் வாழ்கிருள் என்பதை உபகுரு எப்படியோ விசாரித்தறிந்து கொண்டான். ஆசிரியரைத் தந்திரமாய்க் கேள்விகள் கேட்டு விசாரித்ததிலிருந்து, எஸ்மெரால்டாவின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன் யாரோ பீபஸ் என்ற ஒருவன் என்பதையும் அவன் தெரிந்து கொண்டான். இந்தப் பீபஸ் யார் என்பதை மட்டும் அவனுல் நிச்சயிக்க முடியவில்லை.

நாட்டியக்காரி எஸ்மெரால்டா இன்னமும் தெருவில் வேடிக்கை காட்டிக்கொண்டுதான் இருந்தாள். இப்போது ஆட்டுக் குட்டியோடு கூடவே ஆசிரியர் கிரின்காயிரும் அவளுக்குத் துணை வந்தார். நாட்டியக்காரியும் ஆசிரியரும் ஒருவருக் கொருவர் அன்பு செலுத்துவதற்குப் பதிலாக இரண்டு பேரும் ஆட்டுக் குட்டியிடமே பெரிதும் அன்பு செலுத்தியதாகத் தோன்றியது. ஆசிரியரைக் காப்பாற்றுவதற்காக அவரை மணந்துகொண்டதால்,

நாட்டியக்காரி அவரோடிருந்தாள்; நாட்டியக்காரியால் தமக்குச் சோறும் இருப்பிடமும் கிடைத்த தால் ஆசிரியர் அவளை விட்டு அகலா திருந்தார்.

தன்னைக் காப்டன் பீபஸ் காப் பாற்றியதற்குப் பின்பு பல வார காலம் சழித்து, அவனை நாட்டியக் காரி எஸ்மெரால்டா மீண்டும் கண் டாள். சற்றுக் கீழ்த்தரமான ஒரு விடுதியில் இருவரும் ஏகாந்தமாய்ச் சந்திக்கவேண்டும் என்று அவ னுடன் ஓர் ஏற்பாடும் செய்து கொண்டாள்.

காப்டன் பீபஸின் குடிகாரத் தோழர்களில் ஒருவன் வாலிப ஜிஹான். அவன்தான் உபகுரு ஃளாடியின் தம்பி. நாட்டியக் காரியைச் சந்திக்கப் புறப்படு வதற்கு முன்பு, பீபஸ் ஒரு சாரா யக்கடையில் பல மணி நேரம் தன் தோழன் ஜிஹானுடன் உல்லாச மாய்ப் பொழுது போக்கிக்கொண் டிருந்தான். இந்த இரண்டு பேரையும் இவர்களறியாமல் வந்து கவனித்துக்கொண் டிருந் தான் உபகுரு ஃளாடி. 'இன் னுரைச் சந்திக்கப் போகிறேன்' என்று பீபஸ் அப்போது ஜிஹா னிடம் சொல்லியதை ஒட்டுக் கேட்டுக்கொண்டான்.

மிதமிஞ்சிக் குடித்ததால் தன் நினைவிழந்து சாக்கடையில் புரளத் தொடங்கினன் ஜிஹான். அவனை அப்படியே விட்டுவிட்டு, பீபஸ் கிளம்பினன். உபகுருவும் பின் தொடர்ந்தான். நாட்டியக் காரியும் காப்டன் பீபஸும் சந்திக் கப் போகும் அறைக்குப் பக்கத்து அறையைத் தனக்குப் பிடித்துக் கொண்டான். காதலர் இருவரும் சந்தித்துச் சல்லாபம் செய்வதை, சுவரில் உள்ள ஓட்டை வழியாகச் சில நிமிஷ நேரம் பார்த்துக்கொண் டிருந்தான். பிறகு, உபகுரு வுக்குப் பொறுமை தாங்கவில்லை. வெறி பிடித்தவனைப் போலக் காதலர்களின் அறைக்குள் திடு திடு என்று பிரவேசித்தான். காப்டன் பீபஸை ஒரு கத்தியால் ஒரே குத்தாய்க் குத்தியபின் ஓடிவிட் டான். நாட்டியக்காரிக்கு மயக்கம் போட்டுவிட்டது. அவளுக்கு மறு படியும் சுயநினைவு வந்தபோது, தன்னைச் சூழ்ந்து பல சோல்ஜர் கள் நிற்பதைக் கண்டாள். காத லன் பீபஸ் ரத்த வெள்ளத்தில் கிடந்தான். உபகுருவின் சோடே தெரியவில்லை. பின்பக்கமுள்ள ஜன்னல் வழியாக நதியில் குதித்து அவன் தப்பியோடிவிட்டான்.

நாட்டியக்காரிமீது கொலைக் குற்றம் சாட்டிக் கோர்ட்டில் விசா ரணை நடத்தினர்கள். பிசாசையும் ஆவியுருவச் சாமியார் ஒருவனையும் துணைக் கொண்டு, காப்டன் பீபஸை அவள் கொன்றுவிட்டதாகக் குற்றம் சுமத்தினர்கள். ஆனல் காப்டன் உண்மையில் பிழைத்துக் குணமடைந்து வந்தான். அதைப் பற்றிக் கோர்ட்டார் துளியும் கவலைப்படவில்லை.

தான் குற்றம் செய்யவில்லை என்றே நாட்டியக்காரி எஸ்மெ ரால்டா முதலில் மறுத்தாள். காவலர்கள் அவளைச் சித்திரவதை செய்யத் தொடங்கினர்கள். அந்த வேதனை தாங்காமல், தான் குற்ற வாளியே என்று அவள் ஒப்புக் கொண்டாள். பில்லிசூன்யம், மந் திரவாதம், குடி, காப்டனைக் கொன்றது இத்தனை குற்றங் களையும் தான் புரிந்ததாக ஏற்றுக் கொண்டாள்.

நாட்டர் டாம் ஆலயத்தின் பெரிய வாயிற்படிக்கு முன் நாட்டி

யக்காரி பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும் என்றும், பிறகு அவளைத் தூக்கிலே போட வேண் டும் என்றும் தீர்ப்பாயிற்று.

கோர்ட்டிலே தீர்ப்பளித்த பிறகு 'நீதிமாளிகை' யின் இருட்டறை ஒன்றில் அவளைச் சிறை வைத்தார் கள். உல்லாசம், சுதந்தரம், ஒளி இவை மூன்றும் உருவெடுத்து வந் ததுபோலப் பாரிஸ் நகரின் தெருக் களிலே திரிந்து வந்த நாட்டியக் காரியைச் சங்கிலி விலங்குகளால் தளைத்து, ஒளியற்ற ஒரு பொந்துக் குள் தள்ளிவிட்டார்கள். பீபஸ் இறந்துபோனான் என்றும் அவ ளிடம் சொன்னார்கள். காதலன் இறந்ததால் தானும் இனிச் சாவதே நலம் என்றுதான் அவள் விரும் பினாள்.

இருட்டறையில் அவளைப் போய்ப் பார்த்தான் உபகுரு. அவள்மீது தனக்குள்ள காதலைத் தெரிவித் தான். அவளைத் தூக்கிவர ஏற்பாடு செய்தவனும், பீபஸைக் குத்தியவ னும் தான்தான் என்று அவளிடம் ஒப்புக்கொண்டான்.

"நீ என்னோடு வா; நாம் இருவ ரும் நாட்டுப்புறத்துக்கு ஓடிவிட லாம். இதற்கு மட்டும் நீ சம்மதித் தால், உன்னைச் சிறையிலிருந்து நான் தப்புவிக்கிறேன்; தூக்குமரத் துக்கும் நீ தப்பித்துக்கொள்ளலாம்" என்றான். அவள் மகா கோபத் துடன், "நான் செத்தாலும் சாவேனே தவிர, உன்னோடு ஒரு சம்பந்தமும் வைத்துக்கொள்ள மாட் டேன்" என்று மறுத்துவிட்டாள். உபகுரு மதியிழந்து மானமிழந்து ஆத்திரத்துடன் திரும்பினான்.

குறிப்பிட்ட நாளில் ஆலயத்தின் பெரிய வாசலுக்கு நாட்டியக் காரியை அழைத்துச் சென்றார்கள். தூக்குமேடை ஏறுவதற்கு அவ ளுடைய ஆத்மாவைப் பக்குவப்படுத் தத் தேவையான வைதிகச் சடங் குகள் நடைபெற்றன. உபகுரு ளாடிதான் அதில் புரோகிதன். சடங்கை நடத்தும்போது மந்திரம் ஜபிப்பவன்போல மெல்லிய குரலில் நாட்டியக்காரியின் காதில் மட்டும் படும்படி, "இன்னும் தப்பிப் போக வில்லை. என் யோசனைக்கு நீ சம்மதித்தால், இப்போதுங்கூட உன்னை நான் காப்பாற்றி விடு வேன்" என்று அவன் சொன் னான். "முடியாது; முடியாது" என்று அவள் கண்டிப்பாய் மறுத்து விட்டாள்.

தூக்குமேடைக்கு அவளைக் காவ லர்கள் அழைத்துச் சென்றார்கள். அப்போது வழியிலே இருந்த ஒரு வீட்டு ஜன்னலில் காப்டன் பீப ஸின் முகத்தை அவள் கண்டாள். காதலன் உயிரோடிருப்பதை அறிந்த ஆனந்தத்தால், "பீபஸ்! பீபஸ்!" என்று அவனைப் பார்த் துக் கத்தினாள். காப்டன் இதைக் கவனித்தானோ இல்லையோ தெரிய வில்லை; தன் பக்கத்திலிருந்த யாரோ ஒரு பெண்ணுடன் சட் டென்று உள்ளே போய்விட்டான். இதைப் பார்த்த நாட்டியக்காரி மூர்ச்சை போட்டுவிட்டாள்.

நாட்டர் டாம் ஆலயத்தைச் சூழ ஒரு பெரிய கும்பல் கூடிவிட்டது. அத்தனை பேரும் நாட்டியக்காரி யையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கோயிலின் முன் வாசல் மச்சில் கூனன் குவா சிமோடோ உட்கார்ந்திருந்தான். அவனிடமிருந்து, வீதி மேடை வரைக்கும் ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருந்தது. கூனனையோ இந்தக் கயிற்றையோ யாரும் கவ னிக்கவில்லை.

நாட்டியக்காரியைத் தூக்கு மரத்தில் மாட்டிக் காவலர்கள் தட்டிவிடப்போகும் சமயம்; ஜன்னல் கண்ணாடி வழியே பாயும் மழைத் துளிபோல அந்தக் கயிற்றின் வழியே நழுவிக் குதித்தான் கூனன். நாட்டியக்காரியின் பக்கத்தில் மின்னலைப் போல் தாவி வந்தான். அவளுக்கு இரண்டு பக்கத்திலும் இருந்த காவலர்களைத் தன் பிரம்மாண்டமான முஷ்டியால் குத்தி வீழ்த்தினான். அவளைத் தூக்கிக்கொண்டு, கோயிலின் பெரிய வாசலில் புகுந்து, "அடைக்கலம்! அடைக்கலம்!" என்று கத்திக்கொண்டே ஓடினான். கோயிலுக்குள் புகுந்தவளைச் சட்டம் ஒன்றும் செய்யமுடியாது. நாட்டியக்காரி பத்திரமான பாதுகாப்பு அடைந்தாள்.

கோயில் மச்சின் மீதுள்ள ஒரு சிறிய அறைக்கு அவளைக் கூனன் எடுத்துச் சென்றான். அவளுக்கு உணவும் படுக்கையும் அளித்தான். "பகலில் நீ இந்த அறையைவிட்டு நகராதே. இரவில் கோயிலுக்குள் எங்கே வேண்டுமானாலும் உலாத்து. ஆனால், இரவிலும் சரி, பகலிலும் சரி; கோயிலுக்கு வெளியே மட்டும் போகாதே. போனால் உன்னை அவர்கள் கொன்றுவிடுவார்கள். நீ செத்தால், நானும் என் உயிரை விட்டுவிடுவேன்" என்று அவளுக்குச் சொன்னான். அன்றிரவே அவளுடைய ஆட்டுக்குட்டியும் எங்கிருந்தோ அவளுடைய அறையைத் தேடி வந்து சேர்ந்தது.

ஆலயத்துக்குள் இருக்கும்வரையில் நாட்டியக்காரியைக் கூனன் பத்திரமாய்ப் பாதுகாத்து வருவான் என்று உபகுரு உணர்ந்துகொண்டான். ஆத்திரம் கொண்ட அவன், அவளை எப்படியாவது வெளியேற்றிக் கொண்டு போக வேண்டுமென்று எண்ணினான். அதற்கு வேண்டிய சூழ்ச்சிகளைச் செய்வதற்காக, ஆசிரியர் கிரின்காயிரைத் தேடிப் பிடித்தான். ஆசிரியரோ ஓர் அப்பாவி. "நாட்டர்டாம் ஆலயத்திலிருந்து நாட்டியக்காரியை வெளியேற்றாவிட்டால் அவளுக்கு ஆபத்து வரும். அவளை வெளியே வரச் செய்ய நீர் ஏதாவது முயற்சி செய்ய முடியுமா?" என்று ஆசிரியரைக் கேட்டான். அவர் பலத்த வாதமெல்லாம் செய்துவிட்டுக் கடைசியில் திருப்தி அடைந்தவராக, இந்தக் காரியத்துக்குச் சம்மதித்தார். 'அதிசய நிலைய'த்தில் தம் தோழர்களாகிவிட்ட குண்டர்களை ஆசிரியர் கிளப்பிவிட்டார். அவர்களெல்லாம் ஒரே கும்பலாகப் புறப்பட்டுச் சென்று ஆலயத்தைச் சூழ்ந்துகொண்டு நாட்டியக்காரி எஸ்மெரால்டாவை விடுதலை செய்வதென்று முடிவாயிற்று.

அடுத்த நாள் இரவு வழக்கப்படி பாராக் கொடுப்பதற்காக ஆலயத்துக்குள் கூனன் சுற்றி வந்தான். அப்போது பிரம்மாண்டமான ஜனக் கும்பல் ஒன்று ஆலயத்தை நோக்கி வருவதை அவன் கண்டான். இது அந்தச் சோம்பேறிக் குண்டர்களின் கும்பல்தான்.

கோடரி, கடப்பாரை முதலிய ஆயுதங்களால் ஆலயக் கதவைச் சோம்பேறிகள் உடைக்கத் தொடங்கினார்கள். அவர்கள் அதைச் சிறிது கூட மூளி செய்வதற்கு முன் ஆலயத்தின் மச்சிலிருந்து ஒரு பெரிய உத்திரத்தை அவர்கள் நடுவே கூனன் தள்ளிவிட்டான். அது வந்து மோதியதால் சட்னியாகிப் பத்துப் பன்னிரண்டு சோம்பேறிகள் மாண்டு போனார்கள்.

இந்தச் சேதாரத்தைக் கண்டு சோம்பேறிகள் சற்றும் அதைரியப் படவில்லை. கீழே விழுந்த உத்தி ரத்தையே ஒரு சம்மட்டிபோலக் கைக்கொண்டு கதவை மொத்தி ஞர்கள். ஆலயத்தைப் பழுது பார்ப்பதற்காகக் கொத்தர்கள் போட்டு வைத்திருந்த பெரும் பாருங்கற்களை யெல்லாம் சோம் பேறிகள்மீது கூனன் உருட்டி விட்டான். அதனுல் சோம்பேறி களிடையே பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது. ஆனுல், ஒரு சோம் பேறி மாண்டால் அந்த இடத்துக்கு மற்ருெருவன் வந்து நின்று கொண்டான். சோம்பேறிகள் சளைக்காமலே போராடினுர்கள். கூனனின் சஸ்திரங்களெல்லாம் காலியாகிவிட்டன. அப்படியும் அவன் மனம் தளரவில்லை. கோயில் ஜலதாரைக்குக் கெட்டி ஈயத்தகடு பதித்திருந்தது. அதில் பல சுள்ளிகளைப் போட்டுக் கொளுத் திஞன் கூனன். ஈயமெல்லாம் உருகி ஒரே நெருப்புக் குழம்பாக ஜலதாரை வழியே பாய்ந்தோடிச் சோம்பேறிகளின் தலைமேல் சொரிந்தது.

இதற்கப்புறம் சிறிது நேரத்தில் உபகுருவின் தம்பி ஜிஹான் ஒரு பெரிய ஏணியை ஆலயச் சுவரின் மீது சார்த்தி, அதில் ஏறிஞன். எண்பதடி உயரத்தில் உள்ள காலரி ஒன்றில் அவன் தொற்றிவிட்டான். அடுத்த மனிதனும் இதே மாதிரி ஏறிக் காலரிக்கு வந்து தொற்று வதற்குள், கூனன் அந்த ஏணியை அலாக்காய்ப் பிடித்து எதிர்ப்புறத் தில் தள்ளிவிட்டான். கீழே நின்ற சோம்பேறிகளின் நடுவே அது சாய்ந்ததால், பலர் நசுங்கி மாண் டார்கள். ஏணியில் பாதி தூரம் ஏறி விட்ட சிலரும் அப்படியே மாண் டார்கள். பிறகு ஜிஹானையும் கைப்பிடியாய்ப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டான் கூனன்.

இந்த நிலையில் நகரமக்கள் பீதி யுற்றுக் கூப்பாடு போட்டதால், அரசரின் சோல்ஜர்கள் அங்கே ஓடிவந்தார்கள். இப்போது வேறு ஏணிகளைக் கொண்டு வந்து ஆலயச் சுவரின் மேல் சார்த்தச் சோம்பேறிகள் முயன்றுகொண் டிருந்தார்கள். காப்டன் பீபஸின் தலைமையில் வந்த சோல்ஜர்கள், அந்தச் சோம்பேறிக் கூட்டத்தைப் பின்புறமிருந்து தாக்கிக் கலைத் தார்கள். கும்பல் வெகு சீக்கிரம் கலைந்து மாயமாய் மறைந்தது.

ஆலயத்தைத் தாக்க வந்த கும் பல் ஓடிவிட்டது என்று நிச்சய மாய்த் தெரிந்த பிறகு, கூனன் ஓட்டமாய் ஓடி நாட்டியக்காரியின் அறைக்குள் நுழைந்தான். அங்கே அவளைக் காணவில்லை. அறை காலியாக இருந்தது!

போராட்டம் மிக மும்முரமாய் நடந்துகொண் டிருந்தபோது, ஆசிரியரும் உபகுருவும் ரகசிய வாசல் ஒன்றின் வழியாக ஆலயத் துக்குள் புகுந்தார்கள். உபகுரு மாறு வேஷம் பூண்டிருந்தான். இரண்டு பேருமாக நாட்டியக்காரியின் அறைக்குள் புகுந்து, அவளை ஏமாற்றி வெளியே அழைத்துச் சென்றுவிட்டார்கள். கடைசியில் தான் யாரென்பதை அவளுக்கு உப குரு வெளிப்படுத்தியபோது, நாட்டி யக்காரி நடுநடுங்கிப் போனுள். "எனக்கு உன்மீதுள்ள காதல் இன்னும் குன்றவில்லை. என்னேடு வாழ நீ சம்மதித்தால், இந்த நிலையி லும் உன்னைக் காப்பாற்றுகிறேன்" என்று உபகுரு மீண்டும் அவளுக்கு வாக்களித்தான். அவள் சம்மதிக்க வில்லை; முன்போலவே கண்டிப்

பாய் மறுத்துவிட்டாள். உபகுரு உடனே அவளைத் தரதரவென்று பிடித்து இழுத்துக்கொண்டு, குடேலின் சிறைக்குச் சென்றான். "சகோதரி குடேல், இதோ இருக்கிறாள் நீ பகைக்கும் பெண். நான் போய், சோல்ஜர்களை அழைத்து வரும் வரைக்கும் நீ இவளை விடாதே; பிடித்துக்கொண்டிரு" என்று சொன்னான். அந்தப் பித்தி குடேலும் ஜன்னல் வழியாகக் கையை நீட்டி நாட்டியக்காரியைப் பிடித்துக்கொண்டாள்.

அவளை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டபடியே, குடேல் தன் துர்ப்பாக்கிய வரலாற்றையெல்லாம் அவளிடம் சொன்னாள். பதினாறு வருஷங்களுக்குமுன் தான் இழந்த சிறு மகளின் ஒரு கால் பாதரட்சையை எப்போதும் தன் வசமே குடேல் வைத்திருப்பது வழக்கம். அதையும் வெளியே எடுத்து நாட்டியக்காரியிடம் அவள் காட்டினாள். அதைப் பார்த்த நாட்டியக்காரி தன் மார்பில் தொங்கிய சிமிழிப் பதக்கம் ஒன்றைத் திறந்து அதற்குள் இருந்த இன்னொரு பாதரட்சையை எடுத்தாள். அது இதன் ஜோடியே என்று புலனாயிற்று. கடைசியிலே தாயும் மகளும் சந்தித்துவிட்டார்கள்!

திகிலடைந்த குடேல், பரபரப்புடன் தன் சிறையின் இரும்புக்கம்பி ஒன்றை ஆட்டி அசைத்துப் பிடுங்கி, அந்த வழியாக நாட்டியக்காரியை உள்ளே இழுத்துக்கொண்டாள். சோல்ஜர்கள் வருவதற்கு முன்பு தன் மகளை ஒளித்துவைக்கவே அவள் இப்படிச் செய்தாள். இந்த முயற்சி வீணாயிற்று. சோல்ஜர்கள் வந்துவிட்டார்கள். அவர்களோடு மல்லுக் கட்டியபோது தற்செயலாக அடிபட்டுக் குடேல் மாண்டுவிட்டாள்.

சோல்ஜர்களைக் குடேலின் சிறைக்கு அழைத்துப்போய் விட்டுவிட்டுத் திரும்பிய உபகுரு, ஆலயமச்சிலுள்ள உயரமான காலரி ஒன்றில் உட்கார்ந்து தூக்குமரத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். அதில் நாட்டியக்காரி தொங்கிச் சாவதைக் காண வேண்டுமென்பது அவன் ஆவல். அவளைக் காவலர்கள் அப்படியே தூக்கில் போட்டார்கள். நாட்டியக்காரி மரணாவஸ்தையுடன் கால் கைகளை உதைத்துக்கொண்டு உயிரோடு தொங்கிக்கொண்டிருப்பதை உபகுரு பார்த்து ஆனந்தித்துக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் அவனறியாமல் பின்புறமாக வந்த கூனன், உபகுருவை ஒரே தள்ளாக நெட்டித் தள்ளிவிட்டான். உபகுரு தலை குப்புறத் தரையில் விழுந்து சிதைந்து மாண்டான்.

கூனனை அப்புறம் யாரும் காணவேயில்லை. சில வருஷங்களுக்குப் பிறகு, நாட்டியக்காரியின் சவப் பெட்டியைத் திறந்து பார்த்தபோது, அதில் இரண்டு மனித எலும்புக் கூடுகள் ஒன்றோடொன்று தழுவிப் பின்னிக் கிடந்தன. ஒன்று, ஒரு வாலிபப் பெண்ணினுடையது; மற்றது, கூனனுடையது. கூனனின் கழுத்தெலும்பு முறியாதிருந்தது. ஆகவே, அவன் தூக்குமாட்டிச் சாகவில்லை என்பது தெளிவு. இதனால் அவன் தானாகவே அங்கே போய் உயிரை விட்டிருக்க வேண்டும் என்றுதான் நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. ★

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

சமாதானக் கலை

சமாதானக் கலையில் நாம் ஈடுபட வேண்டும். நம் சர்க்காரை நடத்தியாக வேண்டும். நம் தினசரித் தொழில்கள் நடக்க வேண்டும். நாம் வாழப் போதிய செல்வத்தைப் படைக்க வேண்டும். அதனால் நம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். நம் தொழிற்சாலைகளில் இடையூறின்றி வேலை நடக்க வேண்டும். தொழிலாளருக்கு அவர்களுக்குரிய ஊதியம் கிடைக்கும்படி நாம் பார்த்துக் கொள்வோம் என்று எடுத்துச் சொல்ல வேண்டும்.

நாட்டின் நன்மைக்காகத் தங்கள் லாபத்தில் ஓரளவை முதலாளிகள் தியாகம் செய்ய வேண்டும். கள்ள மார்க்கெட், கொள்ளை லாபம், சரக்குப் பதுக்கல் முதலிய அநியாயங்களை அவர்கள் கைவிட வேண்டும்

“முதலாளிகளைப்பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? சீனாவைப்போல் செய்துவிட்டால் போகிறது” என்று சில வாலிபர்கள் சொல்லுகிறார்கள். சீனாவில் என்ன நிகழப் போகிறது என்று இனித்தான் நாம் பார்க்க வேண்டும். புரட்சி நடந்த ருஷியாவில், அளவற்ற தியாகங்கள் செய்த பிறகுதான் தொழிற்சாலைகள் ஏற்பட்டு, விவசாயமும் சிறப்புற்றது.

நம் தேசத்தின் செல்வத்தை ஏன் சமமாகப் பங்கிட்டு மக்கள் அனைவருக்கும் வழங்கலாகாது என்று கேட்கிறீர்கள்? பங்கிட்டு வழங்க நம்மிடம் என்ன இருக்கிறது? எவரோ சில செல்வர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய செல்வமெல்லாம் அமெரிக்கரின் செல்வத்துக்கு உறை போடக் காணாது. நம் நாட்டில் உள்ள அற்பச் செல்வத்தையெல்லாம் பங்கிட்டாலும், நம் மக்களின் வறுமையில் பெரிய மாறுதல் ஏற்பட்டு விடாது.

இப்போது நமக்கு வேண்டியது புரட்சியல்ல; புனர் நிர்மாணமே. அடுத்த ஐந்து வருஷத்திலுந்தான் நம் நாடு உருவாக வேண்டும். அதற்குச் சகல மக்களும் உழைக்க வேண்டும். பரஸ்பரம் அன்பு வைத்தால் அப்படி உழைக்க முடியும்; பலவந்தத்தாலோ, பகைமையாலோ முடியாது.

—ஸர்தார் படேல்

March, '51 Regd. No. M. 4975

மஞ்சரி

விக்ருதி — பங்குனி

சீனாமீது நிர்ப்பந்தம் பலிக்குமா? . . . . . நியூ யார்க் டைம்ஸ் 1
பரிதி மாநகர் . . . . ரா. ஸ்ரீ. தேசிகன் 5
கார்ட்டூன் கதம்பம் 10
உவமைக் கதைகள் 12
இந்திய சரித்திரத்தில் யானை . . . . ஓரியெண்ட் 13
வழி வழி வந்த வசனநடை: நூல்களில் வேற்றுமை 19
கண்டதைக் குறிக்கும் பழக்கம் . . . . ப்ரீ இந்தியா 21
வாசனையின் வசிய சக்தி . . . . இந்தியா 25
விவேகானந்தர் : வாழ்வும் வாக்கும் 29
முனை உடைந்த கத்தி . . . . இந்தியன் ரெவ்யூ 32
சிகரெட் கொள்ளி 37
பாபுராவ் பதில் சொல்லுகிறார் 38
ஸோவியத் செல்வாக்கு (படம்) 40
புதுமையான கல்லூரி . . . . . பிரிட்டிஷ் இன்பர்மேஷன் 41
கூனியின் சூழ்ச்சி 44
குழந்தைகள் குறும்பு 49
உபவாசத்தின் அவசியம் . . . . ப்ரக்ருதி 51
பாடகர் பெருந்தன்மை . . . . யுகாந்தர் 53
பெரியோரும் மாணுக்கரும் (படம்) . . . . . சங்கர்ஸ் வீக்லி 56
கஞ்சத்துப் பழங் குடிகள் 58
க்விஸ் 61
பசு பால் சொரிந்த விக்கிரகம் . . . . ப்ரபாஸி 63
கோடை மழை (சிறு கதை) . . . . வி. ஸ. காண்டேகர் 66
பாரிஸ் கூனன் (நாவல் சுருக்கம்) . . . . . . விக்டர் ஹ்யூகோ 73